குடும்பமே குடும்பம்!

இல்வாழ்விற்கு நல்லாலோசனைகள்



லில்லியன்
ஸ்டான்லி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

குடும்பமே குடும்பம்!

Dr. Mrs. லில்லியன் ஸ்டான்லி, MBBS, DCH,

மருத்துவ மிஷனரி

வெளியிடுவோர்:

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

8 சர்ச் காலனி, வேலூர் 632 006

தொலைபேசி : 0416-2242943, 2248943

<bym@sancharnet.in>

www.blessingyouthmission.org

JOLLY FAMILY (Tamil)

First Edition	:	February 1998
Second Edition	:	January 1999
Third Edition	:	July 2000
Fourth Edition	:	February 2006
This Edition	:	April 2008

Printed at :

Bapuji Printers
5 Kurban Ali Street
Woods Road
Chennai 600 002.

உள்ளே...

துவக்கவுரை

கடைசிக் காலத்தின் ஓர் அடையாளம் குடும்ப அமைப்பின் சீர்குலைவு. வேதத்தில் 2 தீமோத்தேயு 3:1-6இலுள்ள பட்டியலின் பல பாவங்கள் குடும்பத்தைக் கொலை செய்பவை. ஆண்கள், பெண்கள் மற்றும் பிள்ளைகள் தங்கள் துணைவரையோ, பெற்றோரையோ, பிள்ளைகளையோ, உடன் பிறந்தோரையோ அல்ல, தங்களைத் தாங்களே நேசிக்கும் சுயநலக்காரராயிருக்கின்றனர். தன்னலமே வீட்டுச் சட்டமாகிவிட்டது. முதலையானது கறித்துண்டை விழுங்குவதுபோல் பண ஆசை ஏராளமான குடும்பங்களை விழுங்கிவிட்டது. மரவேர்கள் அடித்தளத்தைப் பெயர்த்து சுவரில் விரிசலை உண்டாக்குவதுபோல் கணவனுக்கும் மனைவிக்குமிடையே பணம் நுழைந்து அவர்களைத் தனித்தனியே வாழச் செய்கிறது; இதுவே பல சமயங்களில் பெற்றோர் தம் பிள்ளைகளை விடுதியில் தள்ளிவிடவும் செய்கிறது. கீழ்ப்படியாமையே இயற்கையாகி விட்டதால் பெற்றோர் விழிக்கின்றனர். குடும்ப வாழ்க்கையில் ஒழுக்கக் கேடுகளைக் குறித்து எழுதத் தேவையில்லை. மன்னிப் ''பூ'' வினால் கமழவேண்டிய குடும்பங்கள் மன்னியா ''மை'' யினால் கருகருத் திருக்கின்றன. குடும்ப வாழ்வின் பலபகுதிகளில் கட்டுப்பாடு இல்லாமை அதே அச்சில் பிள்ளைகளை வார்த்து எடுத்திருக்கிறது. பிள்ளைச் செல்வங்களிடம் பெற்றோர் மிருகம்போல் நடந்துகொள்கின்றனர். பிள்ளைகளுக்கு இழைக்கும் கொடுமை பல நாடுகளில் தலையங்கம் வகிக்கிறது. மழலைச் செல்வங்கள் அனுபவிக்கும் கொடுமைகளை வாசிக்கும் கண்களின் இமைகள் கண்ணீருக்கு அணைகட்டத் திட மற்றவை. இயல்பான அன்பு காற்றில் புகைபோல் மறைந்து வருகிறது. வேதத்திற்குப் புறம்பான காரணங்களுக்காய்த் தங்கள் திருமண ஒப்பந் தத்தை முறிப்பவர்களேயன்றித் துரோகிகள் வேறு யார்? ஆம், குடும்பங் களில் தேவப் பிரியரல்ல, சுகபோகப் பிரியர் நிறைந்துவிட்டனர். இன்றையக் குடும்பங்களில் பெரும்பாலானோர் இப்படிப்பட்டவர்களே.

நம்முடைய குடும்பங்களில் நாம் நாட்டம் காட்டாவிட்டால் அவற்றை நாட்டுவது சாத்தியமன்று. குடும்பங்களில் இடி விழாமல் காப்பாற்றவே இடி தாங்கியாக இந்நூல் அர்ப்பணம்.

குடும்பத்தை மறக்க, குடும்பத்திற்கு மரக்க பிசாசு பல பொய்களை ஊதுகிறான்: துணைவரோடு ஒத்துப்போக முடியாவிட்டால் மணமுறிவு செய்வது சரிதான்; குடும்ப வாழ்வு வரவர சுவாரஸ்யமற்றதாகி ஒன்று மில்லாமல்தான் போய்விடும்; பணமே பிரதானம்; எப்படியோ கொஞ்சம் கூடக் காசு கிடைக்குமானால் கணவனும் மனைவியும், பெற்றோரும் பிள்ளைகளும் ஒன்றாக இருக்கவேண்டுமென்பதில்லை; ஒருவர் சம் பாத்தியத்தில் குடும்பம் நடத்துவது கூடாத காரியம்; அந்தஸ்துக்கேற்ற பொருட்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியம்; வேறொருவரோடு கொஞ்சம் சல்லாபம் செய்வது அவ்வளவு பெரிய குற்றமல்ல—துணைவருக்குத் தெரியாமல் இருந்தால் சரி...

ஆணுக்குப் பெண் மட்டம்; ஆணுக்குத் தேவன் கூடுதல் பலனளிப்பார்; அதே பலனைப் பெறப் பெண்ணும் ஆண் செய்யும் வேலைகளைச் செய்யவேண்டும்; வீட்டைப் பார்த்துக் குடும்பத்தைக் கவனித்துக்கொண் டிருக்கும் பெண் தன் நேரத்தை வீணடித்துக்கொண்டிருக்கிறாள்...

பிள்ளையைக் கவனிக்க ஆள் வைத்துவிட்டு அல்லது பால்வாடியில் விட்டுச் செல்வதினால் ஒன்றுமில்லை; வேலைக்காரிகளால் வளர்க்கப் பட்ட பிள்ளைகள் பலர் தேறிவிடுகிறார்கள்; எனவே பிள்ளைகள் கெட்டுப் போனால் அது பெற்றோர் கவனியாமல் விட்டதினால் என்று சொல்லு வதற்கில்லை; செல்வந்தரின் பிள்ளைகள் அனுபவிப்பவை நம் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படாவிடில் அவர்களது மனநிலை பாதிக்கப் படும்; பிள்ளைகளுககு எல்லா வசதிகளும் கொடுக்கப்பட வேண்டும்;... பொய்கள், பொய்கள், இன்னும் இப்படிப் பல பச்சைப் பொய்கள்!

நம்மில் பலரும் நமது குழந்தைகளை ஒரு கத்தைச் சம்பளத்திற்கு, சுயகவுரவத்திற்கு, சாதனைக்கு விற்றுக்கொண்டிருக்கிறோம். அதற்குரிய கொடிய கிரயத்தை இத்தலைமுறைச் சிறுவரே செலுத்திக்கொண் டிருக்கின்றனர். உண்மைக்கு விழித்துக்கொண்டு முதன்மையான வைகளுக்கு முதலிடம் கொடுக்கக் காலமாயிற்று. அப்படியானால் பிள்ளையா வேலையா எனத் தீர்மானிக்கவேண்டும். அப்படியானால் உலாவச் செல்ல, குடும்பமாய்ப் பிக்னிக் போக, பெற்றோர்-ஆசிரியர் கூடுகைகளில் கலந்துகொள்ள, பிள்ளையின் பட்டமேற்பு விழாவில் பங்கேற்க நேரமெடுக்கவும்... நம்மோடு போட்டியிடுபவர் நம்மை முந்திச் செல்ல இடமளிக்கவும் வேண்டும்!

குடும்பமே குடும்பம், சிக்கல்களில்லாத குடும்பமல்ல, சிக்கல் களைச் சமாளிக்கக் கற்றுக்கொண்ட குடும்பம். குடும்பமே குடும்பமாய்த் தழைத்தோங்க வாழ்த்துக்கள்!

1

குடும்பமே குடும்பம் !

ஒருவரோடொருவர் சண்டையிடாமல் ஒத்துழைத்து அருமையாய்ப் பணிபுரியும் அப்பழுக்கற்ற குடும்பம் ஒன்றை வேதத்தின் முதல் அத்தியாயத்திலேயே சந்திக்கிறோம் — வானமண்டலக் குடும்பமாகிய சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்தான் அது. குடும்பத்தின் திருப்பணி குறித்து அது நமக்கு அதிகமே போதிக்கிறது. யோசேப்பின் கனா நினைவிற்கு வருகிறதா?

நம்மில் பலரது குடும்ப வாழ்க்கை கடவுளை அறியாதவரது குடும்ப வாழ்க்கையைவிட அதிக வித்தியாசம் என்று சொல்வதற்கில்லையே, ஏன்? வெற்றியுள்ள குடும்ப வாழ்வின் முதல் இரகசியம் அங்கத்தினர் யாவரும் சரிசமம் என்று புரிந்து கொள்வதில்தான் உள்ளது எனலாம். ஒவ்வொருவரது பணியும் வேறுபட்டாலும் தேவனுக்கு முன் உடலானது கழுத்தைப்போலவும் கழுத்தானது தலையைப்போலவும் முக்கியமானது. ''பகலில் ஆளச் **சூரியனைப் படைத்தவரைத் துதியுங்கள்; அவர்** கிருபை என்றுமுள்ளது. இரவில் ஆளச் **சந்திரனையும் நட்சத்திரங்களையும் படைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது''** என்று தாவீது கானம் பாடுகிறான் (சங் 136:8,9). நீங்கள் கணவனானால் அது தேவனது கிருபையினாலேயே; நீங்கள் மனைவியானால், மகளானால், மகனானால் அதுவும் தேவனது இரக்கத்தினாலேயே. எனவே நாம் ஒருவரையொருவர் மதித்து குடும்பமாய்க் கடவுளை மகிமைப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். **''சூரிய சந்திரரே, அவரைத் துதியுங்கள்; பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே அவரைத் துதியுங்கள்''** (148:3).

1 கொரிந்தியர் 15:41ஐப் புரிந்துகொள்வோமானால் நலக்கேடான போட்டிகள், பொறாமைகளைத் தவிர்ப்போம்: **''சூரியனுடைய** மகிமையும் வேறே, **சந்திரனுடைய** மகிமையும் வேறே, **நட்சத்திரங்க**

தலைமுறைகளில் பிள்ளைகள் வானத்து நட்சத்திரங்களாய்ப் பெருகும் போது (ஆதி 15:5) அவர்கள் பகலுக்கும் இரவுக்கும், ஒளிக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்குவர்.

வேதத்தைப் போதிப்பதின் பொறுப்பைப் பெற்றோர் சபையின் மேலும் ஓய்வுநாள் பள்ளியின் மேலும் எறிந்துவிட்டு மதியம் தூங்கு கின்றனர். ஆனால் லோவிசாள் ஐனிக்கேயாளுக்கும், ஐனிக்கேயாள் தீமோத்தேயுவுக்கும் பரிசுத்த வேத எழுத்துக்களைப் பிள்ளைப் பருவத்தி லிருந்தே கற்பித்ததினாலல்லவோ அவன் இரட்சிக்கப்பட்டான். இவ் வுலகத்திற்குப் பகலுக்கும் இரவுக்கும், ஒளிக்கும் இருளுக்குமுள்ள வித்தியாசத்தைக் காட்டும் பொறுப்பு பெற்றோரதே.

2. அடையாளங்களாய் இருக்க (ஆதி 1:14)

ஏசாயா தன் குடும்பத்தைக் குறித்துப் பெருமிதம் கொள்வதைக் கேளுங்கள்: ''இதோ, நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்'' (ஏசா 8:18). அமிழ்ந்து கொண்டிருக்கும் இப்பூவுலகிற்குக் குடும்ப வாழ்வே மாபெரும் அடையாளமாகும். **''சூரியனிலும், சந்திரனிலும், நட்சத்திரங்களிலும்** அடையாளங்கள் தோன்றும்'' (லூக் 21:25). குடும்பக் கோட்பாடுகள் சிதறிக்கொண்டிருக்குமோர் ஐரோப்பிய நாட்டில் மணமுறிவு சதவிகிதம் மிகக் குறைவு எனச் சொல்லக் கேட் டோம். ஆ என்று நாங்கள் வாய் திறந்து மூடுமுன், ''ஏனெனில் இங்கு யாரும் மணமுடிப்பதில்லை, மனம்போன போக்கில் வாழ்வர்'' என்று எடுத்த மூச்சில் சொல்லி முடித்தனர்!

விசுவாசிகளின் வாழ்வு அவிசுவாசிகளின் வாழ்வைப்போல் ததிங்கிணத்தோம் போட்டால் நாம் எப்படி அடையாளங்களாக முடியும்? அவர்கள் நம் குடும்பங்களைப் பார்த்து மூக்கில் விரல் வைக்க வேண்டாமோ? அதுவல்லவோ பரிசுத்த குடும்பத்தின் பணி!

முதல் பொறுப்பு கணவனதே. அவனே குடும்பத் தலைவன். அவன் காலையில் மந்தாரமில்லாமல் உதித்து, விடியற்கால வெளிச்சத்தை வீசும் சூரியனைப் போலவும், ''வல்லமையோடே உதிக்கிற சூரியனைப் போலவும்'' இருக்கவேண்டும் (2 சாமு 23:3,4; நியா 5:31). அவனே மந்தாரமான குழப்பங்களுக்குத் தீர்வு காட்டுகிறவனாகவும், பயம், சிக்கல்களில் வல்லமையான தூணாகவும் நிற்கவேண்டும். சூரியன் கடும் வெயிலுடன் உதித்து, புல்லை உலர்த்தும்போது, அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்துபோகத்தக்கதாய் நடந்து கொள்ளலாமோ? (யாக் 1:11). கணவனும், தகப்பனுமானவன் தனது குடும்பத்தாரது வாழ்வை நரகமாக்கிவிடும் கொடுங்கோல் அரசனாக

அல்ல, பரிவுடன் நடத்தும் தலைவனாயிருக்கவேண்டும். ''தாடையி லடித்து முன்னே தள்ளுவதல்ல தலைமை; அது தாக்குதல்'' என்றார் அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர். மனைவியை அடிப்பதும் பிள்ளை களைத் துன்புறுத்துவதும் கிறிஸ்தவ வீடுகளிலும் சகஜமாகிவிட்டது. எரிக்கும் வெயிலானால் புல் வாடி பூ உதிருமல்லோ! முரண்பாடுகள் மறைந்து விடா; ஆனால் உறவைப் பாதிக்காவண்ணம் அவற்றைச் சரி செய்யக் கற்றுக்கொள்ளவேண்டும். மட்டுமல்ல, வளர்பிறை தேய்பிறை போல் பெண்களின் மனநிலையும் ஊசலாடும் தன்மையுள்ளது. கணவன் அதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

அன்பே மந்திரச் சொல். அன்பு வெடிகுண்டையும் அணைத்து விடும் சக்தி வாய்ந்தது. அன்பைப் பயிற்சிக்கத் துவங்கினால் சிக்கல்கள் பறந்துபோய்க் குடும்பம் மறுரூபமாகும். அன்பாய்ப் பாருங்கள், அன் பாய்ப் பேசுங்கள், அன்பாய்த் தொடுங்கள், அன்பாய் எதையும் செய்யுங்கள். அதுவே சூரியன் எரித்தலுக்கும் பிரகாசிப்பதற்குமுள்ள வேறுபாடு.

பெரும்பாலான கணவர் எப்போதுமே ஜெயிக்க விரும்புகின்றனர். மனைவி எப்போதாவது எதிலாவது ஜெயித்துவிடக்கூடாது, ரோசம் பொத்துக்கொண்டு வந்துவிடும். ''சூரியன் தன் அஸ்தமனத்தை அறி யும்'' (சங் 104:19). மனைவி பிரகாசிக்கும்போது ஞானமுள்ள கணவன் அவளைத் தலையில் தட்டாமல் அவளைத் தூக்கிவிட்டு ஜெயிக்கச் செய்வான். ''சபாஷ்! பிரமாதம்! ஒரு ஐடியா கொடுத்தாயே அது சூப்பர்! கெட்டிக்காரி! அந்த விஷயத்தில் என் மனைவி என்னைவிட மேல்!'' போன்ற பாராட்டுச் சொற்களைத் தாராளமாய்ப் பயன்படுத்துவான். கணவன் வீட்டின் இராஜாவானால் கிரீடத்தைத் தலையில் சுமப்பதல்லவோ அவனுக்கு மகிமை? (நீதி 12:4; 1 கொரி 11:7). மகுடமற்ற மன்னனுக்கு மதிப்பென்ன?

இது பெண்களின் வளர்பிறை காலம். வெண்ணிலவு வளர்ந்துவர வாழ்த்துரைகள் தேவையில்லை என்பார்கள். உற்சாகமூட்டும் வார்த்தை களை எதிர்பார்த்திருந்தால், ஒரு பெண் முன்னேறவே மாட்டாள். அவள் எதிர்நீச்சல்தான் போடவேண்டும். ஆணொருவன் முகத்தைக் காட்டின வுடனே ஏற்றுக்கொள்ளப்படுவான். பெண்ணோ தனக்குரிய நியாயமான இடம் கிடைப்பதற்கே பலமுறை தள்ளிவிடப்பட்டுப் பொறுமை யோடும் விடாமுயற்சியோடும் தன் தகுதியை நிரூபிக்கவேண்டும். பெண்ணானவள் பழைய ஏற்பாட்டில் வாழ்ந்தால் குறைவெண்ணத்தில் மூழ்கிவிடுவாள். அவள் சிறகடித்துப் புதிய ஏற்பாட்டிற்குப் பறந்து வரவேண்டும்.

பெண்ணின் புதிய ஏற்பாட்டு ரூபம் வெளிப்படுத்தல் 12:1-7இல் வர்ணந்தீர்க்கப்பட்டுள்ளது. ராணியாகச் சந்திரனின்மேல் சூரியனைத்

தரித்தவளாகப், பிள்ளைகளைக் கிரீடமாகச் சூடி நிற்கிறாள். பழைய ஏற்பாட்டில் பெண் வீழ்ச்சியை அனுபவித்தாள்; புதிய ஏற்பாட்டில் ராணியாக நிற்கிறாள். ப.ஏ.இல் பிள்ளைப்பேறு தண்டனை; பு.ஏ.இல் அது பெண்ணுக்கு இரட்சிப்பு (1 தீமோ 2:15). ப.ஏ.இல் சாத்தானால் ஏமாற்றப்பட்டாள்; பு.ஏ.இல் சாத்தான் மேல் வெற்றிகொள்கிறாள். ப.ஏ.இல் கணவனால் ஆளப்பட்டாள்; பு.ஏ.இல் கணவனால் நேசிக்கப் பட்டுத் தாங்கப்பட்டு நடத்தப்படுகிறாள். ப.ஏ.இல் தன் சுதந்திரத்தை இழந்தாள்; பு.ஏ.இல் பறப்பதற்குப் பெருங்கழுகின் செட்டைகளைப் பெறுகிறாள் (வச 14). ப.ஏ.இல் ஞானத்தை நாடி அதை இழந்தாள்; பு.ஏ.இல் கிறிஸ்துவே அவளது ஞானமானதுடன் சாவாமை தரும் மரத்தின் கனியைப் புசிக்கப்பெறுகிறாள். ப.ஏ.இல் மனுக்குலத்திற்குப் பாவத்தைப் பரிசளித்தவள் பு.ஏ.இல் இரட்சிப்பைப் பரிசளிக்கிறாள் (வச 5). ப.ஏ.இல் பாடுகளுக்காகவே பிறந்தவள்போல் வாழ்ந்தாள்; பு.ஏ.இல் கழுகின் நிலைக்கு உயர்த்தப்படுகிறாள். ப.ஏ.இல் எல்லாமே அவளுக்கு விரோதமாய்ச் செயல்பட்டது போலிருந்தாலும் பு.ஏ.இல் எல்லாமே அவளுக்கு உதவுகின்றன (வச 16). ஆகவே பெண்ணானவள் கடந்த காலத்திற்கு முதுகு காட்டி முன்னோக்கி நடைபோடவேண்டும். பெண்களைக் கர்த்தர் இந்நாட்களில் நடத்துவதை ஆண்கள் புரிந்துகொண்டு வீட்டில் அளவுக்கு மீறி அவர்களை விரட்டாமல் தேவனுக்காய்ப் பிரகாசிக்க அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

சூரியனைவிட மிகப் பெரிய நட்சத்திரங்கள் உண்டென்று விஞ் ஞானிகள் சொல்கின்றனர். பெற்றோரை எதிர்க்க சக்தியற்றவர்கள் என்ற ஒரே காரணத்தினால் பல இல்லங்களில் பிள்ளைகள் ஒரு பொருட் டாகவே மதிக்கப்படுவதில்லை. ஒரு நாள் நம்முடைய பிள்ளைகள் நம்மைவிடப் பெரியவர்களாகலாம் என்பதைப் புரிந்துகொண்டால் அவர்களை மதிப்பது சுலபமாகும். முக்கியமாய் வாலிபப்பிள்ளைகள் இருந்தால் அவர்களது வாழ்க்கை குறித்த பெரிய தீர்மானங்களை அவர்களைக் கலந்தாலோசிக்காமல் எடுக்கவே கூடாது. நம்மைப் போலவே அவர்கள் எல்லாவற்றையும் செய்ய எதிர்பாராமல் அவர்களது தாலந்துகளை வளர்க்க இடமளிக்கவேண்டும். ''நட்சத்திரங்களின் உயரத்தைப் பாரும்; அவைகள் எத்தனை உயரமாய் இருக்கின்றன!'' (யோபு 22:12).

பிள்ளைகளே, உங்கள் சாட்சி வீட்டில் துவங்குகிறது. உடன் பிறப்புகள், பெற்றோர் மற்றும் விருந்தினருடன் பணிவோடும் பண்போடும் பழகக் கற்றுக்கொள்ளுங்கள். மார்க்கம் தப்பி அலைகிற நட்சத்திரங்களாகிவிடாதீர்கள் (யூதா 13). வீட்டில் பாதுகாவலுண்டு. தேவன் உங்களுக்கென்று ஒரு பாதையை நியமித்திருக்கிறார். ஒவ் வொரு அடி எடுத்து வைக்கும்போதும் அவரது வழிநடத்துதலை நாடி

வையுங்கள். வீடு சோதனைக்களமாகிய சிறு தோட்டம். பிற்காலத்தில் பெருங்காரியங்களைக் கர்த்தர் உங்கள் வசம் ஒப்புவிக்கும்படியாக இப்போது வீட்டின் சிறு காரியங்களில் உண்மையாயிருங்கள். அதிகாலையில் எழுந்திருத்தல், சுறுசுறுப்பாயிருத்தல், ஒழுங்கான அனுதினத் தியானம், உங்கள் அறையைச் சுத்தமாக வைத்தல், தினசரி வீட்டு வேலைகளில் அம்மா அப்பாவிற்கு உதவி செய்தல், நன்றியோடிருத்தல், ஒழுங்கு, இவையெல்லாம் ''சிறு காரியத்தில்'' உண்மையாயிருத்தலில் ஒரு பகுதியாம்.

3. காலங்களையும், நாட்களையும், ஆண்டுகளையும் குறிக்க (ஆதி 1:14)

முக்கியமாய்க் கடைசிக் காலங்கள்! கடைசி நாட்களில் குடும்பம் உலகத்திற்கு முரண்பாடாய்த் தோற்றமளிக்கும். ''கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? என்பார்கள்'' என்கிறார் பேதுரு (2 பேது 3:3). பவுல் தீமோத்தேயுவுக்கு: கடைசி நாட்களில் மனிதர் தற்பிரியராயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப் படியாதவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும் இருப்பார்கள் என்றெழுதுகிறார் (2 தீமோ 3:1-3). முதல் கடிதத்தில்: பிற்காலத்தில் வஞ்சகர் விவாகம் பண்ணாதிருக்கக் கட்டளையிடுவார்கள் என்கிறார் (4:1-4). ஒருபுறம் கிறிஸ்துவின் வருகையையே கேள்விகேட்டு மனம்போனபோக்கில் வாழ்கிறவர்கள். மறுபுறம் கிறிஸ்து சீக்கிரம் வருகிறார், கலியாணம் பண்ணாதீர்கள் எனப் போதிக்கும் கும்பல். இச்சை, பலமணம், மணம்புரியாமலே ஒன்றாய் வாழ்தல், பரி சோதனைத் திருமணம், மனைவிகளை மாற்றிக்கொள்ளுதல், திறந்த திருமணம், இவ்விதச் சேற்றில் முதல் கூட்டம் உழலுகிறது. அடுத்தக் கூட்டம் விரதத்துவத்தைப் போதித்து, திருமணமானவர் அண்ணன் தங்கை போல் வாழவேண்டுமென்றும், ஆராதனைக்கு வருமுன் பாலுறவு கூடாதென்றும், கணவன் மனைவி தனித்தனியே வர வேண்டுமென்றும் போதித்து பாலுறவு அசுத்தமானது என்ற எண்ணத்தை உள்ளங்களில் விதைக்கிறது. இந்நிலையில் கிறிஸ்தவக் குடும்பங்களின் சாட்சி என்ன?

இருதலைக்கொள்ளி எறும்புகளாய் நிற்கும் மக்கள் கூட்டத்திற்குப் பக்தியுள்ள குடும்பம் இக்கடைசி நாட்களில் பாலுறவு வாழ்வின் மூன்று அம்சங்களைப் போதிக்கவேண்டும்.

அ) மணவாழ்வுக்கு முன் பாலுறவு

திருமணத்திற்குமுன் பாலுறவு கொள்வது பாவம்; உலகம் போகிற போக்கில் போகமுடியாதென்று திட்டமாய்ப் பிள்ளைகள் போதிக்கப்

படவேண்டும். பாலுறவில் ஊறிப்போயிருக்கும் ஊசிப்போன இவ்வுலகில் வாழும் நம் பிள்ளைகள் சோதனைகளைச் சந்திக்கும்போது ''முடியாது'' என்று நிமிர்ந்து நிற்க முன்னமே கற்பிக்கப்படவேண்டும்.

ஆ) மணவாழ்வில் பாலுறவு

ஒன்று கொரிந்தியர் ஏழாம் அத்தியாயத்தை வாசித்துவிட்டுக் கொரிந்தியர் பவுலுக்கு என்ன கேட்டு எழுதியிருப்பார்கள் என்ற வினாக்களை எழுதுவீர்களானால் உங்கள் பாலுறவு வாழ்வின் பல கேள்விகளுக்குப் பதில் பெறுவீர்கள். இப்படிப்பட்ட தெளிவான உபதேசம் கிறிஸ்தவரல்லாதோருக்குக் கிடையாது. வேதத்திலிருந்து பாலுறவு ஒழுங்குகளைப் போதிக்கலாமே.

இ) மணவாழ்வுக்கு வெளியே பாலுறவு

நான் வேலை செய்த ஒரு மருத்துவமனையில் கிறிஸ்தவ மருத்துவரொருவர் வேறொருவர் மனைவியை அழைத்துச் சென்று விட்டார். அப்பொழுது நான் கிறிஸ்தவரல்லாத மருத்துவ நண்பரொருவரை ஆண்டவரிடம் நடத்திக்கொண்டிருந்ததால் அவமானமடைந்தேன். நாம் முன்மாதிரிகளாயிருக்கிறோமா? உங்கள் மனைவி உடன்படிக்கையின் மனைவி; அவளை ஏமாற்றாதீர்கள் (மல் 2:14). உங்கள் கணவர் உடன்படிக்கையின் கணவர்; அதை மறந்து போகாதீர்கள் (நீதி 2:17). சிம்சோன் என்றால் குட்டிச் சூரியன் என்று பொருள்படும். எத்தனைச் சுலபமாய் ஒரு குட்டிச் சூரியன் அணைந்து போனது! ஒரு சூரியனுக்கு ஒரு சந்திரனைத்தானே படைத்தார்!

4. ஒளி தர (ஆதி 1:15,17)

''சூரியனைப் பகல் வெளிச்சத்திற்காகவும் சந்திர நட்சத்திர நியமங்களை இராவெளிச்சத்திற்காகவும்'' கட்டளையிட்டார் (எரே 31:35). சூரியனும் சந்திர நட்சத்திரங்களும் வாயைத் திறப்பதில்லை. ஆனால் ஆகாய விரிவும், வானமும், பகலும், இரவும் உலகின் கடைசி எல்லைவரை தேவ மகிமையை அறிவிக்கின்றனவாம் (சங் 19:1-4). மக்கள் காதால் கேட்பதற்குமுன் கண்ணால் பார்க்கிறார்கள். ''இருளில் இருக்கும் மக்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்'' (மத் 4:15). உலகின் ஒளியாகிய இயேசு தம் சீடரே உலகின் ஒளி என்றார். காரிருள் சூழ்ந்த உலகில் ஆபத்திற்குத் தப்பியோடும் வாயிலை மக்களுக்குக் காட்டும் விளக்குகள் நம் கையிலல்லோ உள்ளன? மனிதர் நமது நற்செயல்களைக் கண்டு பிதாவை மகிமைப்படுத்தும்படி நமது ஒளி அவர்கள் முன் வீசட்டும். பூமியின் கோடிவரை அவரது இரட்சிப்பாயிருக்கும்படி நம்மை மக்களினங்களுக்கு ஒளியாக வைப்பேன் என்றாரே (ஏசா 49:6). நாம் ஒளி தரவேண்டியது உலகுக்கு; ஆயிரம் விளக்குகள்

எரியும் சபைக்கல்ல. ஆகவே ஆலயக் காம்பவுண்டை விட்டு நாகத்தின் வாசலருகே போய்க் குடியேறுவோம்.

வீட்டிற்கு வரும் யாவருக்கும் ஒளி கொடுங்கள் (லூக் 11:33). யோவான் ஸ்நானகன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான். எமது லக்னோ மிஷனரிகள் லலிதா & மதன்சிங்கின் பிள்ளைகள் (வ 10 & வ 8) கிறிஸ்தவரல்லாத பிள்ளைகளுக்காய்ப் பாரங்கொண்டு அவர் களுக்கு ஒரு கிறிஸ்து ஜெயந்தி விழா நடத்தப் பெற்றோரை வேண்டினர். வீடு வீடாய்ச் சென்று சுமார் 100 பிள்ளைகளைச் சேர்த்தனர். விழாவின் முடிவில் அவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப் பட்டது. எமது மிஷனரிப் பிள்ளைகள் ட்யூக், சோல்பிரேக்கன், தேவராஜ், சாமுவேல், சோல்வின், சுவர்ணராஜ் இன்று ஆத்தும ஆதாயகராய்த் திகழுகின்றனர். நமது பிள்ளைகள் நட்சத்திரங்களாய் ஒளி வீசுவது எத்தனை ஆனந்தம் (தானி 12:3)! ஞானிகளை இயேசுவிடம் நடத்திச் சென்றதும் ஒரு நட்சத்திரந்தானே?

5. பகலையும் இரவையும் ஆண்டுகொள்ள (ஆதி 1:18)

பிரசங்கி எச்சரிக்கிறான்: ''வெளிச்சம் இன்பமும் சூரியனைக் காண்பது கண்களுக்குப் பிரியமுமாமே. மனிதன் அனேக வருடங்கள் வாழ்ந்து அவைகளிலெல்லாம் மகிழ்ச்சியாயிருந்தாலும், அவன் இருளின் நாட்களையும் நினைக்கவேண்டும்; அவைகள் அனேகமாயிருக்கும்'' (பிர 11:7,8). ஒளிமய நாட்களில் உற்சாகமாயிருப்பதில் வித்தை என்ன? இருளில் கீதம் பாடுவதல்லவோ விசுவாசம்! எந்தக் குடும்பமும் மாறி மாறிப் பகலையும் இரவையும் அனுபவிப்பது நிச்சயம். சாதகச் சிந்தையோடு இருளைச் சந்தித்தால் இரவும் நம்மைச் சுற்றி ஒளியாகும் (சங் 139:11). ஒவ்வொரு இக்கட்டிலும் சாதகமான தருணத்தைக் கண்டுபிடிப்போமானால் நமது இருளும் ஒளியாகும்; உலகை இருள் கவ்வும்போது நமது வீட்டில் ஒளி வீசும் (யாத் 10:23). கூப்பிடு தூரத்தில் இருள் தாண்டவமாடும்போது நமது வீட்டில் மகிழ்ச்சியும் களிப்பும் நடனமாடும் (எஸ்தர் 8:16).

துக்கத்தில் மூழ்கும்போது விசுவாசக் கரங்களால் நீச்சலடியுங்கள். புயலுக்குப்பின் அமைதி, இருளுக்குப் பின் ஒளி. ஏனெனில் பகலும் நம் தேவனது, இரவும் நம் தேவனது (சங் 74:16). கும்மிருளையும் ஆண்டுகொள்ளுங்கள். நமக்கு நம்பிக்கையுண்டு. நாம் துன்பப் பட்டாலும் கைவிடப்படுவதில்லை; கீழே தள்ளப்பட்டாலும் மடிந்து போகிறதில்லை (2 கொரி 4:9).

குடும்பங்களை நாசமாக்க சாத்தான் விஷம் தோய்ந்த அம்புகளை எய்து காயப்படுத்திக்கொண்டிருக்கிறான். ஆனால் கணவன், மனைவி,

பிள்ளைகள் பக்தியாய் வாழத் தம்மை அர்ப்பணிப்பாரானால் தேவனே குடும்பங்களின் காயங்களை ஆற்றுவார்.

''கர்த்தர் தமது ஜனத்தின் முறிவைக் கட்டி, அதின் அடிக்காயத்தைக் குணமாக்கும் நாளிலே, சந்திரனுடைய வெளிச்சம் சூரியனுடைய வெளிச்சத்தைப் போலவும், சூரியனுடைய வெளிச்சம் ஏழத்தனையாய் ஏழு பகலின் வெளிச்சத்தைப்போலவும் இருக்கும்'' (ஏசா 30:26).

2

மனக்கோட்டைகளை மாளிகையாக்குங்கள் !

திருமணமெனும் சுந்தர மனக்கோட்டையில்தான் குடும்ப வாழ்வு துவங்குகிறது. ஆறு மாதம் அல்லது ஒரு வருடமாக அவனும் அவளும் சேர்ந்து அம்மாளிகையைக் கட்டி எழுப்புகின்றனர். உள்ளாக மன வேறுபாடுகள் இருந்தாலும் வெளியாக ஒத்துப்போகின்றனர். ஒரு வருக்கொருவர் பண்புடனும் மரியாதையுடனும் நடந்து ஒருவருக் கொருவர் கீழ்ப்படிந்தும் போகின்றனர். அன்பிற்கும் பாசத்திற்கும் அளவேயில்லை. சகிப்புத் தன்மையோ சரளம். தங்கள் மாளிகையை முடித்துத் தளவரிசையும் போட்டு முடிக்கின்றனர். தங்கள் கனவை எட்டி விட்டனர். தங்கள் மனக்கோட்டைக்குள் மனரம்மியமாய் வீற்றிருக் கின்றனர்.

இப்போது ஆபத்தான ஒரு திருப்பம் நிகழ்கிறது. இத்தனை நாட்களும் ஒருவருக்கொருவர் பண்பாடுள்ள பக்தர் போல நடித்தனர். புது துடைப்பம் நன்றாகத்தான் கூட்டும். அடுத்தவர் பழக்கப்பட்டவ ரான பின்பு இன்னும் நடித்துக் கொண்டேயிருக்க முடியாதல்லவா? நல்லவர் போல் பாசாங்கு செய்வது அவர்கள் நரம்புகளைத் தளரச் செய்கிறது. ஆகவே இயற்கையாக இயல்பாக நடந்து கொள்ள விரும்பி தம் நாடகத்தை நிறுத்துகின்றனர் — அவ்வளவுதான். நரகமே நடன மாடத் துவங்குகிறது! இருவரது இயல்பான குணங்களும் வெளிப்பட இருவரும் அதிர்ச்சியடைகின்றனர். குற்றச்சாட்டுகளும், வார்த்தைப் பரிமாற்றங்களும், வேறுபாடுகளும் பறக்கின்றன. இப்போதுதான் சரியான புரிந்துகொள்ளுதல் துவங்குகிறது. ஒருவர் அடுத்தவரது ஆள்தத்துவத்தைக் கண்டுகொள்ளத் துவங்கி அடுத்தவர் எப்படிப்பட்ட நபரெனப் புரியத் துவங்குகின்றனர். இந்தச் சவாலைச் சந்திக்கும் போதுதான் இளம் தம்பதியர் பல தவறுகளைச் செய்கின்றனர். இங்கே

தான் அவர்களது மாளிகை இடிந்து பொலபொலவென உதிரத் துவங்குகிறது.

தவறு ஒன்று

தவறான நபரை மணந்துவிட்டேன், இனி இவரோடு வாழவே முடியாது என முடிவு கட்டுவதுதான் இது. ஆகவே பேசுவதை நிறுத்துகிறீர்கள் அல்லது சண்டையைக் கூட்டுகிறீர்கள். சவாலைச் சந்திப்பதை விட்டு சலைத்துத் துப்புகிறீர்கள். அடுத்த நபரைப் புரிந்து, ஏற்றுக்கொண்டு, சமாளித்துப் போவதே சரியான மனப் பாங்காகும் (மத் 1:24).

தவறு இரண்டு

கணவன் எவ்வளவு எரிச்சல் அடைகிறானோ அவ்வளவு தன் மனைவிக்கு எரிச்சல் மூட்டுகிறான். மனைவியும் அப்படியே. உங்களைக் குற்றமற்றவராகக் கண்டு அடுத்தவரைப் பழி சாட்டுகிறீர்கள். அடுத்தவரிடம் எத்தனைக் குற்றங்கள் உண்டோ அத்தனை உங்களிடமும் உண்டு. "நான் நல்லவன், முன்னேற முயற்சிக்கிறேன். அவர் மோசம், முயற்சிப்பது இல்லை. தாங்கமுடியவில்லை" என்று நீங்கள் நினைக்கும்போது உங்கள் துணைவரும் அப்படியே நினைக்கிறார். அதை ஒழித்து, "என் குறைகள் என்ன? என் துணைவர் அதை எப்படிச் சகித்துப் போகிறார்?" எனச் சிந்திப்பது நலம் (கலா 6:3-5).

தவறு மூன்று

மனைவி கணவனது தோளைப் பிடித்துக்கொண்டு ஸ்கூட்டரில் போகும் தம்பதியரைப் பார்த்து, "எல்லோரும் நன்றாயிருக்கிறார்கள். நாங்கள் மட்டும் ஏன் இப்படி இருக்கிறோம்?" எனக் கவலைப் படுகிறீர்கள். "எல்லாக் கணவன்மாரும் நன்றாயிருக்கிறார்களே, என் கணவர் மட்டும் ஏன் இப்படியிருக்கிறார்?" என மனைவி நினைக்கிறாள். கணவனும் மனைவியைப் பற்றி அப்படியே நினைக்கிறான். சொல்லப் போனால் வீட்டுக்கு வீடு வாசற்படிதான். சிலர் சமாளிக்கின்றனர். சிலர் திணறுகின்றனர் (பிர 9:2).

தவறு நான்கு

தான் மாற முயற்சி எடுக்காமல் அடுத்தவர் நூற்றுக்கு நூறு மாற எதிர்பார்ப்பது. வெற்றிகரமான திருமணமென்பது நல்ல துணைவரை மணப்பது மட்டுமல்ல; நல்ல துணைவராய் இருப்பதும் கூடவே. துணைவரை மாற்றும் முயற்சியை நிறுத்தி உங்களை மாற்றும் முயற்சியில் முனைந்தால் சரியான திக்கில் செல்கிறீர்களெனச் சொல்லலாம் (பிலி 3:12).

தவறு ஐந்து

அவரது கெட்ட பண்புகளை வெறுப்பதை விட்டு அவரையே வெறுக்கத் துவங்குகிறீர்கள். ஒருவரை எவ்வளவுதான் நேசித்தாலும் அவரிடம் வெறுக்கத்தகு சில காரியங்கள் இல்லாமற் போவதில்லை. இரண்டையும் ஒன்று சேர்த்துப் பார்க்காதீர்கள்; பிரித்துப் பாருங்கள். அப்போது அன்பின் உறவைக் காப்பது சுலபமாகும் (மத் 11:19).

தவறு ஆறு

இது தனிச்சிறப்பை மறப்பதாகும். ஒவ்வொருவரும் வித்தியாச மானவர்கள். ''நீ ஏன் நாய்களை நேசிக்கக்கூடாது? ஏன் மற்றவர்களோடு சரளமாய்ப் பழகக் கூடாது?'' என்று கோபிப்பதில் அர்த்தமில்லை. அது அவர்கள் இரத்தத்திலேயே இல்லாதது. அவர்கள் உங்களைப்போல் ஒருபோதும் மாறமுடியாது (ரோ 14:1-3). சொல்லப்போனால் எதிர் மறைக் குணங்கள் இணைந்து செயல்படும். செலவாளியும் கருமியும் மோதி நிதானமாகிறார்கள். சரளமாய்ப் பழகுகிறவர் வெளியே செல்ல விரும்பும்போது வீட்டுக் குருவி படுக்கையில் படுத்து ஒரு புத்தகத்தை வாசிக்க விரும்புவார். இடித்துக்கொண்டாலும் இறுதியில் வெளிப் பறவை கொஞ்சம் வீட்டில் தங்கவும் வீட்டுக்குருவி கொஞ்சம் வெளியே சென்று பலரோடு பழகவும் படித்துக்கொள்கிறார்கள் (ரோ 15:7).

தவறு ஏழு

எடுத்த எடுப்பில் அற்புதங்கள் நிகழ்ந்துவிட எதிர்பார்ப்பதே அது. கீழ்ப்படியாத மனைவியையுடையவர் வேதத்தைக் காட்டி ஆலோசனை சொல்கிறார். மறுநாளும் மாற்றமில்லை. ஆனால் அவள், ''கீழ்ப்படியத் தீர்மானித்தேன்; கீழ்ப்படியத்தான் நினைத்தேன்; ஏன் கீழ்ப்படியாமற் போனேனென்றே தெரியவில்லையே. இன்னும் முயற்சிக்க வேண்டும்'' என நினைக்கிறாள். உங்கள் வெள்ளி விழாவிற்கு முன் அற்புதத்தை எதிர்பாராதீர்கள்! பொதுவாக மாற்றம், உணரக்கூடாத அளவு மெது வாகவே இருக்கும் (பிர 11:1).

உடனாளியா எதிராளியா?

உடனாளிகளாக வாழ்க்கை என்னும் டென்னிஸ் ஆட்டத்தைத் துவங்குகிறோம். இணைந்து ஆடுகிறோம். கூடுதல் ஸ்கோர் வாங்கு கிறோம். நாளடைவில் தூரத் தூர நகர்ந்து எதிராளிகளாகி பந்தை அடிப்பதை விட்டு ஒருவரையொருவர் அடிக்கத் துவங்குகிறோம். துணைவரைத் தோற்கடித்து முட்டாளாய்த் தோன்றச் செய்ய முயற்சிக் கிறோம் (1 கொரி 3:3). இதனால் உங்கள் ஸ்கோர் குறைந்து உங்கள் டீம் தோற்பதைக் காணாமல் போகிறீர்களே. நிறைய தப்பாட்டமும் ஆடுகிறீர்கள். அதிலும் மோசமென்னவென்றால் அம்பயர் இல்லாதது

மட்டுமல்ல, ஒரு குழந்தையும் கோர்ட்டில் உட்கார்ந்து போட்டி யாட்டத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பதே !

ஏன்? நடந்ததென்ன?

நமது கவனம் 'நீ' என்பதிலிருந்து 'நான்' என்றாகிவிட்டது. அடுத்த வருக்காகக் கவலைப்படுவதைவிட்டு இப்போது உங்களுக்காகவே கவலைப்படத் துவங்கிவிட்டீர்கள் (ரோ 15:1,2). தன்னலம் என்பது இயற்கை. இயற்கைச் சுபாவத்தை மீறி 'நீ' என்ற கவனத்தைக் காக்க வேண்டும். கணவன்மார் தம் மனைவியர் புரிந்துகொள்ளக் கூடிய விதத்திலே தம் அன்பை வெளிப்படுத்த தொடர்ந்து முயற்சி எடுக்க வேண்டும் (கொலோ 3:19). இந்த அன்பிற்குப் பிரதிபலிப்பாக மனைவி கீழ்ப்படிதலைக் கடைபிடிக்கவேண்டும் (ரோ 13:1-2). சண்டை களையும் தோல்விகளையும் பெரிதாக நினைத்துச் சோர்ந்துபோகாதீர்கள். விழுந்த இடத்திலே எழுந்து திரும்பவும் தொடருங்கள். ஒரு சோர்போ சலிப்போ துணைவரைப் பிரியப்படுத்தும் முயற்சியை விட்டுவிடச் செய்யக்கூடாது.

கிட்டப் போனால் முட்டப் பகை. ஒரே கூரைக்கடியில் ஒன்றாக வாழும்போது ஒருவரது குறைகளை ஒருவர் கண்டு வெறுக்கிறோம். நற்பண்புகளையும் ஒருவரையொருவர் மதிக்கவேண்டிய அவசியத் தையும் மறந்துபோகிறோம். நாம் வெறும் மனிதர், ஒவ்வொருவரிடத் திலும் குறைகள் உண்டு; ஒருவரையொருவர் மதிக்காவிடில் குடும்ப வாழ்வைக் கட்டியெழுப்ப முடியாது என்று நமக்கு நாமே அடிக்கடி நினைவூட்டிக் கொள்ளவேண்டும் (சங் 103:14).

ஒருவரையொருவர் குறைத்தல்

திருமணத்தன்று மணமகள் மணமகனை பூரணப் புருஷனாகக் காண்கிறாள். (1) பார்க்க வடிவு, நல்ல வளத்தி, பொறியியலர், பக்திமான், எப்போதும் சிரித்த முகம். (2) அடுத்த ஆண்டு தான் செய்வதையெல்லாம் அவர் புளுபுளுவென்று குற்றஞ்சாட்டிக் கொண்டேயிருக்கும் குணத்தைக் கண்டுபிடிக்கிறாள். அது அவளுக்கு விடாத அரிப்பாகிறது. அக்குணம் அவரை அவளது கண்களில் ஒரு அடி குறைக்கிறது. அவளது புன்னகை மறைந்து வதங்குகிறாள்.

இன்னும் சில மாதங்களில் மற்றொரு கடினமான குணத்தைக் காண்கிறாள். அவர் அதிகாரி போல அவளை வேலை வாங்குகிறார். அதைச் செய், இதைச் செய் என்பதோடல்லாமல் இங்கே உட்காரு, இப்படி உட்காரு என்றும் சொல்லுகிறார். அவளோ கீழ்ப்படிய மனமின்றி முறுமுறுக்கத் துவங்குகிறாள். அவர் வீட்டில் நுழைந்தாலே அவளுக்கு எரிச்சல் வருகிறது. வேறு அறைக்குப் போய் விடுகிறாள். அவர் அவளது

கண்களில் இன்னும் சிறுத்து போகிறார். இப்படியே பல பாதகக் குணங்களைக் கண்டுபிடிக்கிறாள். (3) அவர் பிரசங்கிப்பதொன்று செய்வதொன்று. (4) தாயை விட்டுப் பிரியமாட்டார். (5) நண்பர்கள் அளவுக்கு மீறி. (6) தேறினவரல்ல, இப்படி. (7) சில ஆண்டுகளுக்குப் பின் இவர் ஒன்றுக்கும் உதவாதவர், இவரோடு வாழவே முடியாதென முடிவு கட்டி விடுகிறாள்.

அவர் கதையும் அதுதான் : (1) மணக்கோலத்தில் பார்த்து மயங்கி விட்டார். மருத்துவர், பணக்காரக் குடும்பமாயிருந்தாலும் பக்தியும் எளிமையும் உண்டு. (2) ஒரு வருடத்திற்குப் பின் சற்று எடை கூடிவிட்டது. கீழ்ப்படிவதில்லை, அதோடு நான் செய்ய வேண்டியதையும் அவளே சொல்கிறாள். (3) நன்றாய்த்தான் எழுதுகிறாள், ஆனால் எழுதுவதற்கேற்ப நடந்துகொள்வதில்லை. (4) சமைக்கத் தெரியாத தேவதையை மணந்து பயனென்ன? வயிறு நிறையாதவன் நேசிப்பது எப்படி? அம்மா சமையல் மேல். (5) சில பெண்களைப் போல் இவள் எடுப்பாக உடையணிவதில்லை. (6) தொட்டால் சிணுங்கிபோல எதற்கெடுத்தாலும் அழுகிறாள். கணவன் திருத்த உரிமையில்லையோ? (7) எங்கு எதைப் பேச வேண்டுமென்ற அறிவே கிடையாது. உதவாக் கரை.

ஒரு நாள் கண்மண் தெரியாமல் ஆருயிராய் நேசித்த உயர்ந்த உருவங்கள் இன்று உதவாக்கரைகளாய்த் தரைமட்டமாகிவிட்டன. ஆனால் அதே பழைய ஆட்கள்தானோ? சந்தேகமின்றி அவர்களேதான். சிக்கல் என்னவெனில், சாதகமான குணங்களையே நோக்கிக் கொண்டிருந்த துணைவரின் கண்கள் இன்று பாதகமான குணங்களில் மட்டும் நிலைக்குத்தி நிற்கின்றன.

இடைவிடாமல் நமது துணைவரின் சுயமரியாதையை மட்டந்தட்டி அவர்களை ஒன்றுமில்லாமலாக்குகிறோம். அவர்கள் தங்களைக் குறித்த குறைவெண்ணங்கொள்ளச் செய்கிறோம். குறைகூறி, குற்றங் கண்டு பிடித்து, கேலி செய்து, பிறருக்கு முன்பாக அவர்களது பலவீனங்களை எடுத்துக் கூறிச் சிரிக்கவைத்து, அவமானப்படுத்தி, சவால்விட்டு, காதுகொடுக்காமல், எதிலும் அன்னாரை வெற்றிகாண விடாமல், பாராட்டாமல், பிள்ளைகளிடத்தில் அவர்களைக் குறைத்துப் பேசி, இப்படிப் பல காரியங்களினால் துணைவரைச் சிறுமைப்படுத்துகிறோம். அவ்வப்பொழுது அவர்கள் சற்று எழுந்திருக்க முயற்சி செய்தால் தலையில் ஓங்கிக் குட்டுகிறோம்.

எடுத்துக்காட்டாக, தன் அன்பை மனைவிக்குக் காட்ட விரும்பும் கணவன் ஒரு சேலையை அன்பளிக்கிறான். அவ்வன்பைப் பாராட்டு வதற்குப் பதிலாக அவள், ''இம்மாதம் இத்தனை செலவோடு ஏன் இதை

வாங்கினீர்கள்? இந்த நிறமும் எனக்கு பிடிக்கவில்லை'' என்கிறான். மனைவியால் உதைக்கப்பட்டதைப் போல கணவன் உணருகிறான். அல்லது, மனைவி இரவு உணவிற்குப் பின்னர் உற்சாகத்தோடு, ''உங்களுக்குப் பிடித்தமான ஐஸ்கிரீம் செய்திருக்கிறேன்'' என்று சொல்லி கணவனிடமிருந்து அன்பு வார்த்தைகளை எதிர்நோக்கி நிற்கிறாள். அவன் ருசித்துவிட்டு, ''நன்றாயிருக்கிறது. ஆனால் அந்தக் கல்யாணி சிஸ்டர் இன்னும் நன்றாய்ச் செய்வார்கள், அவர்களிடம் கேட்டுப் படித்துக்கொள்'' என்கிறான். அவள் படுக்கையில் விழுந்து அழுகிறாள். சொன்னதென்னவோ சரிதான். ஆனால் வேளையும் முறையும் சரியல்ல. சொன்னதின் ஆழக் கருத்தென்ன? ''நீர் செய்ததில் ஒரு குறையுண்டு'' என்பதுதான். புண்பட்ட துணைவர் பழிவாங்கச் சந்தர்ப்பம் எதிர்நோக்கியிருக்கிறார் (1 தெச 5:15).

இவ்வீழ்ச்சியைத் தவிர்ப்பது எப்படி?

சிக்கலைச் சற்று ஆராய்ந்து விளக்கம் காணுங்கள். (1) அவர் இன்னும் அதே உயரம்தான், பொறியியல் வல்லுனர்தான், பக்திமான் தான், இன்னும் அதே சிரித்த முகம்தான். என்னைக் கவர்ந்த அடிப் படைக் குணங்கள் இன்னும் அப்படியேதான் இருக்கின்றன. (2) என்னைக் குற்றங்காண்கிறாரென்று ஏன் நினைக்கவேண்டும்? திருத்த மென எடுத்துக்கொண்டால் திருந்தி முன்னேறலாமே. அவர் விவரம் அறிந்தவராயிற்றே. (3) அவரும் மனிதர்தானே; தேவ தூதனல்லவே. (4) அவரது தாய் ஓர் விதவை; நான் கரிசனையோடிருப்பது நல்லது. அவர்களையல்லாமல் தனித்தியங்க அவருக்குச் சற்று காலம் பிடிக்கு மல்லோ? நான் பொறுமையோடிருக்க வேண்டும். (5) நாம் ஊழியர்; நண்பரும் ஊழியத்தின் ஒரு பகுதியே. (6) அவருக்கு வயது 26தானே; இத்தனை இளைஞனாய்த் திருமணம் செய்ததற்கு நான் நன்றியுள்ளவ ளாயிருக்க வேண்டும். தினந்தோறும் கற்றுத் தேறுகிறாரே. (7) அவர் மோசமல்லவே. இன்னும் பழைய நற்குணங்களோடுதானே இருக்கிறார்!

விளக்கம் காணுவதோடு நின்றுவிடாதீர்கள். சில சாதகக் குணங் களையும் யோசித்துப் பாருங்கள். அவர் சீக்கிரமாய் மன்னித்து மறந்துவிடுகிறார்; வெளியே அழைத்துச் செல்கிறார்; சில கணவரைப் போல குடிப்பதோ, சூதாடுவதோ இல்லை; என்னை நேசிக்கிறார்; என்னைப் பாரம் தூக்க விடுவதில்லை; ஓர் அருமையான குழந்தை யைக் கொடுத்திருக்கிறார். வேதத்தை அறிந்திருக்கிறார்; தேவனை நேசிக்கிறார்; அவரது சில குறைகளைச் சமாளித்து வாழ்வது நிச்சய மாய்க் கடினமல்ல.

அப்படியே அவனும் அவளது நடத்தைகளுக்கு விளக்கங்காண

முயற்சிக்க வேண்டும். கர்ப்பமாயிருப்பதால்தான் அதிகம் சாப்பிடு கிறாள். ஒருவேளை நான் நிறைய கட்டளைகளைக் கொடுப்பதால் கீழ்ப்படிய மாட்டேனென்கிறாளோ? அதிகாரத் தோரணையில் கட்டளையிடாமல் அன்போடு கேட்பது நல்லதென நினைக்கிறேன். கல்லூரியில் சுதந்திரமாகச் சுற்றிப் பறந்தவளை திடீரென்று நான் சொல்வதையெல்லாம் கேட்டு நடக்க எதிர்பார்க்கக் கூடாது. தனது வசதியான பின்னணியின் சில பாதகமானப் பழக்கங்களை அவள் விட்டுவிடக் காலம் பிடிக்கும், ஆனால் நம்பிக்கையுண்டு. மருத்துவக் கல்வியிலேயே நேரம் செலவழித்தவள்தானே. ஒரு சமையற்கலை புத்தகம் வாங்கிக் கொடுத்துப் பொறுத்திருக்க வேண்டியதுதான். அவளது எளிமையைத்தான் விரும்பினேன். வேத அறிவு நன்றாகத்தான் இருக்கிறது. என்னைப் பிரியப்படுத்த முயற்சிக்கிறாள். பாவம், எப்பவுமே மெலிய முயற்சித்துக்கொண்டேதான் இருக்கிறாள். ஆண்டவர் இன்னும் அவளை வனைந்துகொண்டுதானே இருக்கிறார். ஆத்தும ஆதாயம் செய்கிறாள். என் உறவினரை மரியாதையோடும் அன்போடும் நடத்துகிறாள். இவற்றிற்காக அவளை வெளிப்படையாக மெச்சிக் கொள்வது நல்லதென நினைக்கிறேன்.

இடிக்காதீர்!

நமது துணைவரைக் குட்டிக் குறைப்பதினாலே நமது மண வாழ்வையே சிறுமைப்படுத்துகிறோமென நாம் சிந்திப்பதில்லை. மாளிகை இடிந்து விழுவது போன்றது. சிலர் தம் திருமணத்தையும் உறவையும் இடித்து இடித்து அந்தக் குப்பையிலேயே வாழ்ந்து தங்கள் தங்க விழாவையும் குப்பை மேட்டின் உச்சியிலேயே கொண்டாடு கிறார்கள். ஆனால் குப்பையை அகற்றிப் பழுதுபார்த்து மறுபடியும் கட்டத்துவங்கினால் உங்கள் வெள்ளிவிழாவை மணமாளிகையிலேயே ஜெகஜோதியாய்க் கொண்டாடலாமே!

குப்பையை அகற்றுங்கள் !

கட்டுமிடத்தில் குப்பை நிறைந்திருந்தால் கட்டுவதெங்ஙனம்? ஆகவே முதலாவது குப்பையை அகற்றத் துவங்குங்கள். இருவரும் இணைந்து ஈடுபட்டால் வேலை துரிதமாய் முடியும். அகற்ற வேண்டிய குப்பையைக் கண்டுபிடியுங்கள். ''உங்களை நான் எப்படிப் புண் படுத்துகிறேனென்று ஒன்றைச் சொல்லுங்கள்'' என்று துணைவரைக் கேளுங்கள். அவரது பதில் தலையில் சம்மட்டியால் அடித்தது போலிருக்கலாம். அழவேண்டும் போலிருந்தால் அழுங்கள். ஆனால் அப்படிக் கேட்பதினால் துணைவருக்குப் பேச சுதந்திரம் அளிக்கிறீர்கள். ஆகவே தயக்கமின்றி அதைத் தவிர்ப்பதில் முற்படுங்கள். பின்பு

அடுத்ததில் துவங்குங்கள். பூரணத்தின் பாதை வேதனையானதுதான். அது நெற்றி வேர்வைதான். ஆனால் மாளிகை கட்டுகிறீர்களென்பதை மறந்துவிட வேண்டாம். அது ஒரு நாளில் முடிகிற காரியமல்ல. ஒருவரிடம் ஒருவர் வெளிப்படையாய் ஆனால் அன்புடன் அடுத்தவர் என்ன குப்பையை அகற்ற வேண்டும் எனக் கூறி உதவுங்கள். முழு முயற்சியோடு அகற்றுவேனெனத் துணைவருக்கு உறுதி கூறி, மன்னிப்புக் கோரி, பொறுமையும் உதவியும் வேண்டுங்கள். தவறும் போது தயவுடன் சுட்டிக் காட்டும்படிக் கேளுங்கள் (பிலி 4:5).

மாற முடியுமா?

இங்கும் சில தவறுகளை நாம் செய்யலாம். ''என்னால் மாற முடியாது. நான் அப்படித்தான். அது என் சுபாவம்'' என்பது தவறு. அதின் கருத்து, ''நான் மாறமாட்டேன்'' என்பதுதான். அப்படிச் சொல்வதனால் உங்களுக்கோ உங்கள் துணைவருக்கோ உங்கள் மண வாழ்விற்கோ நீங்கள் உதவவில்லை. நாம் கிறிஸ்துவில் புது சிருஷ்டிகளாயிருக்கிறோம் (எபே 4:23). பழக்கங்களும் சுபாவங்களும் பெற்றவையல்ல, கற்றவை. ஆகவே, ''தேவ கிருபையினால் நான் என்னை மாற்றிக் கொள்வேன். நாம் இருவரும் கைகோர்த்து நடந்து சவாலைச் சந்திப்போம்'' என கூறுங்கள் (பிலி 4:13).

''இனி முடியாது'' எனச் சோர்படைவதே இரண்டாம் தவறாகும். திரும்பத் திரும்பத் திரும்ப மனத்தாங்கல்கள் வரும். விரக்தியடைந்து விட்டு விடாதீர். எழுந்து நிமிர்ந்து திரும்பவும் துவங்குங்கள் (2 தெச 3:13).

மறுபடியும் மாளிகையைக் கட்டுங்கள்!

வாயைத் திறந்து, ''வருந்துகிறேன்'' அல்லது ''நானும் வருந்துகிறேன்'' என்று சொல்லுங்கள். அதுதான் அடித்தளக் கல் என்று எண்ணுகிறேன் (2 கொரி 2:6-8). ''நான் முன்னேறுவேன். என்னை மாற்றிக்கொள்ள முழுமுயற்சி எடுப்பேன்'' என்று சொல்லுங்கள். யோசித்து, திட்டமிட்டு உங்கள் துணைவருக்கு எப்படி உதவலாமெனச் சில தீர்மானங்கள் எடுங்கள். அவரைப் புண்படுத்தும் வார்த்தையைப் பயன்படுத்தாதிருக்கவோ, எங்கு போகிறீர்களென சொல்லிவிட்டுப் போகவோ, இப்படி உங்கள் சூழ்நிலைக்கேற்பத் தீர்மானமெடுங்கள் (1 பேதுரு 4:8).

மணமாளிகை கட்டத் தேவைப்படும் பிற கற்கள்: ஒளிவு மறைவின்மை, மன்னிப்பு, நம்பிக்கைக்குரியவராய் நடத்தல், நம்பிக்கை, பாராட்டு, உதவி, புரிந்து கொள்ளுதல், தன்னடக்கம், நாவடக்கம்,

3

உங்கள் மனைவி

இருபத்தோராம் நூற்றாண்டு கல்லெறி தூரத்தில் தெரிகிறது. கடைசி நாட்களின் கடைசி நிமிடத்தில் வாழ்கிறோமோ என எண்ணும்படி வீட்டுக்கு வீடு சண்டையும் பிரிவினையும் ஏற்பட்டு, ஒளிமயமான இல்வாழ்வின் கனாக்களைச் சுக்கு நூறாக்குகிறது. உங்கள் மனைவியைப் புதிய கண்ணோட்டத்தோடு நோக்கும்படி, இதோ, சில துணுக்குகள்.

1. அவள் உங்களுக்கே முதலிடம் அளித்துள்ளாள்.

கடவுளுக்கடுத்தபடி உங்களையே எல்லாவற்றிற்கும் எல்லாமுமாய்க் கருதுகிறாள். சராசரி இந்திய ஆடவரைப் போலன்றி சராசரி இந்தியப் பெண் தன் குடும்பத்தைத் தியாகம் செய்து கணவன் நிழலில் தஞ்சமடைகிறாள். அன்றாடம் அவள் அதை வெளிக்காட்டாமல் போனாலும் உங்கள் முகம் கடுகடுத்த மாத்திரத்தில் தெருவில் நிற்பதைப்போல் உணருகிறாள். குழந்தைப் பருவ வீட்டை நினைத்து ஏங்குகிறாள். நாளை எப்படியோ எனக் கவலையுறுகிறாள். அவள் பரலோகத்தை வாஞ்சித்துக் கதறச் செய்யாதீர்கள். தனது கணவனின் அரவணைப்பிலிருப்பாளானால் வாழ்க்கைப் புயல் எதுவானாலும் தாங்கிக்கொள்வாள். எலிசபெத்து ''மலடி''தான் (லூக் 1:7). ''மலடி'' என்றழைக்கப்பட்டாள் (வச 36). ''ஜனங்களுக்குள்ளே நிந்தை'' அனுபவித்தாள் (வச 24). ஆனாலும் ''வயது சென்றவள்'' ஆகும்வரை தன் கணவனோடு கை கோர்த்து தேவனுக்கு முன்பாக நடந்தாள் (வச 6,7). அது எப்படி? அக்கறை காட்டி அவளுக்காய் ஜெபிப்பவனா யிருந்தான் அவள் கணவன் (வச 13).

2. உங்கள் வாழ்வில் முதலிடம் விரும்புகிறாள்.

உங்களுக்கும் அவளுக்கும் நடுவில் எதுவும் குறுக்கிடுவதைச்

சகிக்கமாட்டாள். தாரத்தின் கடமைகளை உங்கள் தாயே செய்தால் ''நான் இருந்தென்ன இல்லாவிட்டால் என்ன'' என அவள் நினைப்பதில் வியப்பொன்றுமில்லை. முக்கியக் குடும்பக் காரியங்களை முதலாவது மனைவியிடமே பகிர்ந்துகொள்ளுங்கள். வேலை, வேலை என்று சாகக்கூடாது. சம்பத்தைப் பொருத்ததல்ல வாழ்வு (லூக் 12:15). வேலைக்காய் உயிரைவிட்டு, வாழ உயிரற்றவர்களாகிவிடாதீர்கள். 120 கி.மீ. வேகத்தில் நாட்களை ஓட்டினால் என்னாவது? கணவனாயிருக்க நேரமெடுக்கவேண்டும். கொஞ்சம் மூச்சு விடும்படி தேவையற்ற வாஞ்சைகளை உங்கள் வாழ்விலிருந்து எடுத்துப்போட தேவனுக்கு இடங்கொடுங்கள். குடும்பத்தைக் குறித்த உங்கள் கண்ணோட்டம் மாறினால் குடும்பமே மலர்ந்துவிடும். குடும்பத்தை அனுபவியுங்கள். பிள்ளைகள் வளருவதை ரசியுங்கள் (அவர்கள் ஒரே முறைதான் வளருவர்). மனைவியே உங்கள் வாழ்வில் ''நம்பர் ஒன்'' என்று அவள் உணரச்செய்யுங்கள்.

3. சுயாதீனத்தை விரும்புகிறாள்.

உங்களைச் சார்ந்திருக்க விருப்பமில்லை என்பதல்ல, தன் சுயாதீனத்திற்கு உங்களேயே சார்ந்திருக்கிறாள் என்பதே சரி. மூக்கணாங் கயிறு போட்டு வைத்திருக்காதீர்கள். சரமாரியாய்ச் சட்டங்களைப் பொழிந்து அவள் நொந்துகொள்ள வழி வைக்காதீர்கள். கடவுளே பத்து கட்டளைகள்தான் கொடுத்தார் என்று என் கணவனிடம் அடிக்கடி சொல்லுவேன். மனைவியர் பலர் கூட்டுக் கிளிகள்தான். அவளது வாஞ்சைகளைக் கனப்படுத்துங்கள். சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லிக் கீழ்ப்படிந்திருந்தாலும், வேதம் அவளைச் ''சுயா தீனமுள்ளவள்'' என்று குறிப்பிடுவது எத்தனை அருமை! (கலா 4:22,23). எல்லாவற்றிற்கும் மேல் அவளுக்கு பேச்சுரிமை இருந்தது. மனைவியைச் ''சும்மாயிரு'' எனக் கடிந்து கொள்ளாதீர்கள். அவளும் தன் கருத்தைத் தெரிவிக்கட்டும்.

4. ஒப்பிடப்படுவதை வெறுக்கிறாள்.

வேண்டியதை நேரடியாகச் சொல்லுங்கள். ''அவள் அப்படிச் செய்தாள், நீயும் அப்படிச் செய்'' என்று சொல்லுவது அவளுக்கு வெறுப்பு. யாரோ ஒருவரைப்போல புடவை கட்டச் சொல்லாதீர்கள். அந்த அவளைப் போல இவள் இருக்க விரும்புவதேயில்லை. அப்படிச் சொல்வதினால் இவள் தன்னைக் குறித்த குறைவெண்ணம் கொண்டு பொறாமையும் படலாம். மனைவியே இல்லாத ஒருவர், ''நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்'' (பிலி 4:11) என்று ரம்மியமாய்ச் சொல்லும்போது நிச்சயமாய் நீங்கள் உங்கள் மனைவியில் மனரம்மியமாய் இருக்கலாமே!

5. தன் தனிச் சிறப்பைக் காக்க விரும்புகிறாள்.

அவள் அவளாகவே இருக்கட்டும். அவளது இரத்தத்திலேயே இல்லாத சிலவற்றை அவளுக்குள் ஏற்ற முயற்சிக்காதீர்கள். திருத்த வேண்டிய காரியங்களுண்டு. ஆனால் திருத்தமில்லை வெறும் திருப்பம்தான் எனும் இடங்களில் அவள் அவளாகவே இருக்கட்டுமே. அவள் பழத்தை அப்படியே கடித்துச் சாப்பிடவும், கரும்பைப் பல்லால் உரித்துச் சாப்பிடவும் விரும்பினால், சாப்பிட்டுவிட்டுப் போகட்டுமே. ஏன் வெட்டிச் சாப்பிடப் பழகவேண்டும்? நாம் என்ன வெள்ளைக் காரரா? சிறு காரியங்களும் உறவைப் பெரிதும் பாதிக்கும். நீங்கள் மனைவியில் விரும்பாத பலவற்றைப் பிறர் பாராட்டலாம். அவள் ஆபீசர் மனைவிபோல் நடந்து கொள்ளவில்லை என நீங்கள் எண்ணலாம். பிறரோ அதை எளிமைக் குணம் எனப் பாராட்டலாம். ஆகவே அவசரப்பட்டு திருத்தாதீர்கள் (திருப்பாதீர்கள்). பெண்கள் பலர் அணைக்கப்பட்ட தீபங்களாயிருக்கின்றனர். மனைவியை ஊக்குவித்து அவளது தாலந்துகளுக்குச் சிறகளிப்பதினால் அவளும் வாழ்வில் மனநிறைவு காணலாம்.

6. அவளுக்கு வேலைப்பளு அதிகம்.

பெரும்பான்மையான வீடுகளில் வேலைப்பளுவினால் மனைவிக்கு குறுக்குவலி; உடற்பயிற்சியின்மையினால் கணவனுக்கு முதுகு வலி. எப்பொழுதுமே பறக்கிறாள், எப்பொழுதுமே களைத்திருக்கிறாள். எப்பொழுதுமே பலவீனமாயிருக்கிறாள். அவளுக்கு ஓய்வு நாளோ (ஓய்வெடுக்கும் நாள்) செக்கன்ட் சாட்டர்டேயோ கிடையாது. இரண்டு பிள்ளைகள் போதுமே அவளைத் திக்குமுக்காடச் செய்ய! ஆகவே அவள் எரிச்சலடைவதைப் புரிந்துகொள்ளுங்கள். வெளியே வேலை செய்யும் பெண்ணுக்குக் கூடுதல் உதவி தேவை. என் கணவர் காலையில் படுக்கையைச் சரிசெய்து எனக்குக் காபியும் போட்டுக் கொடுப்பது சற்று மூச்சுவிட நேரமளிக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு ஆண்கள்தான் தட்டு துடைத்தனராம்! (2 இரா 21:13). மனைவி அவசரத்திற்கு வேறு யாரையாவது தேடி ஓடாதபடி வீட்டில் ஆண்களின் வேலைகளையாவது நீங்கள் செய்வது உத்தமம்.

7. அவள் உணர்ச்சிவசப்படுபவள்.

ஆண்கள் மனதில் சிந்திக்கின்றனர், பெண்கள் இதயத்தில் உணர்கின்றனர். அவள் அழுகிறாள், அலறுகிறாள், உணர்ச்சிவசப் பட்டுத் தீர்மானங்களை உடனுக்குடன் எடுக்கிறாள். அவளது மனநிலை சுரப்பிகளின் நிலைக்கேற்றவாறு மாறுகின்றன. ஒருநாள் உற்சாகத்தின் உச்சக்கட்டத்தில் இருக்கிறாள். மறுநாள் சோர்ந்து சுருண்டு கொள்

கிறாள். சிறு காரியத்திற்கும் மனமுடைகிறாள். இது பெண்களின் உடலியல். கூடுமானவரை அவளது மன நெருக்கங்களை இலகு வாக்குங்கள். கோப வார்த்தைகளை அன்பு வார்த்தைகளால் அழிக்க முயலுங்கள். அவள் அழுதுகொண்டிருக்கும்போது தூங்கிவிடாதீர்கள். விவாதித்துக் கொண்டிருக்கும்போது வெளியே கிளம்பிவிடாதீர்கள். மாமியாரோடு வாழும் மனைவிக்குச் சற்றுக் கூடுதல் அன்பும் அரவணைப்பும் தேவை. உங்கள் ஹாஸ்யத்தினால் அவளுக்குச் சிரிப்புக் காட்டி வீட்டில் மறந்து (மறைந்து) போன விளையாட்டிற்கு மறுமலர்ச்சியூட்டுங்கள். "விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று உலகத்திற்குரியவைகளுக்காய்க் கவலைப்படுகிறான்" (1 கொரி 7:33).

8. பாலுறவு அவளுக்குப் பெரிதல்ல.

பாலுறவு என்றால் பறந்து வர ஆயத்தமில்லை. இவள் ஏன் மரக்கட்டை போலிருக்கிறாள் என நினைக்கிறான் கணவன். இதில் என்னதான் இருக்கிறதோ எனச் சலிக்கிறாள் மனைவி. மனைவியர் பாலுறவில் இன்பம் காண நேரமும் நுணுக்கமும் அவசியம் என்பதை அறியாத கணவர் பலர் உண்டு. மனைவி பாலுறவில் பரவசமடை வதைக் கணவன் தன் "கடமையாய்க்" கருத வேண்டும் (1 கொரி 7:3). அவளது "முடிக்கவேண்டிய வேலை" பட்டியலில் பாலுறவு கடைசிதான். பலருக்கு அது ஓர் அமைதி நிழற்படம். சிலர் சீக்கிரம் முடியட்டுமே என அமைதியாக ஜெபித்துக் கொண்டும் இருப்பர். கணவன் அயர்ந்து தூங்கியதும் மனைவி உத்திரத்தை எண்ணிக்கொண்டு இவ்வளவுதானா பாலுறவு எனச் சிந்திக்கிறாள். "உன் சத்தத்தை நான் கேட்கட்டும்" என்கிறான் கணவன் (உன் 2:14). அவளைப் பேச ஊக்குவித்து அவளது விருப்பு வெறுப்பு உணர்வு களைப் பகிர்ந்துகொள்ள அழைக்கிறான். நீங்கள் இரக்கம், கற்பு, அக்கறையின்றி நடந்துகொண்டால் உடலுறவு அவளுக்குக் கொடுமை தான். ஏனெனில் பெண்களின் பாலுறவு அவர்களின் மனநிலையினால் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

9. அவளுக்கு உறுதிமொழி அடிக்கடி தேவை.

தனது தகுதியைக் குறித்துச் சந்தேகப்படுகிறாள். என் கண வனுக்குக் கவர்ச்சிகரமாய் இருக்கிறேனா? குழம்பு பிடித்திருக்கிறதோ என்னவோ? நான் நல்ல மனைவியா? ஏதாவது தவறு செய்து விட்டேனோ? எனக் குழம்புகிறாள். அடிக்கடி, "நீதான் என் அப்சரஸ்" என அடித்துக் கூறவேண்டும். நேற்றையப் பாராட்டு நேற்றோடு போய்விடும். தினமும் உங்கள் அன்பை வெளிப்படுத்த ஏதாவ தொன்றைக் கண்டுபிடியுங்கள். நீ இல்லாமல் எப்படி? என்பது போல

அவளை நடத்துங்கள். நீதிமொழிகள் 31இல் மனைவி செய்யும் எல்லாவற்றிற்கும் கைமாறாய்க் கணவன் செய்ய தேவன் கேட்கும் ஒன்றே ஒன்று புகழுதல்! (வச 29). நீதிமொழிகள் 31இன் பிரசித்தி பெற்ற பெண்ணின் இரகசியம் அதுதான் போலும்!

10. அவள் அறிந்துகொள்ள விரும்புகிறாள்.

வெளிப்படையாய்ச் சொல்லாவிட்டால் உங்கள் மனதிலிருப்பதை எப்படி அறிவாள்? வருத்தம் என்ன எனச் சொல்லுங்கள். அவள் தன்னை மாற்றிக்கொள்ளட்டும். அவளில் நீங்கள் விரும்புவதையும் சொல்லுங்கள். அவள் அதில் பழகட்டும். உங்கள் வேத அறிவை அவளுக்குப் புகட்டுங்கள். கூடுமான இடங்களுக்குக் கூட்டிச் செல்லுங்கள். எனக்கு எல்லாம் தெரியும் என்பது போன்ற அவளது முகபாவனையைக் கண்டுகொள்ளாதீர்கள். அது வெறும் முகமூடிதான். அவளது அறிவை அவள் பகிர்ந்துகொள்ளட்டும். அது அவளை முகமலரச் செய்யும். செய்தித்தாள் செய்திகளைக் கூறுங்கள். TVயில் பார்ப்பவற்றை விளக்குங்கள். பெண்கள் பலர் பொது அறிவில் குறைவுள்ளவர்கள். கேட்பவற்றைக் கற்றுக்கொடுங்கள். பிறர் முன்னிலையில் கேலி செய்யாதீர்கள். இன்றுவரை என் கணவர் படிவங்களை வாசிக்காவிடில் எதற்குக் கையெழுத்திட்டேன் என்றறியேன். அது அவரது தலைமைத் துவத்தில் எனக்கு நம்பிக்கை அளிக்கிறது. தலைமைத்துவத் தாலந்து களை வீட்டில் அமர்க்களமாய்ப் பயன்படுத்தாதீர்கள். முதலில் கணவனாயிருங்கள்; பின்பு தலைவனாயிருங்கள்.

திருமணம் தரும் உசித ஈவுகள் இரண்டு: நீங்கள் அன்பு காட்ட ஒருவர், உங்களுக்கு அன்பு காட்ட ஒருவர். இரண்டையும் சிறப்பாய்ப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்!

4

உங்கள் கணவர்

காலமெனும் சாலையில் இதுவரை நமது கணவரோடு நாம் கொண்டிருந்த உறவின் நெருக்கம் இனி போதாதுபோல் தோன்றுகிறது. அவரோடு இன்னும் நெருக்கமாயிருக்க இதோ, சில குறிப்புகள்...

1. நீங்கள் அமைப்பாய்த் தோற்றமளிக்க விரும்புகிறார்.

வீட்டில் நீங்கள் வியர்வை நாற்றத்துடன் இருப்பதை அவர் விரும்புவதில்லை. ஆகவே வீட்டிலும் சுத்தமாக, தலைவாரி, அழகுடன் இருப்பது அவசியம். வெளியே அமைப்புடன் உடையணிந்து செல்ல வேண்டும். உன்னதப்பாட்டு 4:11, வாய், உடை சுத்தத்தைக் குறிக் கிறது. கந்தையானாலும் துவைத்துத் தேய்த்துக் கட்டவேண்டும். வீட்டிலும் இரவிலும் அணிய சில உடைகள் வைத்துக்கொள்ளுங்கள். வாய் நாற்றம் போன்ற ஏதாவது இருந்தால் அதைக் கவனித்துச் சரி செய்யுங்கள். புதிய கூந்தல் அலங்காரத்தைக்கூட அவர் விரும்பலாம்.

2. சுத்தமான வீட்டை விரும்புகிறார்.

இல்லத்தரசி என்பது பெண்ணின் முக்கியமான வேலையைக் குறிக்கிறது. மூலைகளில் ஒட்டடை, ஜன்னலில் காலாகாலமாய்ப் படிந்து வரும் தூசி, வழுக்கும் குளியலறை, இவையெல்லாம் இன்று சாதாரணம். வீட்டில் சுறுசுறுப்பாயிருங்கள். முற்றத்தைக் கூட்டித் தண்ணீர் தெளியுங்கள். பின்புறத்தைச் சுத்தமாக வையுங்கள். மேசையில் ஒரு துணி விரித்துப் பூக்களை வையுங்கள். ஜன்னல்களுக்கு திரையிடுங்கள். இவையெல்லாம் உங்கள் வீட்டை அழகாக்கும் (நீதி 31:27).

3. நன்றாய்ச் சாப்பிட விரும்புகிறார்.

நேற்றைய மீதியைக் கொட்டி அவரது ஆவியைச் சோர்படையச் செய்யாதீர். நல்ல உணவு என்பது உயர்ந்த உணவல்ல. வகைகள் அவசியம். சாம்பாரையும் புளிக்குழம்பையும் மாற்றி மாற்றி வைத்தால் எப்படி? வேலைக்காரி வாங்கிவருவதுதான் சமையல் என்றிராமல், நாளையச் சமையலை இன்றே திட்டமிடுங்கள். கூடிய பொழுதெல்லாம் நீங்களே கடைக்குச் சென்று காய்கறிகளைத் தேர்ந்தெடுங்கள். சமையற்கலையில் சிரத்தை காட்டுங்கள். புதிய விதத்தில் வெட்டி, வர்ணமிட்டு அலங்காரமாய் அடுக்கிப் பரிமாறுங்கள். புதிது புதிதாய்ச் செய்யுங்கள். கணவரது ருசிக்கேற்ப சமைக்கப் பழகுங்கள் (ஆதி 27:9). எப்பொழுதாவது ஹோட்டலில் சாப்பிடலாமென்றால், ''வீட்டில் என்னதான் இல்லை'' என முறுமுறுக்காமல் இதுதான் சாக்கு என ஒருவேளை ஓய்வெடுங்கள். வேறொரு சமையலை அவர் புகழ்ந்தால் எள்ளும் கொள்ளும் வெடிக்காமல் அதைக் கற்றுக் கொள்ளப்பாருங்கள்.

4. அவரே தீர்மானிக்க விரும்புகிறார்.

அவரது தீர்மானங்களிலெல்லாம் நீங்கள் குறுக்கிடுவதையோ எதை எப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்வதையோ அவர் விரும்பா விடினும் ஆலோசனைகளை வரவேற்கிறார். அவர் பணக்காரியங்களைப் பார்க்கும்போது பதறாதீர்கள். வீட்டில் அவரது தலைமையை மதிக்க வேண்டும். மனைவி கணவனிடத்தில் பயபக்தியாயிருக்கவேண்டுமாம் (எபே 5:33). எரிச்சலின்றி கீழ்ப்படியுங்கள். அவரது தீர்மானங்களைத் தூக்கி எறிந்து பேசாதீர்கள். அவரது பிழைகளிலும் அவரோடு நின்று உதவுங்கள். தவறின்றி இருக்க அவர் தேவதூதனல்லவே. திருமணமான பின்புதானே கணவனாயிருக்கக் கற்றுக்கொள்ளுகிறார். ஆகவே பொறுமையாயிருந்து அவரோடு வளர்ந்து நல்ல மனைவியாகுங்கள். பெண்ணுக்கு அழகே சாந்தமும் அமைதலுமோடு கீழ்ப்படிவதுதான். வீட்டில் கணவனை ஆட்சி செய்யும் மனைவியை உலகம் கால் தூசிக்கும் மதிக்காது. வெளியே நடிக்க முடியாது. கோழி கொத்தின கணவன்மாரின் காயங்களை உலகிற்கு மறைக்கமுடியாது. அடிபணிய வேண்டியவளாயிருந்தும் அரசாளுகிறவளும், பகைக்கப்படத்தக்கவளா யிருந்தும் புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டவளுமான பெண்ணினிமித்தம் சமுதாயம் சஞ்சலப்படும் (நீதி 30:21-23).

5. செல்லம் பண்ணவும் கொஞ்சவும் விரும்புகிறார்.

ஜுரம் 99° வந்துவிட்டால் குழந்தையைப் போல சுருண்டு கொண்டு படுக்கையில் சாப்பாடு கேட்பார். மகிழ்வோடு செய்யுங்கள். சமையல், துவையல், கூட்டுதலே வாழ்க்கையாகிவிட வேண்டாம்.

கணவனுக்கு ஆச்சரியமூட்ட புதிய வழிகளைச் சிந்தியுங்கள். பிறந்தநாள் வந்தால்தான் பாயாசம் வைக்கவேண்டுமா? ஒரு பாராட்டுச் சொல் அவரைத் தூக்கிவிடுகிறது. மதியம் கண்ணயருவதைக் குற்றஞ்சாட்டுவது அவருக்கு எரிச்சல் மூட்டலாம். மாறாக, ''களைப்பாய்த் தெரிகிறீர்களே, சற்று படுத்திருங்களேன்'' என்பது அவரைக் குளிரச் செய்கிறது. யோசேப்பின் வருத்தம் யாவையும், அவனது தகப்பனுடைய குடும்பத்தின் பிரிவையும் ஆஸ்நாத்து மறக்கும்படிச் செய்தாள் (ஆதி 41:50,51). அவரது சட்டைப் பொத்தானைத் தைத்துக் கொடுங்கள். வெளியே செல்லும் போது மறந்தவற்றை நினைப்பூட்டுங்கள். விளையாட்டான இரகசியங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள். எப்போதாவது இரவில் உலாவி வாருங்கள்.

6. உற்சாகமான தோழமையை விரும்புகிறார்.

உற்சாகமாய் அவர் பேசுவதைக் கவனியுங்கள். ஓங்கிப் பேசவோ மவுனம் சாதிக்கவோ கூடாது. சண்டையை வென்று கணவனை இழந்துவிடாதீர்கள். கடமைக்கு எல்லாவற்றையும் ஒத்துக் கொண்டாலும் கருத்து பரிமாற்றம் இருக்காது. சுவாரஸ்யமாய் அளவளாவக் கற்றுக்கொள்ளுங்கள். அவரது திட்டங்களை ஊக்குவியுங்கள். அவரது மதிப்பில் மண்ணள்ளிப்போடாதீர்கள். உங்களோடு உறவாடும்போது அவர் தன்னைக் குறித்து உயர்வாக எண்ணும்படி நடந்துகொள்ளுங்கள். கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். விவாதம் சூடு ஏறத் துவங்கினால் அமரிக்கையாகிவிடுவதே புத்திசாலித்தனம். உன்னதப்பாட்டு 4:11 மனைவியின் இன்மொழிகளைக் குறிக்கிறது. குதர்க்கம் இல்லை, குத்தல் இல்லை, கொதிப்புமில்லை. ''தேனொழுக'' என்கிறோமே, அப்படி! மதியம் சற்று இளைப்பாறிச் சாயங்காலம் அமர்ந்து அவசரமின்றி உறவாடப் புத்துணர்ச்சியுடன் இருங்கள். சாயங்காலச் சலிப்பைப் போக்க பிள்ளைகளுடன் பூங்கா சென்று அவர்கள் விளையாடும்போது கதை பேசி வாருங்கள். நேரமாகிறதே, அதைச் செய்யவில்லையே, இதைச் செய்யவில்லையே எனப் பதறாதீர்கள்.

7. நிறைவான பாலுறவை விரும்புகிறார்.

பாலுறவு அவரது வாழ்வின் ஓர் தீவிர அம்சம். ''வேறு வேலை இல்லையா?'' என மனைவி சலித்துக் கொள்வதினால் கணவன் குற்றவுணர்வடைகிறார். ஆண்கள் வீரிய பாலுணர்வுடன் உண்டாக்கப்பட்டவர்கள். பாலுறவில் சிக்கலிருப்பின் இருவருமாக பாலுறவைப் பற்றிய சில சுத்தமான புத்தகங்களை வாசிப்பதில் தவறொன்றுமில்லை. ஓய்வு பெற்ற ஒருவர் தன் மனைவிமேலிருந்த இச்சையிலிருந்து விடுதலை பெறும்படி எங்களிடம் ஜெபிக்கக் கோரினார்! திருமண உறவு பாவ இச்சையல்ல. ஈசாக்கு 60 வயதில் இரு

குமாரரைப் பெற்றான். அவர்கள் பெரியவர்களானபோதும் ரெபெக்காளோடு விளையாடிக்கொண்டிருந்தான் (ஆதி 26:8). நாள் முழுவதும் ஒழுங்காய் நடந்துகொண்ட கணவனுக்கு இரவில் கொடுக்கப்படும் மிட்டாயல்ல பாலுறவு. அது அவரது உரிமை (1 கொரி 7:4அ,5ஆ). ஆண்மகன் அன்பையும், நன்றியையும், கொண்டாட்டத்தையும் மனைவியிடத்தில் காட்டும் மொழியே பாலுறவுதான். ஆகவே கணவன் ஒட்டிப் படுக்க விரும்பினால் நீங்கள் தட்டிக் கழிக்கக் கூடாது. முடியாத நாட்களில் பணிவோடு கணவனுக்கு விளக்கவேண்டும். திருமணத்திற்குப் பின்தான் காதல் கதையே துவங்குகிறது. கணவனோடு ஒரு சிறப்பான காதல் உறவைக் கட்டி எழுப்புங்கள். வருத்தம் அனுபவிக்கப் பிறந்தவனது வாழ்வை உல்லாசப் படகாய் மாற்றுவது பாலுறவு என்னும் பானம்தான்.

8. நண்பரையும் பொழுதுபோக்கையும் விரும்புகிறார்.

அவ்வப்பொழுது தன் சிநேகிதருடன் சென்று வர விரும்பினால் சீறி விழாதீர்கள். நண்பரை அழைத்து வந்தால் ஏதாவது பரிமாறிக் கணவனைக் கனப்படுத்துங்கள். தாவீது மீகாளை எவ்வளவுதான் நேசித்தாலும் யோனத்தானின் இன்பமான சிநேகம் அவனுக்கு அவசியமாயிருந்தது. ஆச்சரியமான அவனது சிநேகம் பெண்களின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்ததாம் (2 சாமு 1:26).

9. தன் பெற்றோரையும் உறவினரையும் நேசிக்கிறார்.

அடிக்கடி கடிதமெழுதுவதினால் அவரது பெற்றோருடன் நல்லுறவு கொள்ளுங்கள். தாய்க்கும் மகனுக்கும் நடுவே சண்டை மூட்டி விடாதீர்கள். ஒரு மகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக ஒரு மகனை இழந்துவிட்ட பெற்றோர் கணக்கற்றோர். அவரது சகோதர சகோதரிகளுக்கு இயன்ற வெகுமானங்கள் அளியுங்கள். அவர்களை அவர் வீட்டிற்கழைத்தால் உங்களால் கூடுமானதைச் செய்யுங்கள். விடிய விடியப் பழங்கதைகளைப் பறிமாறி உங்களை வெறும் பார்வையாளராக்கிவிட்டால் பொறுத்துக்கொள்ளுங்கள். லோத்தின் மனைவி போன்ற ஒரு பெண்ணுடன் சமாளித்துப் போவது சாராளுக்குச் சுலபமாகவா இருந்திருக்கும்? இருப்பினும் ஆபிரகாம் தானாகவே அவர்களைப் பிரித்து அனுப்பும்வரை அச்சவாலைச் சந்தித்துப் பொறுமையோடிருந்தாள்.

10. மனைவியை விரும்புகிறார்.

உணவு விருப்பம்தான்; ஆனால் மனைவி எப்போதும் சமையற்கட்டில் அடைந்து கிடப்பதை அவர் விரும்புவதில்லை! சுத்தமான வீட்டைப் பாராட்டுகிறார்; ஆனால் குடும்பமே தேவலாம் என்கிறார்!

குழந்தைகள் என்றால் கும்மாளம் போடுகிறார்; ஆனால் நீங்கள் பிள்ளைகளே கதி என்றிருந்தால் பொறுமை இழக்கிறார்! தாலந்து பெற்ற புத்திசாலி மனைவியைப் போற்றுகிறார்; ஆனால் அவள் புத்தகப் புழுவாகிவிட்டாலோ, அவரைக் கவனிக்காமல் தாலந்துகளைப் பயன் படுத்த வெளியே போய்விட்டாலோ, போதும், போதும் என்கிறார்! களைத்து வீடு வரும் அவரது தேவை வரவேற்கும் மின்னும் கண்கள்! பூக்கும் உதடுகள்! காபி போட்டு பரிவோடு பரிமாறும் கரங்கள்! சந்தித்த சிக்கல்களுக்கு ஆறுதலூட்டும் அன்பு வார்த்தைகள்! தலைவலிக்குத் தைலம் தேய்த்துவிடும் மென்மை விரல்கள்! அவரது தேவை முதன்மையாக மனைவியேயன்றி வேறல்ல. வாழ வழி தேடிப்போய் வாழ மறந்துவிடாதீர்கள். கணவனுக்கு மனைவி கைக்கெட்டும் தூரத்தில் இருக்கவேண்டும்.

வேதம் கூறும் மனைவியாவது சுலபமல்ல. ஒரு பெண்ணின் ஆன்மீகத் திறன் இங்கேயன்றி வேறெங்கும் இவ்வளவு பதம் பார்க்கப் படுவதில்லை. ஆகவே இதை ஒரு சவாலாய் மேற்கொள்ளுங்கள். புதுப்பிக்கப்பட்ட உங்கள் வாழ்வின் எஞ்சிய நாட்களின் முதல் நாள் இன்றாய்ப் புலரட்டும்!

5

ஞானப் பெண்மணி

(பின்வரும் விவாதத்தை வெறுமனே வாசிப்பது பயன் தராது. இருவர் அல்லது கூடுதல் சிநேகிதிகளோடு குழுமி கேள்விகளை விவாதித்து விடை காணுங்கள். பின்னரே கொடுக்கப்பட்ட விடைகளை நோக்குங்கள்.)

எஸ்தர் புத்தகத்தில் மூன்று பெண்கள் குறிப்பிடத்தக்கவர். ஒவ்வொருவரும் தங்கள் கணவரைச் சமாளிக்க ஒவ்வொரு சாதனத்தைக் கையாண்டனர்: வஸ்தி தன் அழகையும், எஸ்தர் தன் புத்தியையும், சிரேஷ் தன் பதிபக்தியையும் பயன்படுத்தினர். அது அவர்கள் வாழ்வை எப்படிப் பாதித்ததெனப் பார்ப்போம்.

வஸ்தி

வஸ்தி செய்தது சரியா?... ஏன்?...

குடிகாரக் கும்பலுக்குள் வரச்சொன்னபடியால் வஸ்தி கணவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாதது சரியே என பெரும்பாலான பெண்கள் பதிலுரைப்பர். ஆனால் வஸ்தி நிராகரிக்கப்பட்டு அவளை விட உத்தமியானவள் முடிசூட்டப்பட்டாள் (1:19). வஸ்தி மகுடமிழந்ததேன்?... கீழ்ப்படியாமை மட்டுமல்ல, பிற பெண்களுக்கு அவள் சரியான முன்மாதிரியாயில்லை (1:18). கிறிஸ்தவரல்லாதோர் நடுவில் வாழும் கிறிஸ்தவப் பெண்களுக்கு இது கற்பிப்பது என்ன?... வஸ்தியை விட எஸ்தர் எவ்விதம் உத்தமி?...

எஸ்தரைவிட வஸ்தி அழகியாயிருந்திருக்கலாம். ஏனெனில், ராஜா யாவருக்கும் முன்பாக அவளைப் பிரசித்தப்படுத்த விரும்பினான் அல்லவா? ஒருவேளை அதனால்தான் அவள் தன் கணவன் தன்னை ஒருபோதும் தள்ளிவிட மாட்டான். தான் என்றுமே பட்டத்தரசியாயிருப்பாளென எண்ணியிருக்கலாம். கணவன் தன் மனைவியில் காண விரும்புவது கீழ்ப்படிதலா, அழகா?...

கணவன் அழைத்தபோது வஸ்தி என்ன செய்திருக்கலாம்?... தனது கணவனின் கட்டளையைக் கேட்டதும் வந்த கோபத்தை அடக்கிக் கொண்டிருக்கலாம். முற்கோபத்தின் விளைவென்ன?... (நீதி 14: 17,18). ''முற்கோபி மதிகேட்டைச் செய்கிறாள்;... பேதையர் புத்தி யீனத்தைச் சுதந்தரிக்கிறார்கள்; விவேகிகளோ அறிவினால் முடிசூட்டப் படுகிறார்கள்.'' நமது உணர்வுகளைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ளும் போது சரியான தீர்மானம் எடுக்க தேவன் உதவுகிறார். இன்றேல் முட்டாள்தனமானவைகளைச் செய்து விடுவோம்.

தன்னோடு விருந்திலிருந்த தோழிகளை வஸ்தி ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம். மூத்தப் பெண்மணி ஒருத்தியோடு கலந்தாலோசித் திருக்கலாம். ''அநேக ஆலோசகர் உண்டானால் சுகமுண்டாகும்'' என்கிறது வேதம் (நீதி 11:14). நிதானமான தீர்மானம் எடுக்கச் சற்று நேரம் கிட்டத்தக்கதாக ஒரு தற்காலிகப் பதிலனுப்பியிருக்கலாம். ''ஒரு சிநேகிதியோடு வரலாமா?'' அல்லது ''தயக்கமாயிருக்கிறதே எப்படி வருவது?'' அவளது முரட்டாட்டமான கீழ்ப்படியாமையும், முகத்தில டித்தாற் போன்ற ''வரமாட்டேன்'' என்ற பதிலுமே கணவனின் கடுங் கோபத்திற்குக் காரணம். அவளது பாவனையே சரியில்லை.

வஸ்தியின் இடத்தில் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்?... போயி ருக்கமாட்டோம் என்றுதான் பெரும்பாலான பெண்கள் பதிலளிக் கின்றனர். வஸ்தி கீழ்ப்படியாதவள், அவளுக்குத் தண்டனை வேண்டி யதுதான் என்கிறோம். ஆனால் நாமும் அதையேதான் செய்திருப்போம் என்கிறோம். எஸ்தர் என்ன செய்திருப்பாள்?... அடக்கவொடுக்கமாக உடையணிந்து சென்றிருப்பாள். ராணி நிலையில் எஸ்தருக்கு அச் சூழ்நிலை அடிக்கடி ஏற்பட்டிருக்கும். அப்படிச் செய்ததினால் அவள் பாவம் செய்யவில்லையே. ஆகவே நமக்கு விருப்பமில்லாவிட்டாலும் சில சமயங்களில் பாவம் செய்யாமல் ஞானமாய் நமது கணவருக்குக் கீழ்ப்படிய முடியும். நாமோ கீழ்ப்படிவதில்லை.

கீழ்ப்படியாமையின் விளைவென்ன?... பிரிவு. கீழ்ப்படியாமை யினால் பல மனைவியர் தம் கணவரிடமிருந்து மனநிலையில் பிரிந் திருக்கின்றனர். சிலர் உடலளவிலும், வேறு சிலர் வஸ்தியைப்போல நிரந்தரமாகவும் தள்ளப்பட்டு வாழ்கின்றனர். இந்நிலையை எப்படிச் சரி செய்யலாம்?... வஸ்திக்கு மன்னிப்புக் கோர மனமில்லை. அவளுக்குத் தனது குடும்பத்தையும் தேவனருளிய நிலையையும் விட சுயகவுரவமே பெரிதாயிருந்தது.

மனைவியரின் கீழ்ப்படிதலைக் குறித்து வேதம் சொல்லுவ தென்ன?... ''மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல உங்கள் சொந்தக் கணவருக்கும் கீழ்ப்படியுங்கள்... சொந்தக் கணவர்களுக்கு

எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்" (எபே 5:22,24). "மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி உங்கள் கணவருக்குக் கீழ்ப்படியுங்கள்" (கொலோ 3:18).

மேற்கண்ட வசனங்கள் கீழ்ப்படியாமைக்கு இடமளிக்கின்றனவா?... ஆம். முதல் வசனம் பாவமற்ற, தவறிழைக்கக்கூடாத கர்த்தரைக் குறித்துப் பேசுகிறது. கணவர் தவறக்கூடாதவர்களல்லவே. இரண்டாவது வசனம் மனைவியானவள் தனது கீழ்ப்படிதல் கர்த்தருக்கு உகந்ததாயிருக்குமா எனச் சிந்தித்துச் செயல்படச் சொல்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஒரு மனைவியின் தேவை என்ன?... 1 தீமோத்தேயு 2:9-15 வாசிக்க. இச்சிறு பகுதியில் பெண்களுக்குத் தேவையானது தெளிந்த புத்தி என இருமுறையும் அமைதல் என இருமுறையும் குறிப்பிடப்பட்டுள்ளது. மட்டுமல்ல அவள் 'எல்லாவற்றிலும்' அடங்கியிருக்கவேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. இது சாத்தியமா?... வஸ்தி அமைதலாயிருந்தாளா?... எஸ்தர் அமைதலாயிருந்தாளா?... சிரேஷ் அமைதலாயிருந்தாளா?... ஆகவே அமைதி என்பது வாயை மூடிக்கொண்டிருப்பதல்ல. அது பணிவான ஆவியையே குறிக்கிறது.

கீழ்ப்படிதலுக்கும் அடங்கியிருத்தலுக்கும் வேறுபாடு என்ன?... கீழ்ப்படிதல் என்பது செயலையும் அடக்கம் என்பது மனநிலையும் குறிக்கிறது. நாம் முறுமுறுத்துக்கொண்டு பல்லைக் கடித்துக் கொண்டு அடக்கமின்றி கீழ்ப்படியலாம். மிகுந்த பணிவோடு நமது இயலாமைக்கு விளக்கங்கூறி கீழ்ப்படியாமலிருப்பதும் சாத்தியம்.

கீழ்ப்படிவதா இல்லையா என ஒரு மனைவி எப்படித் தீர்மானிக்கலாம்?... ஞானம் தேவை. ஒரு மனைவி தன் கணவனுக்குக் கண்மூடித்தனமாக எல்லாவற்றிலும் கீழ்ப்படியவேண்டுமானால் வேதம் அவளைத் தெளிந்த புத்தியோடு சிந்தித்துச் செயல்படச் சொல்லாது. ஞானம் என்பதென்ன?... 1. நன்மை எது தீமை எது எனப் பகுத்தறிவது (எபி 5:14). 2. அது நல்ல முடிவை எதிர்பார்ப்பது. அதேவேளையில் மோசம் வந்துவிடக்கூடாதே என விழிப்பாயிருப்பது (மத் 25:1-13). பக்தியே பெண்களுக்கு அழகு (1 தீமோ 2:10).

வஸ்தி அழைப்பிக்கப்பட்டபோது நீங்கள் அவளோடிருந்திருந்தால் என்ன ஆலோசனை அளித்திருப்பீர்கள்?... நாம் எப்படி புத்திசாலிகளாகலாம்?...(யாக் 1:5). தினமும், ஒழுங்காக, எப்பொழுதும் ஞானத்திற்காய் ஜெபியுங்கள்.

எஸ்தர்

எஸ்தர் தன் கணவனுக்குக் கீழ்ப்படியாதது சரியா?... (4:16). ஏன்?... வஸ்தி கீழ்ப்படியாதது தவறு, எஸ்தர் கீழ்ப்படியாதது சரி என்று ஏன்

சொல்லுகிறோம்?... எஸ்தர் பணிவோடு கீழ்ப்படிய மறுத்தாள். அவளது கணவன் ஏன் கோபப்படவில்லை?... எஸ்தரின் பணிவே. நாம் நமது கணவனிடம் கீழ்ப்படியும்போதும் கீழ்ப்படிய மறுக்கும்போதும் எப்படிப் பட்ட மனப்பான்மையுடன் செய்கிறோம் என்பதைக் கவனிப்பது நல்லது. எஸ்தரது கீழ்ப்படியாமையை அவளது கணவன் அங்கீகரித் ததற்கு வேறொரு காரணம், அவள் 'எல்லாக் காரியத்திலும்' கீழ்ப் படிபவளாயிருந்ததினால் இருக்கலாம். ஆகவே அவன் அவளது கீழ்ப் படியாமைக்கு நியாயமான காரணம் இருக்குமெனத் தெரிந்து கொண் டான். அதாவது கீழ்ப்படியாதிருக்கும் சிலாக்கியம் கீழ்ப்படியும் மனைவிக்கு மட்டுமே! எல்லாவற்றிலும் கீழ்ப்படியும் மனைவி சில வேளைகளில் தன்னைக் கேள்வி கேட்டால் கணவன் அதை மதித்துக் கவனிக்கிறான். சிறு சிறு காரியங்களில் கீழ்ப்படிய மறுப்பதால் கணவனுக்கு எரிச்சலூட்டும் சில எடுத்துக்காட்டுகளை உங்கள் வாழ்க் கையில் கூறமுடியுமா?... நன்றாய்ச் சமைக்க, நன்றாய் உடையணிய, வீட்டைச் சுத்தமாக வைக்க, நேரத்திற்குப் புறப்பட, இப்படி உங்களால் மாற முடியுமா?... முன்னேற முழு முயற்சி எடுக்கிறீர்களா?...

எஸ்தரின் நடக்கை வஸ்தியின் நடக்கைக்கு எப்படி மாறுபட்டது?... அவள் ஆவேசமாக உள்ளே நுழைந்து ஆமானிடம் முத்திரை மோதி ரத்தைக் கொடுத்த பொறுப்பின்மையையும், தீய நண்பரைத் தெரிந் தெடுத்த மதியீனத்தையும், பொய்யை நம்பும் பேதமையையும் சுட்டிக் காட்டி கணவனைப் பழிக்கவில்லை. அன்றி, முன்னமே இச்சந்திப் பிற்காகத் தன்னை ஆயத்தப்படுத்தினாள். ஆலோசனைக்குச் செவி சாய்த்தாள். திட்டமிட்டாள். உபவாசித்து ஜெபித்தாள். ஆத்திரமாய் மனதிலுள்ளதைக் கொட்டவில்லை. மூச்சுமுட்ட உள்ளுணர்வுகள் அலைமோதிக்கொண்டிருந்தாலும் அவைகளைக் கட்டுப்படுத்தி, ஞானம் விளங்கத் தன் வாயைத் திறந்தாள். எஸ்தர் கட்டுப்பாடின்றி தன் கணவனைப் பழிசாட்டியிருப்பாளானால் என்ன நடந்திருக்கும்?... மனநிலையிழந்து கோபாவேசத்தோடு உங்கள் கணவனை எதிர்த்த சம்பவம் ஏதாவது நினைவிற்கு வருகிறதா?... அதன் விளைவு என்ன வானது?... மாறாக நீங்கள் என்ன செய்திருக்கலாம்?...

எஸ்தர் யூகமுள்ளவள். கணவனது விருந்துண்ணும் ஆசைப்படி விருந்து ஆயத்தம் செய்தாள் (1:3; 2:18; 3:15). கணவனது ஞானமற்ற தீர்மானங்களை, செயல்களைச் சுட்டிக்காட்ட மனைவி ஏற்ற சூழ் நிலையை உருவாக்கவேண்டும். அப்பொழுது கணவன் அவளது ஆலோசனையை ஏற்றுக்கொண்டு சிந்தித்து தனது அவசரச் செயல் களின் விளைவைப் புரிந்துகொள்ளும் நிலையிலிருப்பான். எஸ்தர் திறமையாய்ச் செயல்பட்டபோது அவள், ''எனக்கு வேண்டும்'' என்று கேட்கும் முன்னர் அவனே, ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று

கேட்டான். கணவனை எவ்விதத்திலும் பிரியப்படுத்துவது கணவனை நம் பக்கமாய்ச் சாயச் செய்யும்.

கீழ்ப்படிதலுக்கும் மேலாக பவுல் பெண்களுக்கு அளிக்கும் அறிவுரை என்ன?... பயபக்தி! (எபே 5:33; எஸ் 1:18). கீழ்ப்படியாமை கனவீனப்படுத்துதலாகும். மனைவி தன் கணவனை எப்படிக் கனப் படுத்தலாம்?... 1 பேதுரு 3:1-6 வாசிக்க. ''மனைவிகளே... கீழ்ப்படிந் திருங்கள்... பயபக்தி... சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த பெண்களும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து... அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படிந் திருந்தாள். நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந் தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.'' சாராளது பிள்ளைகளாகிய நாம் அவளைப் போல நடந்துகொள்ள வேண்டும். நமது கணவருக்கு நாம் கண்மூடித்தனமாய்க் கீழ்ப்படியத் தேவை யில்லை என இப்பகுதியில் சுட்டிக்காட்டும் வார்த்தை ஏதேனும் உண்டோ?... ஆம். நாம் ''நன்மையானதைச்'' செய்ய வேண்டு மென்கிறது. இங்கும் அமைதலான ஆவி நமக்குத் தேவையென இடித்துரைக்கப்படுகிறது. சாராள் அமைதலாயிருந்தாளா?... மொர் தெகாய் எஸ்தருக்குக் கூறிய அறிவுரை என்ன?... ''நீ... மவுனமா யிருந்தால் நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்'' (4:14). அறிவோடு பேசவேண்டிய நேரத்தில் அமைதலாக இருந்து விடு வதினால் பல பெண்கள் தம் குடும்பங்களை அழியவிடுகின்றனர். எனவே எப்போது பேசவேண்டும், எப்போது அமைதலாயிருக்க வேண்டுமென ஒரு பெண் பகுத்தறியவேண்டும். எனவேதான் சாராளைப் பற்றிய பகுதி, ''நன்மை செய்து...'' என்று முடிகிறது. இப்பொழுது எபிரெயர் 5:14ஐப் பாருங்கள். வாழ்வின் இக்கட்டான சூழ்நிலைகளில் நன்மை தீமை இன்னதென்று பகுத்தறியும் ஞானம் ஒரு பெண்ணுக்கு இன்றியமையாதது. இதை அனுபவத்தால் கற்றறிகிறாள்.

ஆபிரகாமுக்குச் சாராள் கீழ்ப்படியாமற்போன சம்பவம் ஏதாவது உண்டா?... ஆதியாகமம் 21:10-12 வாசிக்க. சாராள் இச்சிக்கலில் சிக்கியது எப்படி?... (ஆதி 16:5). சாராள், ''என் அடிமைப் பெண்ணை உம்முடைய மடியிலே கொடுத்தேன்'' என்கிறாள். தனது அறிவீனத்தி னாலேயே அவள் துன்புற்றாள். வரவர அதிகமான பெண்கள் தங்கள் கணவரை வேறு பெண்களுக்கு இழந்து விடுவதை நாம் கேள்விப் படுவதேன்?... ஒரு காரணம் வரவர அதிகமான பெண்கள் தேவன் தந்துள்ள தங்கள் பொறுப்புகளைத் தூக்கியெறிந்துவிட்டுச் சுயநல நாட்டங்களைத் தேடி செல்வதினாலோ? எஸ்தர் தனக்கு வாக்களிக்கப் பட்ட இராஜ்யத்தின் பாதியை வாரிக்கொள்ளவில்லை. தனது குடும்பம்,

தனது மக்களோடு ஒப்பிட்டால் இராஜ்யத்தின் பாதி அவளுக்குக் கால் தூசி பெறவில்லை. இதற்கொப்பான சூழ்நிலை ஏதும் உங்கள் அருகாமையில், நகரில், நாட்டில் கவனித்ததுண்டோ?... வேலைப் பயித்தியமான ஒரு பெண் தன் கணவன், பிள்ளைகள், வீட்டுப் பொறுப்பை வேறொரு பெண்ணிடத்தில் விட்டுச் செல்கிறாள்; கவலை யீனமான பெண்ணொருத்தி தன் கணவனை வேறொரு பெண்ணுடன் விட்டு தன் பெற்றோர் வீட்டிற்கோ, விடுமுறைக்கோ, கடைத் தெருவிற்கோ செல்கிறாள். பேதமையான ஒரு பெண் தன் சிநேகிதியர் தன் கணவனுக்கு சோதனையாகலாமே என உணராமல் அவர்களைத் தன் படுக்கையறைக்கும் இழுத்துச் செல்கிறாள். தனது கணவனது தேவையைப் பூர்த்தி செய்யும் அவசியத்தை உணராத பெண் சுயநலக் காரணங்களுக்காய் ஒத்துழைக்க மறுக்கிறாள். சில தம்பதியர் வேறொரு தம்பதியருடன் ஒரே வீட்டில் குடியிருக்கின்றனர். இவர்கள் வேறு பெண்களை தங்கள் கணவர் மடியில் கொடுக்கின்றனர். கணவனை வேறொரு பெண்ணுக்குப் பறிகொடுத்துவிட்ட எந்த மனைவியையும் புத்தியீனள் என்று நாம் பழிக்கத் தேவையில்லை. வேறு காரணங்களும் உண்டு. இக்கட்டுரையில் அவற்றை விவாதிக்க இடமில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலை குறித்து வேதம் என்ன சொல்லுகிறது?... (நீதி 6:27,28). "தன் வஸ்திரம் வேகாமல் மடியிலே எவனாவது நெருப்பை வைத்துக் கொள்ளக் கூடுமோ? கால் சுடாமல் எவனாவது தழலின் மேல் நடக்கக் கூடுமோ?" ஆபிரகாமைப் போன்ற பக்தன் இவ்விதச் சூழ்நிலையில் வீழ்ச்சியடைய முடியுமா?... விசுவாசிகளின் தகப்பனானவன் சாராளுக்கு வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருக்கும் படி ஆலோசனை கூறாததேன்?... பக்தர்களில் பக்தரும் மனிதர்தான். விசுவாசிகளில் பெரும்பான்மையோர் விபசாரம் செய்ய விரும்புவ தில்லை. ஆனால் சோதனையைத் தாங்க திராணியற்றவராகின்றனர். தாங்கள் செய்வதை வெறுக்கின்றனர், ஆனால் பிசாசின் வீரியத்தில் மடங்கிவிடுகின்றனர். உள்ளூர 'உதவி உதவி' எனக் கதறிக்கொண்டிருக் கின்றனர். அவர்களுக்கு உதவி தேவை. எனவேதான் தேவன் மனிதனுக்கு ஒரு "துணையைக்" (helper) கொடுத்தார் (ஆதி 2:18).

இதனால் மனைவி கணவனைக் கவனித்துக் கொண்டே இருக்க வேண்டுமென்பது பொருளா?... தேவனை நம்பினால் அவர் கணவனைப் பாதுகாத்துக்கொள்வார் எனச் சில பெண்கள் நினைக்கின்றனர். வேறு சிலர் கணவர் தம் கண்பார்வையை விட்டுப் போனால் அவ்வளவுதான் என்று எண்ணுகின்றனர். ஆனால் ஒரு பெண் தேவனையும் நம்பவேண்டும் (சாதக முடிவை எதிர்பார்ப்பது); கவனமாகவும் நடந்துகொள்ளவேண்டும் (பாதகம் வந்துவிடக் கூடாதே என விழிப்பாயிருப்பது). புத்தியுள்ள பெண் தன் கணவனது

பாக்கெட்டில் நெருப்பைப் போட்டுவிட்டு கால்சட்டை சேதமடையா திருக்க எதிர்பார்க்கமாட்டாள். உங்கள் கணவரோடு இருக்கமுடியாத நேரங்களில் அவரது பாதுகாவலுக்காய் ஜெபியுங்கள்.

சாராள் இப்படிப்பட்ட சிக்கலை எப்படிச் சமாளித்தாள்?... ஆபிரகாம் தான் ஆகாருடன் கொண்டிருந்த பிணைப்பைத் துண்டிக்க விரும்ப வில்லை என நன்கறிந்தும் சாராள் பிடிவாதமாக நின்று விட்டாள். தன் ''ஆண்டவனிடம்'' இது குறித்துப் பேசுமுன் சாராளது உணர்வுகள் என்னவாயிருந்திருக்கும்?... குழப்பம்?... தயக்கம்?... பயம்?... இருக்கலாம். ''நான் ஆகாரோடுதான் வாழுவேன், நீ வேண்டுமானால் கூடாரத்தைக் காலி செய்யலாம்'' என ஆபிரகாம் சொல்லிவிட்டால்?... இங்குதான் சாராள் மெய்யாகவே கர்த்தரை நம்பவேண்டியிருந்தது. ''நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாமல்'' (1 பேதுரு 3:6). தன் மனைவி பயப்படுகிறாள் என்று ஒரு கணவன் உணர்ந்து விட்டால் அவன் தன் உறவைத் தொடர வழி கண்டுபிடிப்பதோடல்லாமல் அவளது ஆலோசனையையும் கண்ணீரையும் அசட்டை செய்வான். இப்படியொரு சூழ்நிலையை அமரிக்கையான நம்பிக்கையோடு பயமேதுமின்றி தைரியமாய்ச் சந்திக்க ஒரு பெண் உறுதியுள்ளவளா யிருக்கவேண்டும். ''நான் செத்தாலும் சாகிறேன்'' என்றாள் எஸ்தர். குடும்பம் உடைந்து போகாமல் காக்க வீரத் துணிச்சல் தேவை.

நீங்கள் செய்வது நன்மையானது என்று தெரிந்தபின் பயம் தேவையில்லை. நீதிமான் சிங்கத்தைப் போல் தைரியமாய் இருப்பான். தேவன் நமக்கு எப்படிப்பட்ட ஆவியைக் கொடுத்திருக்கிறார்?... (2 தீமோ 1:7). ''தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத் திருக்கிறார்.'' அவள் தெளிந்த புத்தியாய்க் கணவனிடம் பலமாய்ப் பேசவேண்டும். கணவன் மீதுள்ள வெறுப்பினாலல்ல, அவன் மீதும், தன் குடும்பத்தின் மீதும், தேவராஜ்யத்தின் மீதுமுள்ள அன்பினால் அப்படிச் செய்யவேண்டும். 'நானா அவளா தெரிந்து கொள்ளுங்கள்' என்று ஒரு மனைவி தைரியமாய் விட்டுவிடும்போது கணவன் தன் ஆருயிர் மனைவிக்குப் பதிலாக அடித்தளமற்ற உறவைத் தெரிந்து கொள்ளுவது அபூர்வம்.

அ) என் கணவர் வியாபாரத்தில் என் நகைகள் எல்லாவற்றையும் இழந்துவிட்டார். இப்போது முதலீடு செய்ய என் சொத்தை அவர் பெயருக்கு மாற்றக் கேட்கிறார். ஆ) என் மாமியார் என் மூத்த மகனைக் கொண்டுசென்று வளர்க்கிறேன் என்கிறார்கள். என் கணவர் கொடுத்து விடச் சொல்லுகிறார். என்னால் கீழ்ப்படிய முடியவில்லை. இப் பெண்களுக்கு என்ன ஆலோசனை தருவீர்கள்?... பணிவோடு

கீழ்ப்படியாதிருக்க வேண்டும். குழப்பமாயிருந்தால் கடினமான சூழ்நிலைகளுக்கு முதிர்ந்த ஒருவரிடம் ஆலோசனை கேளுங்கள்.

சுயவுரிமை நிலைநாட்டுதல் தேவனுக்கு மகிமை கொண்டுவர வேண்டும். நமது கணவனுக்கு கண்மூடித்தனமாய்க் கீழ்ப்படியும்போது நடப்பதென்ன?... எஸ்தர் தன் கணவனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்திருந்தால் என்ன நடந்திருக்கும்... அவள் மரித்து கணவனுக்கு மிகுந்த துக்கம் வருவித்திருப்பாள். மதியீனமான கணவனது தவறுகளை மாற்றவும் அவளது மதி போதுமானதாயிருந்தது; தனது சமயோசிதப் புத்தியைப் பிரயோகித்து பணிவுடன் கீழ்ப்படியாதிருக்கத் தீர்மானித்ததால் தனது கணவனுக்கும் நாட்டிற்கும் பெருமகிழ்ச்சி கொண்டு வந்தாள். ஒருபெண் முதலாவது தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் சூழ்நிலை மாறும்.

சிரேஷ்

கணவனுடன் அவளது உறவு எப்படி இருந்தது?... (5:10-14) உல்லாசமான லவ் பேர்ட்ஸ் போல் தெரிகிறது. எஸ்தர் போலல்லாமல் கணவனுடன் முழுச்சுதந்திரம் அனுபவித்தாள். அவள் கணவனுக்கு அளித்த ஆலோசனை என்ன?... ஏன்?... அவனைப் பிரியப்படுத்த நினைத்தாள். அவனது தற்பெருமையைத் தூண்டிவிடுவது அவனைப் பூரிப்பாக்குமென அறிந்திருந்தாள். அவனுக்கு மாறாய்ப் பேசுவதை அவன் விரும்புவதில்லை என்பதை அனுபவத்தில் அறிந்திருந்தாள். பிறரைப் புண்படுத்த விரும்பாத சுபாவமுடையவளாயிருக்கலாம்.

அவளது ஆலோசனையின் விளைவென்ன?... கணவனது தோல்விக்குச் சிரேஷின் பிரதிபலிப்பு என்ன?... (6:12,13). ஒரு யூதனுக்கு முன்பாக தாழ்ந்து போவது நிச்சயம் என்று அறிந்தும் ஏன் தன் கணவனுக்கு முன்னெச்சரிக்கை அளிக்கவில்லை?... அவனை மன வேதனைக்குள்ளாக்க மனமற்று அவனது கோபாவேசத்திற்குப் பலியாகப் பயந்து ஒத்துப்பாடியிருக்கலாம். மாறாய்ப் பேசினால் அவனை இழந்துவிடுவோமெனவும் அஞ்சியிருக்கலாம். நடந்ததென்ன?... (7:10). சிரேஷ் விதவையானாள். யாரை வைத்துக்கொள்ள நினைத்தாளோ அவனை இழந்துவிட்டாள் — புத்தியைப் பயன்படுத்தாததினால்.

புத்தியில்லாத அழகுள்ள பெண்களை வேதம் எப்படி வர்ணிக்கிறது?... (நீதி 11:22). மக்கள் பன்றியைக் கொன்று மூக்குத்தியை எடுப்பர். அவளை மதிக்கமாட்டார், அவளது அழகைப் பயன்படுத்திக் கொள்வர். ''சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற பெண்ணே புகழப்படுவாள்,'' (நீதி 31:30).

இறுதியாக, புத்தியுள்ள பெண்ணையும் புத்தியில்லாத பெண்ணையும் வேதம் எப்படி வேற்றுமைப்படுத்துகிறது?... (நீதி 14:1). ''புத்தியுள்ள பெண் தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத பெண்ணோ தன் கைகளினாலே அதை இடித்துப்போடுகிறாள்!''

கடைசிக் கேள்வி : உங்கள் வீட்டைக் கட்டிக்கொண்டிருக்கிறீர்களா, அல்லது இடித்துக் கொண்டிருக்கிறீர்களா?

6

பெண்ணே, பெண்ணாயிரு!

வர வரப் பெண்கள் ஆண்களைப்போல் மாறிக்கொண்டு வருகின்றனர். 1995இல் பீஜிங்கில் நடைபெற்ற அகிலவுலகப் பெண்கள் மாநாட்டில் பெண்கள் தாங்கள் வீட்டை நடத்துகிறவர்களாயிருப்பதைக் குறித்த அதிருப்தியை வெளிப்படுத்தினர். பெண்கள் புதிய கனாக் களைக் காண வாஞ்சிக்கின்றனரென்பதை அலுவலகம் செல்லும் பெண்களின் எண்ணிக்கை காட்டுகிறது. சுதந்திரப் பறவையாகவேண்டுமென்பதற்காக இன்றையப் பெண் தன் பெண்மையை விற்றுவிட்டாள். இப்போது அது ஒரு கவுரவப் பிரச்னையாகி அதற்கும் அநேகர் பலியாகிவிட்டனர். வெளியுலக வேலைக் கலாச்சாரம் வேர் விட்டுக் குடும்பத்தின் அடித்தளத்தையே பெயர்த்துக்கொண்டிருக்கிறது.

பிசாசு நாம் அவனது தந்திரத்தைக் கண்டுபிடிக்காதபடி நம்மைக் கொஞ்சங்கொஞ்சமாகவே திசை திரும்புவான். நமது தவற்றை நாம் உணரும்போது வெகுதூரம் விலகிவிட்டிருப்போம். மேலைநாடுகளில் பெண்கள் உயர்கல்வி கற்று வேலை பார்ப்பதைத் தெரிந்துகொண்டனர். இப்போது, ஏறத்தாழ 100 ஆண்டுகட்குப் பின்னர் தாங்கள் விட்டு வந்த கோரத்தைத் திரும்பிப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர் — வானை முட்டும் மணமுறிவு எண்ணிக்கை, உடைந்த குடும்பங்கள், சீரழிந்து போன சந்ததிகள்! சரிசெய்யமுடியா பாதிப்பு நடந்துவிட்டது. பழைய காயம் தந்த ஞானத்தினால் இன்று பல பெண்கள் இல்லத்தரசிகளாயிருக்கத் தெரிந்துகொண்டு வருகின்றனர். இந்தியப் பெண்மணிகள் தம் மேற்கத்தியச் சகோதரிகளிடமிருந்து கற்றுக்கொள்வதற்குப் பதிலாக அவர்களது பேராசைப் பாதையில் சென்று இன்று செங்குத்தான மலைச்சரிவில் வந்து நிற்கின்றனர். குடும்பத்தைக் கட்டும் ஆசையோ வழியில் எங்கோ காணாமல் போனது. துக்கமென்னவென்றால் தாய்க் குலமும் தமது பெண்மக்களைப் பெண்மையின் பாதையில் நடத்தத் தவறுவதுதான்.

பெண்கள் ஆண்களானால் அதிகம் பாதிக்கப்படுவது இல்லந்தான். யார் எந்த வேலையைச் செய்வது என்ற குழப்பம்! பெண்ணுடைய வேலை பிள்ளைகளையும் கணவனையும் அடுத்தது. ஆணுடைய வேலை வீட்டிற்கு வெளியே என ஏறத்தாழ 6000 ஆண்டுகட்கு முன்னர் கடவுள் நிர்ணயித்தார் (ஆதி 3:16,17). 4000 ஆண்டுகள் கழிந்தும் அவர் அதை மாற்றவில்லை. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது 1 தீமோத்தேயு 5:10,14இல் பெண்ணின் கடமைகளை வரையறுக்கிறான். அவை யாவன : 1. திருமணம், 2. பிள்ளைப் பேறு, 3. பிள்ளை வளர்ப்பு, 4. வீட்டை நடத்துதல், 5. நற்செயல்கள். இவற்றைச் சற்றே உற்று நோக்குவோம்.

1. திருமணம்

உச்சியை எட்ட ஆளோடு ஆளாய்ப் போட்டி போட்டு ஏணி ஏறும் பெண்கள் பலருக்குத் திருமணம் முக்கியமாய்த் தோன்றவில்லை. சுதந்திரப் பறவைகளாக இருக்கவும், வேலை பார்க்கவும், கை நிறைய சம்பாதிக்கவும், கால்கட்டு இல்லாமலிருக்கவும் விரும்பிப் பலர் திருமணத்தை ஒத்திப்போடுகின்றனர். "தேவன் தமது சாயலாக மனி தனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்" (ஆதி 1:27). கடவுள் தமது சாயலை ஆணுக்கும் பெண்ணுக்கும் பகிர்ந்தளித்தார். அவர் தகப்பனின் கண்டிப்போடு நம்மைத் திருத்துகிறார் (எபி 12:7). அதே சமயம் தாயின் மென்மையோடு நம்மைத் தேற்றுகிறார் (ஏசா 66:13). எனவேதான் தாயும் தகப்பனும் நம்மைக் கைவிட்டாலும் அவர் நம்மைச் சேர்த்துக்கொள்ளுகிறார்.

ஒரு கணவன்-மனைவி குழு தேவனின் முழுச் சாயலைப் பிரதிபலிக்கிறது. விரதத்துவத்தைக் குறைத்துக் கூறவில்லை; ஆனால் அது அபூர்வம். பெண்கள் தங்களைச் சுற்றிக் காணப்படும் கரையேறாத திருமணங்களைக் கண்டு சோர்ந்துவிடக் கூடாது. 20 முதல் 25 நல்ல திருமண வயது. படிப்பிற்காகவோ வேலையின் காரணமாகவோ திருமணத்தைத் தள்ளிப்போடுவது 25, 30 அல்லது 35 வயதிற்குப்பின் தனிமையிலாழ்த்தும். துணை தேவை என்று அவள் உணரும்போது, கூடவே தனது வாலிபம் வாடி தான் பருவம் கடந்த தோற்றமுடையவளா யிருப்பதையும் உணருகிறாள். வாலிபர் 30ஐ எட்டுமுன்பே மணமுடித்து விடுவதினால் அவளுக்குத் தெரிந்தெடுக்க ஆட்கள் குறைந்து விடு கின்றனர். கடிகாரத்தின் முள்ளைப் பின்நோக்கித் திருப்ப முடியாத தினால் பலர் பொறிக்குள் மாட்டிய எலி போல் அலைமோதுகின்றனர். இதனால் ஒரு பெண் 25ஐ எட்டியவுடன் ஆத்திரம் அவசரமாக மண முடிக்கத் தேவையில்லை. சரியான நபருக்காகவும் தேவ சித்தத்திற் காகவும் காத்திருப்பது பலன் தரும்.

ஜெபத்துடன் ஒரு படிப்பையும் பயிற்சியையும் தெரிந்தெடுப்பது நல்லது. ஆனால் ஒரே சமயத்தில் இரண்டு படிப்புகள் பெண்களுக்கு மிகுதி. நேரம் மிஞ்சினாலும் சமைப்பது, சுத்தம் செய்வது, தையல் போன்ற பெண்மைக் கலைகளைப் பயிலுதல் உடலுக்கும் எதிர்காலத் திற்கும் நல்லது. பொருத்தமான வாழ்க்கைத் துணைக்காக இளம் பிராயத்திலிருந்தே ஜெபிப்பதும் எதிர்காலத்தைக் குறித்துத் திட்ட மிடுவதும் முக்கியம். ''திருமணத்திற்குப்பின் வேலை செய்ய விரும்பு கிறேனா? வேலையினிமித்தம் கணவனை விட்டுப் பிரிந்து தனியே வாழ விரும்புவேனா?'' போன்ற கேள்விகளுக்குத் திருமணத்திற்கு முன்பே விடைகாணல் நன்று.

நீடூழி வாழும் திருமணத்தின் ஜீவநாடி, கணவனைப் புரிந்து கொண்டு அவருக்கேற்றாற்போல் தன்னை அமைத்துக்கொள்ளு வதாகும். இதற்குத் தாராள நேரமும் அவசரமற்ற மனமும் அவசியம். நாம் நேசித்து, கூட வாழும் மக்களைக் குறித்த முக்கியமான காரியங்களையே அறியாமலிருக்கிறோம் என்று பல மனோதத்துவ நிபுணர் கூறுகின்றனர். வீட்டிற்கு வெளியே வேலை செய்வது நமது பொன்னான நேரத்தையும் சக்தியையும் உறிஞ்சிவிடுவதினால் கணவனோடு நேச உறவை வளர்ப்பதற்கு இடையூறாகும். 'தேற்றர வாளன்' என்று பரிசுத்த ஆவியானவருக்கு மூலமொழியில் பயன் படுத்தப்பட்டிருக்கும் பதமே ஆதியாகமம் 2:18இல் ''ஏற்ற **துணையை** அவனுக்கு உண்டாக்குவேன்'' என்று தேவன் சொல்லுமிடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசிக்கு என்னவாயிருக்கிறாரோ அப்படியே ஒரு பெண்ணும் தனது கணவனுக்கு இருக்கிறாள் — துணையாக, சிநேகிதியாக! எத்தனைப் பொறுப்பு! அரைகுறையாக ஒரு பெண் அதைச் செய்யலாமா?

பெண்கள் தங்கள் வாழ்வின்மேல் ஆண்கள் அதிகாரம் செலுத்து வதை என்று வெறுத்தார்களோ அன்றிலிருந்து குடும்ப அமைப்பு உடையத் துவங்கியது. ஒரு பெண்ணுக்கு வீட்டில் அதிகாரம் செலுத்தும் ஆசையைத் தூண்டிவிட்டு பிசாசு அவளை ஆணைப்போல் மாற்று கிறான். ஒரு பெண் கணவனோடு போட்டியிடக்கூடாது, கூட்டு சேர்ந்து கொள்ளவேண்டும். அவள் கணவனுக்குக் கீழ்ப்படிந்து அடிபணிந்து போகும்போது தேவனது சாயலைப் பிரதிபலிக்கிறாள்.

2. பிள்ளைப்பேறு

கன்னியர் பலர் முதலாவது வேலை, அடுத்துதான் குழந்தைகள் என்ற கருத்தைத் தங்களை அறியாமலேயே உட்கொண்டுள்ளனர். சிலர் பிள்ளைகளே வேண்டாம் என்றுள்ளனர்; வேறு சிலர் தாய்மைப் பதவியை ஒத்திப்போடுகின்றனர். பெரிய வயிற்றையும் குழந்தைக்குப்

பாலூட்டுதலையும், வேலையை விட்டுவிடுதலையும் நினைத்தாலே அவர்களுக்கு வெறுப்பு. அலுவலகத்திற்குப் போவதை விட்டுவிட்டு வீட்டில் குழந்தையின் துணிகளை அலசிக் கொண்டிருப்பது அவர்கள் விருப்பல்ல. குழந்தை பெறுதலின் ஆசிகளுக்கும் தனிமையான எதிர் காலத்திற்கும் அவர்கள் குருடராயிருப்பது எத்தனைச் சோகம்! வேதம் பிள்ளைகளைக் கர்த்தரால் வரும் சுதந்தரம் என்று சொல்லுகிறது. இவ்வுலகிற்கு நாம் விட்டுச் செல்லும் சொத்து அவர்கள்தானே! என் கணவர் ஊழியத்திற்குச் செல்லும்போது வீட்டிலிருந்து மகளைக் கவனிப்பது எனக்குச் சிரமமாய்த்தான் இருந்தது. இன்றோ, எனது பணியையும், தரிசனத்தையும், இலட்சியங்களையும் தொடர ஒரு பிரதிநிதியை விட்டுச் செல்கிறேன் எனப் பரவசமடைகிறேன்.

வயது செல்லச்செல்ல இனவிருத்தி உறுப்புகளின் திறன் பெண்ணுக்குக் குறைவதால் பிள்ளைப் பேற்றை ஒத்திப்போடுவது நல்லதல்ல. கருத்தரிக்கும் திறன் 18 வயதில் உச்சக் கட்டத்திலிருந்து, 35 வயதில் குறையத்தொடங்கி, 48இல் பூஜ்யத்தை அடைகிறது. 35க்குப் பிறகு கர்ப்பத்தைக் காப்பதும் சற்றுக் கடினமாகிறது. வேதமும் "வாலவயதின்" புத்திரரைப் பாராட்டுகிறது. பணம், பட்டம், பதவியை விடப் பிள்ளைகள் முக்கியமன்றோ? பழைய ஏற்பாட்டில் பிள்ளைப்பேற்றின் கண்ணீர் (ஆதி 3:16) புதிய ஏற்பாட்டில் இரட்சிப்பின் களிப்பாகிறது (1 தீமோ 2:15). மெய்யாகவே, பிள்ளைகளைப் பெறுவதினால் ஒரு பெண் தன் வாழ்வின் பலபகுதிகளில் நிறைவையும் மீட்பையும் அடைகிறாள்.

இரண்டாவது மகவை ஒன்றிலிருந்து மூன்று ஆண்டிற்குள் பெற்றெடுத்தால் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் நண்பராக, துணையாக வளர்ந்து ஒருவருக்குப்பின் ஒருவராய்ப் பள்ளிக்குச் செல்லுவர். இடைவெளி அதிகமானால் தாய் கூடுதல் வருடங்கள் அடைபட்டுக் கிடக்க நேரிடும். ஓய்வு பெறும் காலத்தில் பிள்ளைகள் வாழ்க்கையில் நிலைவரப்பட்டிருப்பதையும் ஒருசில பேரப் பிள்ளைகளையும் கண்டு களிக்கவேண்டும். திருமணத்தையும் தாய்மையையும் ஒத்திப்போடுவதினால் வயது கூடி பிள்ளைகள், பேரப்பிள்ளைகளோடு விளையாடுவது கடினமாகிவிடும்.

3. பிள்ளை வளர்ப்பு

பிள்ளைகள் பிறந்தபின் ஒரு பெண் பிள்ளை வளர்ப்புக்கும் வேலைக்குமாய் ஊஞ்சலாடக்கூடாது. பணிபுரியும் பெண்கள் வீட்டில் அமர்ந்திருந்து தங்கள் தாய்மைத் திறன்களை மேம்படுத்திக் கொள்ளக் கூடாமல் தலைபோகிற அவசரமாயிருப்பார்கள். இல்லத்தரசி மன அழுத்தமின்றி அமைந்திருந்தால்தான் கணவனோ பிள்ளைகளோ

அவளைச் சுலபமாய் அணுக முடியும். எனவே சும்மாயிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் வீண் என்ற எண்ணத்திலிருந்து இல்லாள் விடுபடவேண்டும்.

துபாயிலுள்ள எனது சிநேகிதியின் மகன் வியாதிப்பட்டுக் குச்சி போலிருந்தான். சாப்பிட மாட்டான், வாந்தி எடுப்பான். அவளது செவிலியர் வேலையை ராஜிநாமா செய்துபார்க்கும்படி கூறினேன். அவளும் தைரியமாக தனது நல்ல வருமானத்தையும் சட்டை செய்யாது வேலையை விட்டுவிட்டாள். இன்றைக்கு அக்குழந்தை சுகதேகியாக வளர்ந்துள்ளான். அவனது வியாதி மந்திரம்போல் மறைந்தது என்றாள். பலர் இப்படிப்பட்ட ஆலோசனையை அசட்டை செய்கின்றனர். பலாப்பழம் கிடைத்தால் நல்லதுதான். ஆனால் பிள்ளை போய் பலாப்பழம் கிடைத்து என்ன பயன்?

ஒரு பிள்ளை உடலிலும், அறிவிலும், ஆவியிலும், பண்பிலும் வளரவேண்டும். இத்தேவைகள் பள்ளியிலும் ஓய்வுநாள் வகுப்பிலும் முழுவதுமாய்ச் சந்திக்கப்படுவதில்லை. தாய் போதுமான அளவு நேரம் செலவழிக்காவிடில் அவர்கள் தம் வாழ்வில் சில பகுதிகளிலாவது ஊனமுற்றோராய்த்தான் இருப்பர். தாயின் பராமரிப்பற்ற பிள்ளைகள் பண்பற்றவராயும், மரியாதையற்றவராயும், கொடியவராயும், தன்னலக் காரராயும், முரடராயும், ஒழுக்கமற்றவராயும், மன நிலையில் பாதிக்கப் பட்டவராயும் வளருவர். மனநிலைப் பிரச்னைகளும் தற்கொலைகளும் கூடிக்கொண்டே வருவதற்குக் காரணம் தாய் வீட்டிலில்லாதது தவிர வேறென்னவாயிருக்கமுடியும்?

பிள்ளைகளை வளர்ப்பது மக்கு வேலையல்ல. வீட்டிலிருப்பதால் உங்கள் படிப்பை வீணடிப்பதாய் நினைக்கத் தேவையில்லை. உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் கற்றுக்கொடுக்கும்போது உங்கள் பிள்ளையின் பிள்ளைக்கும் வரவிருக்கும் தலைமுறைகளுக்கும் கற்றுக்கொடுக்கிறீர்கள். நெளிந்து நழுவி ஓடத் துடிக்கும் ஒரு சுட்டிக் குழந்தைக்குக் கற்றுக்கொடுப்பது நேரத்தை வீணடிப்பதல்ல. பிள்ளைகளைக் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்திற்கோ விடுதிகளுக்கோ இளவயதிலேயே அனுப்புவது நல்லதேயல்ல. நீங்கள் ஒருவேளை விடுதியிலோ தாத்தா பாட்டியிடமோ வளர்ந்திருக்கலாம். அதைத்தான் உங்கள் பிள்ளைகளும் அனுபவிக்க விரும்புகிறீர்களா? ஞானமாய்த் தெரிந்தெடுங்கள் — பணமா, கவுரமா, பிள்ளைகளா? மாமியார் மாமனாரோ, தாத்தா பாட்டியோ, பணியாட்களோ தாயின் இடத்தை எடுக்கவே முடியாது.

4. வீட்டை நடத்துதல்

ஓர் இல்லாளை ''வேலை செய்கிறீர்களா?'' என்று கேட்டால், ''இல்லை'' என்கிறாள். அவளைக் காட்டிலும் அதிகமாக வேலை

செய்வது யார்? வீட்டை நடத்துதல் முழுநேர வேலை. கடும் வேலை நிறைந்த இரண்டு இடங்களாகிய வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் தாவித் தாவி இரண்டிலும் சிறப்பெய்துவது கூடாத காரியம். இல்லாளின் கைகளுக்கு ஓய்வே கிடையாது. எப்போதுமே துவைக்கத் துணி இருக்கும், கழுவத் தட்டுமுட்டுகள் இருக்கும், தைக்கப் பொத்தான் இருக்கும், சரி செய்யக் கிழிசல் இருக்கும், துடைக்கத் தரையிருக்கும், சுத்தம் செய்ய மூலைமுடுக்கு இருக்கும். அளவுக்கு மீறிய வெளி வேலையை இழுத்துப் போட்டுக் கொள்வதால் இப்பொழுது அதிகம் பெண்கள் மன நோய்க்கும், பிற நோய்களுக்கும் ஆளாகின்றனர். பெண்கள் அழுத்தத்தைத் தாங்கப் படைக்கப்பட்டவர்களல்ல. பேராசை கொள்ளும் பெண்கள் கிரயம் செலுத்தத்தான் வேண்டும். அவளுக்கும் 24 மணிகள்தானே உண்டு. அவளது வெளிவேலை அவளது சுகத்தையும், வீட்டையும், குடும்பத்தையும் பாதிக்காமல் இருக்காது.

வீட்டை நடத்துதலைக் குறித்து ஒரு புத்தகமே எழுதலாம். ஆனால் சமையல் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக ஆண்கள் விரும்பிச் சாப்பிடுபவர்கள். ஒவ்வொரு ஆணும் வித்தியாசமானவன். நாள் ஒன்றிலிருந்து மனைவி கணவனின் விருப்பு வெறுப்புகளை அறியத் துவங்க வேண்டும். காபி கொதிக்கக் கொதிக்கவா, சூடாகவா, வெதுவெதுப்பாகவா, ஆறியா, குளிர்ந்தா? இனிப்பு அதிகமா, சராசரியா, குறைவா? பாலாகவா, தண்ணியாகவா, சமாராகவா, கடுங்காப்பியா? மற்றவைக்குக் கற்பனை செய்து பாருங்கள்!

என் மாமியார் ஆலயத்திற்குப் போகும்போது ஞாயிறு மதியம் மட்டும் என்னைச் சமைக்க அனுமதிப்பார்கள். அவர்கள் தலை மறைந்ததும் சமையல் புத்தகத்தைத் திறந்து வைத்துக்கொண்டு வரிந்து கட்டிக்கொண்டு அங்குமிங்கும் ஓடி, முதல் நாள் சாம்பார், ரசம், காய் எல்லாம் செய்து மேசையில் வைத்து ஆவலாய்க் காத்திருந்தேன். தாயும் மகனும் மதியம் 1.30 மணிக்குத் திருவிருந்து ஆராதனை முடித்துக் களைப்பாய் அமர்ந்து எல்லாவற்றையும் திறந்து பார்த்து, "சாதம் எங்கே?" என்றனர். இடி இடித்தது போல, சாதம் சமைக்கவில்லையே என்பதை உணர்ந்தேன்! இன்னொரு நாள் குக்கரில் ஆவி வந்ததும் சாதம் செய்யக் குண்டைப்போட்டு பத்து நிமிடங்களில் அணைத்து விட்டேன். அன்றும் 1.30 மணிக்குத் திறந்தால் குக்கருக்குள் தண்ணீர் மட்டும் இருந்தது; கழுவிய அரிசியைப் போட மறந்து விட்டிருந்தேன்! எந்தப் பெண்ணும் என்னைப் போலிருக்கக் கூடாது. இவையெல்லாம் அனுபவத்தில் வருபவை. ஒரு பெண் திருமணத்திற்குப்பின் பழகத் துவங்கக் கூடாது.

நற்செயல்கள்

பெண்களுக்கு அளிக்கப்பட்ட பல ஊழியங்கள் ஊழியங்களாகவே

எண்ணப்படுவதில்லை. கீழ்க்காணும் ஊழியங்கள் பெண்களுக்கே உரித்தானவை.

அ) அந்நியரை உபசரித்தல்

முன்பின் தெரியாத ஒருவரை வீட்டிற்குள் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதல்ல, ஞானமாகவும் இருக்கவேண்டும். ஆனால் சபையில் ஒரு குடும்பத்தை இரண்டு நாள் பராமரிக்கக் கோரலாம். நமது குஜராத் மாநில ஒருங்கிணைப்பாளர் வேலையற்ற ஒரு சிலரைத் தனது வீட்டில் 3 அல்லது 6 மாதங்கள் வைத்து குஜராத்தில் வேலை வாங்கித் தந்தார். பராமரிப்பது மனைவியல்லவா? புதிய ஒருவரை வீட்டில் வைத்து உபசரிப்பது எத்தனைக் கடினம். குடிகாரர், அநாதைகள், அடிபட்டோர் இவர்களைப் பராமரித்து அனுப்புபவர்களையும் அறிவேன். இயேசு நம் வீட்டிற்கு ஒருநாள் வரலாமே? (மத் 5:35).

ஆ) பரிசுத்தவான்களின் கால்களைக் கழுவுதல்

ஊழியரைப் பராமரிப்பது பெண்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. ஊழியர் தொடர்ந்து பிரயாணம் செய்வதால் அவர்களுக்குத் தாங்கும் கரங்கள் தேவை. இயேசுவை ஏற்றுக்கொண்ட மார்த்தாள் மரியாள், அப்பொல்லோவிற்குச் சமைக்கத் தயங்காத பிரிஸ்கில்லாள், சுவிசேஷகர் குழுவை ''அநேக நாள்'' உபசரித்த பிலிப்புவின் மனைவி மற்றும் பெண் மக்களுடைய ஊழியம் இதுவே. வருகிற நாட்களில் கூடுதல் பெண்கள் வெளிவேலை எடுக்கும்போது தேவ ஊழியர் விடுதிகளில் தங்கி ஹோட்டலில் சாப்பிட்டு சீதபேதியினால் அல்லலுற வேண்டிவரும். சில இடங்களில் நாங்கள் பட்ட கஷ்டத்திற்கு அளவே கிடையாது. மனதார எங்களை உபசரிக்கும் பெண்களை மனமாற வாழ்த்துகிறோம். மிஷனரிப் பெற்றோரை விட்டுப் பிரிந்து விடுதியில் படிக்கும் எங்கள் பிள்ளைகளைச் சந்தித்து விடுமுறைக்கு அழைத்துச் செல்வோருக்காய்த் தேவனைத் துதிக்கிறோம்.

இ) உபத்திரவப்படுபவர்களுக்கு உதவி

இல்லாளே பிச்சைக்காரரைச் சந்திக்கிறாள். கிழிந்த புடவை கட்டிய விசுவாசியை ஆலயத்தில் அவளே கவனிக்கிறாள். எளியோர், தனிமையானோர், நோயாளிக்கு ஒரு வேளை உணவு அனுப்புவது மேடைப் பிரசங்கத்திற்குச் சமானம் அல்லது அதைவிட மேல்! நடைமுறைக் கிறிஸ்தவத்தைப் பயிற்சிக்கும் ஊழியரே வல்லமையான ஊழியர் என ஒருநாள் பரலோகம் வெளிப்படுத்தும். வியாதிப்பட்ட பெற்றோர், மாமியார் மாமனார், நெருங்கியோரைப் பராமரித்தல் அற்புத ஊழியம். பெண்கள் பணிபுரிவதால் வாரயிறுதியில் வந்து வியாதிப்பட்ட பெற்றோரை விசாரித்து பிஸ்கெட், ஹார்லிக்ஸ் வாங்கிக் கொடுத்து விட்டு வேலைக்கு விரைந்து சென்றுவிடுகின்றனர்.

ஈ) சேவை

இதைத் தவிர ஒவ்வொரு பெண்ணும் தனது சிறப்புத் தாலந்துகளைக் கண்டுபிடிக்கவேண்டும். கடிதங்கள் எழுதலாம், பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதலாம், புத்தகங்கள் விற்கலாம், சில சேவைகளில் பகுதி நேரமாக உதவி செய்யலாம், அயலகத்தில் கிறிஸ்துவை அறிவிக்கலாம், வீட்டில் ஜெபக்குழு நடத்தலாம், மருத்துவமனை, சிறைச்சாலை, விடுதிகளைச் சந்தித்து அங்கிருப்போரை உற்சாகப் படுத்தலாம். இல்லாள் செய்யக்கூடிய ஊழியங்களுக்குக் கரைகாணல் அரிது. அதேவேளையில் சேவை செய்கிறேன் சேவை செய்கிறேன் என்று குடும்பத்திற்குச் செய்யவேண்டியதான சேவைகளிலெல்லாம் சிறந்த சேவையில் தவறிவிடக்கூடாது.

ஆண்களுக்கு ஒரு வார்த்தை

கைநிறையச் சம்பளம் வாங்கும் பெண்களையே ஆண்கள் மணக்க விரும்புவதால் பெண்களுக்கு வேறு வழியில்லை. கணவர் ஒத்துழைத்து தம் மனப்போக்கை மாற்றிக்கொண்டு தம் மனைவியர் வீட்டை நடத்துகிறவர்களாயிருக்க அனுமதித்தாலன்றி பெண்கள் பெண்களாக வாழ்க்கை நடத்த முடியாது. பெண்கள் வேலை செய்ய விரும்புவதற்கு வேறொரு காரணம் வீட்டில் நாயாய்ச் செய்யும் வேலைகளுக்கு நாயகனிடமிருந்து பாராட்டுப் பெறுவதில்லை. அவர்களுக்கும் ஒரு மதிப்பு வேண்டுமல்லவா? மனைவி வீட்டில் செய்பவைகளுக்காய் கணவன் அவளை மெச்சிக்கொள்வானானால் அவள் திருப்தியாக இல்லத்தரசியாயிருப்பாள் (நீதி 31:29). ஒரு புதிய பிரச்னை கிளம்பி வருவதை ஆண்கள் கவனிக்க! ஆண்களைப் பின்னே விட்டுப் பெண்கள் வேகமாக ஏணியில் ஏறுகின்றனர். தராசு சீக்கிரம் சரியும். அப்போது ஆண்கள் தங்கள் மனைவியர் கூடுதல் படித்திருப்பதைச் சகிக்க வேண்டிவரும் (வந்திருக்கிறது). எனவே ஆண்கள் பெண்களை முந்த முயற்சி எடுத்தால் ஆண்கள் மெய்யாகவே ஆண்களாகவும் பெண்கள் மெய்யாகவே பெண்களாகவும் இருக்கலாம்.

வெளிவேலை செய்யும் பெண்களுக்கு நான் விரோதியல்ல. ஆசிரியர், செவிலியர், மருத்துவர் போன்றோர் இவ்வுலகிற்கு ஆற்றியிருக்கும் தொண்டினைக் குறைத்துப் பேசமுடியாது. குதிங்கால் பிடரியில் பட இவ்வுலகம் ஓடும் போட்டியில் பெண்கள் சேரக் கூடாது என்றுதான் கூற விரும்புகிறேன். பெண் படிக்கட்டும், பயிற்சி பெறட்டும். ஆனால் அவள் முதன்மையானவைகளுக்கு முதலிடம் கொடுக்கத் தவறிவிடக் கூடாது. முழுமையாய்த் தன்னைக் குடும்பத்திற்கு அர்ப்பணிப்பதினால் தன் அறிவைக் குப்பைத் தொட்டியில் போடுவதாக அவள் எண்ணத் தேவையில்லை. அவள் கூட்டுக் கிளியுமல்ல.

''நான் வெளிவேலை செய்யத் தேவை என்ன?'' என்ற கேள்வியைக் கேட்டுப் பாருங்கள். நியாயமான காரணம் உண்டா? தங்கள் ஆடம்பரத் தாகத்தை தணிக்கப் பணத்திற்காகவும் மதிப்பிற்காகவும் பல பெண்கள் பணிபுரிகின்றனர். முழுநேரம் ஆசிரியையாகப் பணிபுரிந்து பின்னர் வீட்டிலும் ட்யூஷன் எடுப்பது பேராசையன்றோ? அதே சமயம் சிறு பிள்ளைகளோடுள்ள விதவைகள் உண்டு, நோயாளியான கணவரையுடையோருமுண்டு. எளிமையான வாழ்க்கையில் திருப்தியடையப் பழகுங்கள். போதுமென்ற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் — ஆம், குடும்பத்தையும் பிள்ளைகளையும் ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறீர்கள். கணவனது வருமானம் போதாவிட்டால் வீட்டில் கைத் தொழில் செய்யலாம், ட்யூஷன் எடுக்கலாம், நோயாளிகளைப் பார்க்கலாம். பிள்ளைகள் பள்ளி வயதை அடைந்ததும் பகுதி நேரப்பணி ஒன்றைச் செய்யலாம். அதனால் குடும்பத்திற்கும் போதுமான நேரம் செலவழிக்கலாம். ஒவ்வொரு பெண்ணும் தனக்குக் கூடுதல் வருமானம் தேவையா என்பதைத் தெளிந்த புத்தியோடு தீர்மானிக்கவேண்டும்.

நாம் பெண்ணாகப் பிறந்தது யதேச்சையாக அல்ல, தேவனது தெரிந்தெடுப்பின்படியே. நாம் ஆண்களைப் போல் மாறினால் தேவனது சித்தத்தை முறியடிக்கிறோம். ''பெண்ணாகப் பிறந்திடவே மாதவம் செய்திடல் வேண்டுமம்மா'' என்று பாடினார் பாரதியார். எனவே பெண்ணாகப் பிறந்ததில் பெருமிதங்கொண்டு, பெண்ணே, நீ பெண்ணாயிரு!

7

கணவன் மனைவி தீர்மானங்கள்

1. ஒருவரையொருவர் நேசிக்கத் தீர்மானிக்கிறோம்.

எதுவும், எவரும் எங்கள் அன்பை அணைத்துப்போட அனுமதிக்க மாட்டோம். அணைந்து போவதுபோல் காணப்படும் அன்பை உடனுக்குடன் தூண்டி விடுவோம். ஒருவரையொருவர் பாசமானதொரு பெயரோடு கூப்பிடத் தீர்மானிப்பதோடல்லாமல், அதை இன்றே வெட்கப்படாமல் துவங்கவும் தீர்மானிக்கிறோம். ஒவ்வொரு நாளும் சொல்லினாலும் செயலினாலும் எங்கள் அன்பை வெளிப்படுத்த ஏதாவதொன்றைச் செய்வோம். திருமண நாளையும் பிறந்த நாட்களையும் நினைவுகூர்ந்து கொண்டாடுவோம். ஒருவரையொருவர் அடிக்கடி பார்த்துப் புன்னகை பூப்போம் (ரோ 13:8-10; 1 தெச 3:12; 4:9; 1 பேது 1:22).

2. ஒருவரையொருவர் பாராட்டத் தீர்மானிக்கிறோம்.

துணைவரது கெட்ட காரியங்களை மனதிலிருந்து ஒதுக்கி, நல்ல காரியங்களைப் பாராட்டத் தீர்மானிக்கிறோம். புகழ் வார்த்தை சொல்ல எங்கள் அகங்காரம் எங்களைத் தடுக்கவிடமாட்டோம். அடுத்தவரது தாலந்தோ வரமோ அற்பமாய்த் தோன்றினாலும் அதை வளர்ப்பதற்கு ஒத்துழைப்போம். துணைவர் பிறரால் புகழப்படும்போது பொறாமை கொள்ளாமல் மகிழ்வோம் (கலா 5:26; பிலி 2:3,4).

3. ஒருவரையொருவர் மன்னிக்கத் தீர்மானிக்கிறோம்.

இறந்த காலத்தைப் புதைத்து விடுவோம். கடந்தகாலப் பாவங்கள், தவறுகள், அவமானங்களைக் குறித்துச் சிலேடையாய்க் கூடப் பேச மாட்டோம். கடந்த காலத்தைச் சுட்டிக்காட்டி, பிசாசு எங்களைக் குறைவெண்ணத்தால் நிரப்ப இடங்கொடாமல், ஒருவரையொருவர்

அதிலிருந்து வெளிவரக் கைதூக்கிவிடுவோம். தினமும் இரவு தூங்கு முன் மனத்தாங்கல்களைச் சரிசெய்து ஒன்றாக ஜெபிப்போம் (எபே 4:2,3,32; கொலோ 3:13; யாக் 5:16).

4. ஒருவரையொருவர் மதிக்கத் தீர்மானிக்கிறோம்.

ஒருவரையொருவர் மட்டந்தட்டவோ கேலிப்பொருளாக்கவோ மாட்டோம். ஒருவரது ஆலோசனையை சிந்தித்துப் பார்க்காமலே தள்ளிவிட மாட்டோம். அடுத்தவரது தோற்றம், நடை, உடை, பாவனை, குடும்பம் போன்றவற்றைக் குறித்துப் புண்படுத்தும் சொற்களையோ, கடும் சொற்றொடர்களையோ கூற மாட்டோம். திருத்தங்களைத் தனிமையில் அன்போடும் மென்மையோடும் சொல்வோம். விவாதிக்கும் போது கையை அல்லது சத்தத்தை உயர்த்தவோ, பொருட்களை எறியவோ, அடிக்கவோ மாட்டோம். துணைவரைக் குறித்துப் பிள்ளைகளிடம் குறைத்துப் பேசமாட்டோம் (எபே 5:33; 1 பேது 3:7,8; ரோ 12:10).

5. ஒருவரையொருவர் திருப்திப்படுத்தத் தீர்மானிக்கிறோம்.

''நான்'' அல்ல; துணைவரையே கவனத்தின் மையமாக்குவோம். உணவு, பொழுதுபோக்கு, உடை, நண்பர், பிள்ளைகள், விளையாட்டு, பாலுறவு போன்றவற்றில் அடுத்தவரைத் திருப்திப்படுத்துவதில் கவனமாயிருப்போம். ''உங்களுக்கு என்ன வேண்டும்?'' அல்லது ''உங்களுக்கு என்ன விருப்பம்?'' அல்லது ''எது நன்றாயிருக்கிறது?'' அல்லது ''நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்காமல் முடிவு எடுக்கமாட்டோம். ஒருவரையொருவர் திருப்திப்படுத்துவதில் வேத வரம்பை மீறாமலிருக்கத் தீர்மானிக்கிறோம். திருப்தியடைய அளவுக்கு மீறி எதிர்பார்த்து அடுத்தவரை அலைக்கழிக்க மாட்டோம் (1 கொரி 7:3-5,33,34ஆ; 10:24).

6. ஒருவரையொருவர் புரிந்துகொள்ளத் தீர்மானிக்கிறோம்.

துணைவரது வாஞ்சைகள், உணர்வுகள், மனக்காயங்கள், கனவுகள், துக்கங்கள், களிப்புகளைப் புரிந்துகொள்ள முழுமுயற்சி எடுப்போம். அன்னாரது உடல், சமுதாய, ஆன்மீக மற்றும் மனத் தேவைகளைப் புரிந்து கொள்ள முயற்சிப்போம். நாம் மனதிலிருப்பதைக் காணக் கூடியவரல்ல என்பதை உணர்ந்து, துணைவரது எண்ணங்களை ஊடுருவவோ குற்றஞ்சாட்டவோ முயலமாட்டோம். புண்படும்போது அதை அடக்கிக்கொள்வதினால், துணைவர் நம்மைப் புரிந்துகொள்வதைக் கடினமாக்காமல், அதைக் கோபமின்றி எடுத்துரைக்கத் தீர்மானிக்கிறோம் (1 சாமு 1:8; ரோ 14:2,3; கலா 6:2; 1 தெச 4:18).

7. **ஒருவரையொருவர் தொடத் தீர்மானிக்கிறோம்.**

ஒருவரையொருவர் தொடக் கூச்சப்படமாட்டோம். தொடுவது பாலுறவிற்கு மட்டும்தான் என்ற எண்ணத்தை அகற்றுவோம். பேசும் போதும், சிரிக்கும்போதும், விளையாடும்போதும் ஒருவரையொருவர் தொடுவோம். வைபவங்களுக்கு வெளியே சென்றால் சேர்ந்து உட்காருவோம். தூங்கச் செல்லுமுன் கரங்கோர்த்து ஜெபிப்போம். அசருமுன் கைகோர்த்திருப்போம். தனித்தனியே தூங்கமாட்டோம் (உன் 1:16ஆ; 8:3; ரோ 16:16).

8. **ஒருவரோடொருவர் உறவாடத் தீர்மானிக்கிறோம்.**

சாவகாசமாக உட்கார்ந்து பேசத் தினமும் நேரம் ஒதுக்குவோம். அன்றைய நாளின் நிகழ்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளுவோம். உரையாடல் சண்டையில் முடிந்தால், சோர்ந்துபோகாமல் தினந்தோறும் முன்னேறுகிறோமே என ஊக்கங்கொள்ளுவோம். துணைவர் விரும்பாத வார்த்தைகள், காரியங்களை ஒழித்து மதுரமான பேச்சுத் துணைவராக மாறக் கற்றுக்கொள்வோம். ''தெரியாமல் உன்னைக் கட்டி விட்டேன்'' என்று ஒருபோதும் சொல்லமாட்டோம். விவாகரத்தைக் குறித்துப் பேசவே மாட்டோம் (உன் 2:14; 4:11; கொலோ 3:9).

9. **ஒருவரையொருவர் கவனித்துக் கேட்கத் தீர்மானிக்கிறோம்.**

ஒருவர் பேசும்போது செய்யும் வேலையை நிறுத்திக் கவனம் சிதறாமல் கவனிப்போம். தவிர்க்க முடியாத சூழ்நிலை தவிர மற்றபடி ஒருவர் பேசும்போது அவர் கண்களில் பார்வையைப் பதிப்போம். ஏற்ற பதிலளிப்போம். குறுக்கிடாமலும், ''வாயை மூடு'' அல்லது ''போதும், போதும்'' என்று அடக்காமலுமிருப்போம். கொட்டாவி விடுவதினாலோ, பேச்சை மாற்றுவதினாலோ, கவனியாமல் போய் விடுவதினாலோ பேசுபவரைச் சோர்படையச் செய்யாமல் உற்சாகமாய்க் கேட்போம். அமைதியினால் பதிலளிக்கமாட்டோம் (எபே 5:21; 1 பேது 5:5; நியா 13:6-8,22,23).

10. **ஒருவருக்கொருவர் உதவத் தீர்மானிக்கிறோம்.**

அடுத்தவர் வேலைப் பளுவினால் தவிக்க விடமாட்டோம். ஒருவர் திணறும்போது அடுத்தவர் கைகொடுப்போம். ஒருவர் சுகவீனமடையும் போது ஏற்ற கரிசனை காட்டவும் கடமையைச் செய்யவும் தயங்க மாட்டோம். துணைவருக்கு உதவி தேவைப்படும் போது எரிச்சலடைய மாட்டோம். ஒருவரது ஆபத்தில் ஒன்றாக நிற்போம். ஒன்றாக வேதம் வாசிப்பதினாலும் ஜெபிப்பதினாலும் ஆன்மீக ஒத்தாசையாவோம். ஆன்மீக அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளுவோம். ஒருவர் விழும்போது குற்றச்சாட்டுகளைக் குவிக்காமல் கரங்கொடுத்துத் தூக்கிவிடுவோம் (ரோ 14:19; 15:14; 1 கொரி 11:33; கொலோ 3:16).

8

கூட்டைக் கலைக்கிறீர்களா?

ஆயிரத்தொரு காரியங்களில் பயிற்சி பெற்றும் தங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ளத் தெரியாத ஒரு புதிய தலைமுறை உருவாகிக் கொண்டிருக்கிறது. காபி கூட போட்டுக் குடிக்கத் தெரியாத வளர்ந்த குழந்தைகள் இவர்கள்! சலிப்புடன் வாழ்ந்து பிறரையும் சலிப்படையச் செய்யும் முதிர்ந்த குழந்தைகளை உலகிற்குள் அனுப்பிக்கொண் டிருக்கும் பெற்றோரே, கவனம் !

ஒரு கூலிக்காரி தனது 1½ வயது குழந்தையைத் தரையில் இருத்தி, இலையைப் போட்டு, சாதத்தைக் கொட்டிவிட்டுத் தன் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்த காட்சியைக் கண் சிமிட்டாமல் கவனித்தேன். இத்தனை சிறு குழந்தை தானாய்ச் சாப்பிடுமா? சொல்லி வைத்தது போல் அவனும் ஒரு பருக்கை சிந்தாமல் முடித்துவிட்டு விரல்களை நக்கத் துவங்கினான். சிந்தித்தேன். நாமோ நாலைந்து வயதுவரை தட்டைத் தூக்கிக்கொண்டு பின்னாலே ஓடிக் கெஞ்சிக் கூத்தாடி ஊட்டுகிறோம். அந்த ஏழைப் பெண்மணிக்குக் கூட்டை கலைக்கத் தெரிந்திருந்தது. உழைப்பில்லையேல் உணவில்லை என்ற நிலையால் பழக்கிவிட்டாள் பிள்ளையை. சிந்தினால் வயிறு நிறையாது என்றறிந்த குழந்தையின் பிஞ்சுத் தசைகள் பருக்கை தவறாமல் வாயில் போடப் பயின்றுவிட்டன!

குழந்தைகளின் எண்ணிக்கை குறையக் குறைய நாம் பிள்ளை களைக் கூடிய நாள்வரை குழந்தைகளாகவே வைத்துக் கொள்ளப் பிரயாசப்படுகிறோமா? இதனால் அவர்களது எதிர்காலத்திற்கு வரும் பாதிப்பைச் சிந்திக்கிறோமா? பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும்போது அவர்களது மனது மட்டுமல்ல, பொது அறிவு, உடல், ஆவி, ஆன்மாவும் ஒருங்கே விருத்தியடைந்து அவர்கள் முழுமையானவர்களாகவேண்டு மென்பதை மறந்துவிடக்கூடாது. எப்படிச் சாதிப்பது இதை?

கழுகு தன் குஞ்சுகளைப் பறக்கப் பயிற்றுவிக்கும் படமொன்றை வேதத்தில் காண்கிறோம். அதைத்தானே நாமும் செய்ய விழைகிறோம். பிள்ளைகள் உயரப் பறக்க விரும்புகிறோம். இப்படித்தான் ஆண்டவரும் தன் குமாரன் இஸ்ரவேலைப் பழக்குவித்தார். ''அவனை நடத்தினார், அவனை உணர்த்தினார், அவனைத் தமது கண்மணியைப் போலக் காத்தருளினார்.'' அதன்பின் இஸ்ரவேல் தானே எதிரிகளோடு சண்டை போட விட்டுவிட்டார். வானத்தின் மன்னாவை நிறுத்தி அவனையே பயிர் விளைவித்து அப்பம் சுட்டு சாப்பிட விட்டுவிட்டார். அதன் பின்பு அற்புதப் பராமரிப்பு கிடையாது!

''கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின் மேல் சுமந்துகொண்டு போகிறது போல...'' (உபா 32:10,11).

கழுகுகள் பாதுகாவலான இடத்தில் உறுதியான கூட்டைக் கட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். பின்பு பெண் கழுகும் ஆண் கழுகும் குஞ்சுகளுக்கு வாயில் உணவூட்டும். குஞ்சுகளுக்கு சிறகு வளர வளர கழுகுகள் கூட்டைக் கலைக்கத் துவங்கி ஒவ்வொரு குச்சாக உருவுமாம். கூடு கலையக் கலைய குஞ்சுகள் வசதியின்றித் தடுமாறி வெளியே விழும். உடனே பயந்து உயிர் பிழைக்கச் சிறகுகளை அடிக்கும். சிறிது தூரம் பறந்து விழப்போகும் தருவாயில் கழுகு அடியில் சென்று ஏந்திக்கொள்ளும். குஞ்சுகள் பயந்தாலும், கோபப்பட்டாலும், முறுமுறுத்தாலும் இப்பயிற்சி திரும்பத்திரும்பக் கொடுக்கப்படும். ஒரு நாள் குஞ்சுகள் பலமுள்ளவைகளாகச் சுதந்திரமாகப் பரந்த இவ்வுலகிற்குள் வானளாவப் பறந்து செல்லும். கழுகு தன் கூட்டைக் கலைக்கா விட்டால்... சொல்லத் தேவையில்லை!

முந்நாட்களில் இப்படித்தான் இருந்தது. இன்றோ இந்நிலை மாறி வருகிறது. பிள்ளைகளுக்கு வர வர வசதிகளைக் குறைப்பதை விட்டு அவர்கள் நன்றாய்ப் ''படிக்கட்டுமே'' என்று வசதிகளைக் கூட்டிக் கொண்டே போகிறோம். வீட்டு வேலை அதிகமாகி வீட்டுப்பாடம் செய்யமுடியாமல் போய்விடுமோவென வேலைக்கு ஆளமர்த்திக் கொள்ளுகிறோம். பிள்ளைகள் பெரியவர்களாகும்வரை இப்படி வளர்த்து விட்டு ஒருநாள் கோவில் மணி ஒலித்த விநாடியிலே அவர்கள் கணவனாக மனைவியாக மாறிவிட எதிர்பார்க்கிறோம். முதல் குழந்தை பிறந்தவுடனே அவர்கள் அனுபவமுள்ள தகப்பனாக தாயாக மாறிவிடுவரென நினைக்கிறோம்.

இந்தப் பருப்பு வேகாது, பெற்றோரே! உங்கள் பிள்ளைகள் அடிப்படையில் கணவராக, மனைவியராக, தகப்பன்மாராக, தாய்

மாராகவே ஆகப்போகிறார்களென்பதை நினைவிலிருத்துவீர். ''பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்'' (நீதி 22:6). அதாவது, ஒரு சிசு தன் முதிர்ச்சியின் பாதையிலே கொஞ்சம் கொஞ்சமாய்த் தன் பெற்றோரை விட்டுப் பிரிந்து சுயநம்பிக்கையுடன் தன்னை மட்டுமல்ல, ஒரு குடும்பத்தையும் நடத்தத் தகுதி எய்த வேண்டும். தங்களைக் கவனித்துக்கொள்ள இன்று நம் பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்கத் தவறுவோமானால் நாளை எப்படித் தங்கள் குடும்பங்களைக் கவனிப்பார்கள்? தொட்டில் பழக்கமல்லவோ சுடுகாடு மட்டும் !

இப்பயிற்சி துவங்குவதெப்போ? ஆறு மாதத்திலிருந்து ஓராண்டிற்கிடையில் துவங்கலாம். ஆச்சரியமாயிருக்கிறதா? ஆம். குழந்தை அழத்தான் செய்யும். இருவருக்குமே கடினம்தான். இருப்பினும் தாயானவள் பால்மறக்கப்பண்ணுகிறாள். ஐயோ பாவமெனத் தாய் தொடர்ந்து பால் மட்டுமே கொடுத்தால் இருவருக்குமே அது நன்மையல்ல, தீமைதான். தன் இதயத்தை தாய் கடினப்படுத்திக் கொண்டால்தான் சற்று விடுதலையாக முடியும். குழந்தைக்கு விடுதலை மட்டுமல்ல, தேவையான வேறு சத்துணவும் கிடைக்கும்.

சாதத்தைப் பிள்ளை சிந்தினாலும் தட்டிலிருந்து தானாகச் சாப்பிட அனுமதிக்கவேண்டும். சாப்பிட மறுத்தால் விட்டுவிட வேண்டும். இடையே ஒன்றும் கொடுக்கக்கூடாது. அப்படியானால் அடுத்த உணவை ஆவலோடும் பசியோடும் சாப்பிடுவான். பிள்ளைகள் விரும்பாததைச் சாப்பிடாததின் காரணம் சிறிது நேரத்தில் பிஸ்கெட் கிடைக்கும் என்பதினால்தான். இல்லாவிட்டால் அம்மா தட்டைத் தூக்கி கொண்டு பின்னாலே வருவார்கள் என்பதினால்தான். அப்படி அலைக்கழிக்க விடாதீர்கள்.

நடக்கக்கூடிய பிள்ளையைத் தூக்கித் திரியாதீர்கள். தூக்குவதினால் தொல்லை குறைவானலும் அவனால் கூடியமட்டும் நடக்கட்டும், பின்பே தூக்குங்கள். பிள்ளை வளர்ப்பில் தாத்தா பாட்டிமார் ஒத்துழைக்கவேண்டும். பெற்றோர் உணவு கொடுக்காமல் தண்டிக்கும்போது நீங்கள் ஒளித்துக் கொடுக்கக் கூடாது. பெற்றோர் தடுக்கத் தடுக்கப் பிள்ளையைத் தூக்கிச் சுமக்கக்கூடாது. கணவன், மனைவி, அண்டை வீட்டுக்காரர், நண்பர் சேர்ந்து நிற்க வேண்டும். பெற்றோர் செய்ய மறுத்ததைச் செய்து கொடுக்கும் பிறர், பிள்ளைகளுக்குப் பெருந்தீமை இழைக்கின்றனர். உதவுகிறோம் என்றெண்ணும் நண்பரே பிள்ளையின் பயிற்சிக்கும் இடையூறாகலாம்.

பிள்ளைகள் வளரும்போது பரஸ்பர உதவியில் பயிற்றுவியுங்கள். கூட்ட, துடைக்க, கழுவ, துவைக்க, கடைக்குச் செல்ல, சைக்கிள்

அல்லது கார் துடைக்க அவர்கள் உதவி செய்யட்டும். நாமே செய்யாமல் வேலையாளோ, சிப்பந்தியோ, ஓட்டுனரோ இவற்றைச் செய்தால் பிள்ளைகள் இவற்றைக் கற்றுக்கொள்ளப்போவதேயில்லை என்பதைக் கற்றறிவீர், பெற்றோரே!

பத்து வயதிற்குமேல் பிள்ளைகள் சாதாரணமாக ஒரு உப்புமா கிண்டலாம். தாய் வரிந்து கட்டிக்கொண்டு அவர்களைப் பள்ளிக்கு அனுப்ப அலைமோதத் தேவையில்லை. தலைவலியோ 99 டிகிரி ஜுரம் வந்தாலோ படுத்துக்கொள்ளுங்கள். ரொட்டியில் முட்டை தடவிச் சாப்பிடத் தெரியாவிட்டால் பட்டினியாய்ச் செல்லட்டும். பலகாரம் வேண்டுமென்றால் மூலப்பொருட்களை வாங்கிக் கொடுத்து, செய்முறையும் சொல்லித்தாருங்கள். ஆனாலும் கேஸ் அடுப்பு, மின்சாரக் கருவிகளை அவர்கள் கையாளும்போது அவர்கள் மீது அசைவாடிக் கொண்டேயிருங்கள். சற்று உதவி செய்யுங்கள். தவறிழைப்பார்கள், வீணாக்குவார்கள், கண்டுகொள்ளாதீர்கள். அப்படித்தான் படிப்பார்கள். பொறுமையாய்க் கற்றுக்கொடுங்கள். டிபன் வேண்டாமென்று சென்றார்களானால் பரிதாபப்படாதீர்கள். வானம் இடிந்து விழுந்துவிடாது. எந்த சிட்சையும் துக்கமாய்த்தான் காணும்; துக்கம் தராத சிட்சை சிட்சிக்காது. வீட்டுப் படிப்போடு வீட்டு வேலையும் செய்தால் பிள்ளைகள் சோம்பேறிகளாக அசையாமல், விறுவிறுப்பாயிருப்பார்கள். ஒவ்வொரு பிள்ளைக்கும் தினசரி விட்டுவேலை இருக்கவேண்டும். செய்ய மறுத்தால் TV போன்ற சிலாக்கியம் அல்லது ஒரு நேர உணவைக்கூட மறுப்பதில் தவறில்லை. ''ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது'' என்று பவுல் 'கட்டளையிட்டான்' (2 தெச 3:10). வேதக் கட்டளைகளைப் பின்பற்ற குற்றவுணர்வடைய வேண்டியதில்லை.

பத்து அல்லது பன்னிரெண்டு வயதைத் தாண்டிய பிள்ளைகள் உடைகளைத் துவைத்துத் தேய்க்க மறுத்தால் கசங்கின அழுக்குடையுடன் பள்ளிக்குச் செல்லட்டும். தாஜா பண்ணி, திட்டி, மிரட்டி, கடைசியில் ஒன்றும் பலிக்காமல் நீங்களே குறுக்கு வலியோடு செய்து கொடுக்கிறீர்கள், அல்லது வேலைக்கு ஆள் அமர்த்துகிறீர்கள். பதிலாக, கோபப்படாமல், பேசாமல் விட்டுவிடவேண்டியதுதானே. அழுக்குத் துணி குவியும். அமைதியாயிருங்கள். பின்பு அழுக்கிலேயே சுமாராயிருப்பதை எடுத்து அணிந்து செல்வாள். மூக்கைப் பொத்திக் கொள்ளுங்கள். இதுவரை தாக்குபிடித்தவர்கள்கூட இனி முடியாதென்று தோல்வியை ஒத்துக்கொண்டு துவைத்துக் கொடுத்து விடுவர். பிடிவாதமாய் நின்றால் மகள் முறுமுறுக்கலாம், கோபப்படலாம், அன்பில்லை என்றெல்லாம் கூறி உங்களைக் குற்றவுணர்வடையச் செய்யலாம், மூஞ்சைத் தூக்கிக் கொண்டிருக்கலாம். வார்த்தைகளை

வீணாக்காதீர்கள். அன்பைச் சொரியுங்கள். ஆனால் போரை நிறுத்தி விடாதீர்கள். அடிமேல் அடி அடித்தாலும் அம்மா நகர மாட்டார்கள் என்று புரிந்தால் மட்டுமே மகள் அசைவாள். இது ஓர் எடுத்துக்காட்டுதான். இழுபறியாகத்தான் இருக்கும். பிள்ளைகள் காலாலிட்டதைப் பெற்றோர் தலையால் செய்ய வேண்டுமென்பதில்லை. பிள்ளைகள் பொறுப் பேற்கப் பொறுப்பேற்கப் பெற்றோர் சற்றுப் புண்ணியமாக நேரத்தைச் செலவழிக்க வேண்டும். குணசாலிப் பெண் (நீதி 31) செய்ததையெல் லாம் செய்யப் பார்த்து மயங்கி விழுந்தவர்களே, இப்போது அவளது இரகசியம் புரிகிறதா?

அப்படியானால் பிள்ளைகள் பழகிவிடுவார்களா? சொல்ல முடியாது. போராட்டம் நீங்கள் நினைத்ததைவிட நீளலாம். ஒரு முறை, இரண்டு முறை, மூன்று முறை, பத்து முறை சொன்ன பின்பு பிள்ளைகள் மாறிவிடுவர் என்று பெற்றோர் எதிர்பார்க்கக் கூடாது. நாமே செய்து விட்டால் தாவிலையாகத் தெரியும். இங்கேதான் பெற்றோருக்குப் பொறுமை தேவை. பயிற்சி என்பது தினந்தினம், வாரா வாரமாக, மாதா மாதமாக, வருடா வருடமாக செய்ய வைப்பது என்கிறார் Dr. கிளைட் நாரமோர் என்ற கிறிஸ்தவ மனோதத்துவர். எரிச்சலின்றி அன்போடும் பொறுமையோடுமிருங்கள். சிலவேளை அவர்கள் நம்மை விட்டுச் செல்லும்வரைகூட போராட்டம் நீடிக்கலாம். நீங்கள் இலவு காத்த கிளியல்ல. பலன் ''பிற்காலத்தில்!'' (எபி 12:11). கட்டுப்பாடுள்ளவர் களாய் உலகில் வாழும்போது பிள்ளைகள் உங்களை ஓயாமல் வாழ்த்துவார்கள்.

இந்தக் கைகலக்கா குஸ்தியின்போது நீங்கள் குழப்பமடையலாம், குற்றவுணர்வடையலாம். ஆனால் கொடுமைப்படுத்தாமல் கடினமாக, உறுதியாக நின்றுவிட்டால் பொதுவாகச் சுபமாக முடியும். செய்ய முடியாமைக்கு ஏதோ ஒரு நாள் சரியான காரணமிருந்தால் விட்டுக் கொடுங்கள். கட்டுப்பாட்டோடுங்கூட ஏராளமான குதூகல வேளைகள், குடும்பப் பொழுதுபோக்குகள், பாக்கெட் பணம், சற்று சுயாதீனம், செய்தவற்றிற்குத் தாராளமான பாராட்டுகள் இருப்பின் கட்டுப்பாடு கழுத்தறுப்பாகத் தெரியாது.

நாமெல்லாம் மணமான பின்தான் சமைக்கக் கற்றுக்கொண்டோ மெனப் பெருமை பாராட்டுவதில் என்ன இருக்கிறது. நமது பிள்ளை களும் தினசரிச் சமையலுக்கு இடைவிடாமல் ஜெபிக்க வேண்டியது தான். பழக்கத்தினால் செய்பவர்களது லாவகமும் தரமும் அது தனிதான். ஐந்தில் வளையாததா ஐம்பதில் வளைந்துவிடும்? கணவனால் மனைவி யால் மாமியாரால் கட்டுப்பாடு கற்பிக்கப்படுவது பயங்கரமாயிருக்குமே.

பெண்பிள்ளைகள் தாங்கள் பிரதானமாக மனைவியரும், தாய்மாரும்,

வீட்டை நடத்துகிறவர்களுமாகவேண்டும் என்ற உணர்வோடு வளர வேண்டும். பெண்மையின் சிறப்பு, தாய்மையின் மேன்மை, பிள்ளை வளர்ப்பின் ஆனந்தம், குடும்பத்தைப் பராமரிப்பதின் பரம திருப்தி, விருந்தோம்பல், சமையற்கலை, வீட்டைப் பேணுதல் போன்றவற்றை அவர்கள் அறியவேண்டும். வீட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஈடு படுவதினாலேயே இது சாத்தியமாகும். எந்தக் குழம்புக்கு எந்தக் கூட்டு வைக்கவேண்டும் எனத் தெரிந்திருக்கவேண்டும். மேசை போட்டுத் தட்டு, தண்ணீர், உப்பு எல்லாம் வைக்கப் பழக்குங்கள். இல்லாவிடில் கணவனது தேவையை முதலில் கவனிக்க மறந்து குஷாலாக உட்கார்ந்து சாப்பிடத் துவங்கிவிடுவார்கள்.

கர்ப்பந்தரித்ததால் குற்றவுணர்வடையும் M.A, M.Phil, டாக்டர்கள், எஞ்சினியர்கள் இன்று பலர் வேலை கெட்டுவிட்டதென்று பிள்ளையை வெறுக்கிறார்கள். பிள்ளையின் துணி கசக்கும் போதும், காய்கறி வெட்டும்போதும் வீட்டில் நமக்கென்ன வேலை எனச் சிந்திக்கிறார்கள். தங்கள் படிப்பு விருதாவென விரக்தியடைகிறார்கள். இவர்கள் பிள்ளையைப் போட்டுவிட்டுப் பலாப்பழத்தை எடுத்தாலும் ஆச்சரியமில்லை.

பிள்ளைகள் எண்ணிக்கை குறைந்து நவீனச் சாதனங்கள் கூடக் கூட பெண்கள் எட்டி நடைபோடுகிறார்கள். நல்லது. அதனால் அவர்கள் ஆண்களைப் போலாகி தங்கள் கணவர் பெண்களாகிவிட எதிர்பார்க்கக் கூடாது. பெண் பெண்ணின் வேலையைச் செய்து, ஆண் அவனது வேலையைப் பார்க்க அவனை விட்டுவிட வேண்டும். ஆண் ஆணாக இருக்கத்தான் சரி; பெண்ணாயிருக்கச் சரிப்படமாட்டான். நெருக்கடிச் சமயங்கள் தவிர மற்றபடி வீட்டுப் பெண்ணானவளே சமையல், துவையல், கழுவல், வீட்டை நடத்துதல் போன்றவற்றைக் கவனிக்க வேண்டும். உங்கள் மகள் போகவேண்டிய வழியிலே அவளை நடத்துகிறீர்களா? (1 தீமோ 5:10,14).

ஒருமுறை நீலகிரிக்குப் போயிருந்த இடத்தில் நாங்கள் தங்க வேண்டிய இல்லத்தரசி எதிர்பாராது மிகச் சுகவீனப்பட்டார்கள். அவர்களது பட்டதாரி மகள் வீட்டைப் பொறுப்பெடுத்து, எங்களுக்கு ருசியாய்ச் சமைத்துப்போட்டு, தாயைக் கவனித்து, சாயங்காலக் கூட்டத்திற்கும் வந்ததைப் பார்த்து அசந்து விட்டோம். இந்நாட்களில் காணக் கிடைக்காத காட்சியிது!

பையன்கள் எத்தனைபேர் கணவனாக, தகப்பனாகப் பயிற்சி பெறுகின்றனர்? சந்தைக்கு அழைத்துச் சென்று, மீன், காய்கறி, பழங்களில் சிறந்தவற்றைப் பார்த்துப் பொறுக்கியெடுக்கக் கற்பியுங்கள். பிஞ்சுக் கத்தரிக்காயைக் கண்டுபிடிப்பது எப்படி? பிஞ்சு வெண்டைக்காய்க்கும் முற்றினதற்கும் வேறுபாடு என்ன? எந்தெந்த காய்கள் முற்றினால்

சமையலுக்கு நல்லது, மீன் புதியதா கெட்டு விட்டதா என்று கண்டு பிடிப்பது எப்படி என்றெல்லாம் கற்றுக்கொள்ளட்டும். இல்லாவிட்டால் ''பெரிசு கெடச்சுது'' என்று தலைபெரிய கத்தரிக்காயைத் தூக்கிக் கொண்டு வருவார்கள். கடுகிலிருந்து கார் வரை ஏமாந்து போகாமல் தரமான பொருட்களை வாங்கப் பழகட்டும். உங்களோடு வங்கிக்கு வரட்டும். மின்விசிறி பொறுத்த உதவி செய்யட்டும். காருக்கடியில் படுத்து ரிப்பேர் செய்யட்டும். குப்பையை வெளியே கொண்டு கொட்டுவது, வேலியைச் சீர்ப்படுத்துவது, அடுப்பைச் சரி செய்வது, அழுக்குத் துணியை அதற்குரிய இடத்தில் போடுவது போன்ற ஒழுங் குகளிலும் பழக்குவியுங்கள். இல்லையேல் அவனுக்கு மனைவியாக வாய்க்கப் போகிறவளுக்கு தலைவலிதான். பணத்தின் மதிப்பைக் கற்கட்டும். குடும்ப ஜெபத்தில் பகிரத் தருணமளியுங்கள். வருமா னத்தில் செலவழிக்கவும் குடும்பத்தின் பிரதான ஆசாரியனாகவும் செயல்படத் தெரிந்திருக்க வேண்டுமே. தங்கள் சகோதரிகளுக்கு பாதுகாவலாகப் போய் வரட்டும். பெண்களை மரியாதையுடன் நடத்தப் பழக்குங்கள். கோழி வெட்டவும், மீனைச் சுத்தம் பண்ணவும் படிக் கட்டும். இவையெல்லாவற்றையும் நன்றாய்ச் செய்யும் என் கணவனுக்காய்த் தேவனைத் துதிக்கிறேன்.

வாலிப ரெபெக்காள் வீட்டிற்கு மட்டுமல்லாமல் பத்து ஒட்டகங் களுக்கும் நீர் வார்த்தாள். கணவனுக்குப் ''பிரியமானபடி ருசியுள்ள பதார்த்தங்களைச்'' சமைக்க அவள் அறிந்திருந்ததில் ஆச்சரியமொன்று மில்லையே (ஆதி 27:9,14). தாவீதும் யோசேப்பும் தூரம் நடந்து தம் சகோதரருக்குத் தின்பண்டங்களைச் சுமந்து சென்றனர்.

கீழே தீக்கொளுத்தினாலொழிய நமது பிள்ளைகள் அசையமாட்டார்க ளென்பதை நாமறிவோம். ஆனால், ''எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்'' என்பதை நாம் மறந்துவிடக் கூடாது (எபி 12:11). கட்டுப்பாடு என்பது தங்க விளிம்புடன் மிளிரும் இருண்ட மேகம்.

மஹாராஷ்டிராவில் எனக்கு மிகவும் பிடித்தது இவர்களில் யாரும் எந்த வேலையும் செய்வார்கள். நாங்கள் வசித்த ஊரில் பள்ளி, கல்லூரி மாணவர் காலையும், மாலையும் தம் எருமைகளை மேய்ப்பர். ஜுன் மாதம் வயலில் விதைப்பாதலால் கல்லூரிகள் காலியாக இருக்கும். ஆசிரியர் மட்டுமே வந்து கையெழுத்திட்டுச் செல்வர். முழு ஆள் தத்துவம் வளர்ந்துவர இடமளிக்கும் இக்கலாச்சாரம் என் இதயத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது.

நான் ஐந்து வயதில் கார் ஒட்டப் பழகத் துவங்கினேன். ஊருக்கு

வெளியே இரவில் குடும்பமாகச் சென்று வரும்போது அப்பா மடியில் உட்கார்ந்து திசை திருப்பும் சக்கரத்தைப் பிடித்துக்கொள்வேன். அப்பாவின் பெரும் கரங்கள் என் சிறு கரங்கள் மேலே சக்கரத்தைப் பிடித்திருக்கும். பத்து வயதில் நான் அவர் அருகே உட்கார்ந்து சக்க ரத்தை பிடித்திருப்பேன். எதிரே வாகனம் வந்தால் மட்டுமே அப்பா சற்றுப் பிடிப்பார்கள். பன்னிரெண்டு வயதில் ஓட்டுனர் இடத்தில் உட்கார்ந்தேன். அப்பா என் அருகில் உட்கார்ந்து கியர் மட்டும் மாற்று வார்கள். பதினைந்தில் அப்பா பக்கத்து இருக்கைக்கு நகர்ந்தார்கள். பதினாறில், மறக்கமுடியாத அந்த நாளில், சற்றுப் பிந்தி விட்டோம். வழக்கமாய்க் காரை நிறுத்தி நாங்கள் இடம் மாறும் இடத்தில் அப்பா, ''வீட்டிற்கு ஓட்டு'' என்றார்கள். தலையிலிருந்து கால்வரை மெய் சிலிர்க்க, ஊர் உறங்க, மெதுவாய்க் காரை வீடுவரை கொண்டு நிறுத்தினேன். பதினெட்டில் லைசன்ஸ் கிடைத்தது. இன்றுவரை பெரியதொரு விபத்து எதுவும் எனக்கு நேரிடவில்லை!

வாழ்க்கைப் பாதையில் பெரிய விபத்து ஏதுமின்றி ஓட நமது பிள்ளைகளைப் பழக்குவிக்கிறோமா? கூட்டைக் கலைக்கிறோமா?

9

கெட்ட குமாரனை என்ன செய்வது?

விட்டுவிட வேண்டியதுதான்! அவ்வளவு எளிதா அது? இல்லை. செய்ய மிகக் கடினமான எளிய காரியமிது. தன் தனயனை ஓடவிட்டுவிட மனவுரம் கொண்ட ஒரு தகப்பனின் வீரக் கதையை லூக்கா 15இல் வாசிக்கலாம். அது கெட்ட குமாரனின் கதை என்று சொல்வதைக் காட்டிலும் இதயத்தில் இடிமேல் இடியைத் தாங்கிக் கொண்ட ஒரு தகப்பனின் சரிதை என்றே சொல்லலாம்.

"ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்."

ஒரே பெற்றோரால் ஒரே விதமாய் வளர்க்கப்பட்டும் வெவ்வேறு விதமாய் வளர்ந்ததினால் பெற்றோரைக் குற்றஞ்சாட்ட ஒன்றுமில்லை.

"அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான்."

தகப்பனின்றி தனித்தியங்கலாம் என்ற தைரியம். தன் பங்கை தானே சமாளித்தால் சுதந்திரப் பறவையாகலாமே என்ற நப்பாசை. காளை வயசு. இனியும் பெற்றோரால் "அரட்டப்பட," "நசுக்கப்பட" மனமில்லை.

"அந்தப்படி அவன் (தகப்பன்) அவர்களுக்குத் தன் ஆஸ்தியை பங்கிட்டுக் கொடுத்தான்."

கடவுள், சகோதர சிநேகம், பெற்றோருக்குக் கீழ்ப்படிதல், செல்வத்தின் அருமை போன்றவை பற்றித் தகப்பன் போதிக்காமலா இருந்திருப்பான்? மூத்தவன் தகப்பனின் அதிகாரத்தின் கீழ் மனரம்மியமாயிருக்க, இளையவன் விடுதலைக்காக விம்மினான். தகப்பன் திட்டவில்லை, தவிக்கவில்லை, தத்துவ விரிவாக்கம் செய்யவுமில்லை. அமைதியாய்ச் சொத்தைப் பங்கிட்டான். பிள்ளைக்குக் கற்பிக்க

வேண்டியதெல்லாம் கற்பித்தாயிற்று; அதை ஏற்றுக்கொள்வதோ ஏளனம் செய்வதோ அவன் பொறுப்பு. தகப்பன், போதித்தவற்றை நினைப்பூட்டவுமில்லை, கெஞ்சவுமில்லை. அதனால், மகிழ்வோடு செய்தான் என்பதல்ல கருத்து. வயிற்றைப் பிசைந்திருக்கும்; இருப்பினும் செய்தான்.

''சில நாளைக்குப்பின் இளைய மகன் எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு, தூரதேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப் போட்டான்.''

பாகப்பிரிவினைக்கு பிறகு நிலைமை மோசமாகியது. மகனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. தந்தைக்குக் குடும்பச் சொத்தை விற்பதைத் தாங்க முடியாதிருக்கலாம், செலவழித்த விதத்தைச் சகிக்க முடியாதிருக்கலாம். ஒருவேளை தகப்பன் துஷ்ட நண்பரைக் குறித்த தன் வெறுப்பை வெளிப்படுத்தியிருக்கலாம். ஏதோ ஒன்று பையனை வீட்டையும் நாட்டையும் விட்டு வெளியேறச் செய்தது. பெற்றோருக்கு எட்டாத தூரத்தை நாடினான், ஓடினான். தகப்பனுக்குத் தலையில் இடி விழுந்தது போலிருந்திருக்கும். குற்றவுணர்வுமடைந்திருக்கலாம். 'ஏதோ வீட்டிலாவது கிடந்திருப்பான்; அவனைச் சும்மா நச்சரித்துத் துரத்தி விட்டீர்களே' என மனைவி புலம்பியிருப்பாள். சற்று அன்போடும் பொறுமையோடும் நடந்திருக்கவேண்டுமோ? முயற்சி செய்தாலும் அவனது நடத்தையைக் கண்டிக்காமலிருக்க முடியவில்லையே. ஒருவேளை தகப்பனே 'போ' என்றும் சொல்லியிருக்கலாம். அமரிக்கையான பிரிவு.

''தூர தேசம்''

பயமில்லாத தன் இளங்கன்று இத்தனை தூரம் பத்திரமாய்ப் போய்விடுவானா? புதிய மொழி, புதிய கலாச்சாரத்தில் சமாளித்துக் கொள்வானா? வேளைக்கு வேளை சாப்பிடுவானா? யாராவதுஅவனை ஏமாற்றி விடுவார்களோ? பணத்தைப் பறிகொடுத்து விடுவானோ? இப்படித் தூரமாயிருந்தால் எப்படிப் பெண் பார்ப்பது? பாதி சொத்தை விட்டுப் போயிருந்தால் ஆபத்திற்கு உதவுமே. படிப்பும் பாதியில் நிற்கிறதே. இவை பெற்றோரின் அங்கலாய்ப்புகள். மகனின் தாறுமாறான வாழ்வை அங்கிருந்த உறவினரும் நண்பரும் தகப்பனுக்கு அறிவித்துக்கொண்டுதானிருந்திருப்பர். நெற்றி வியர்வை நிலத்தில் விழ சேகரித்த சொத்தைச் சீரழிக்கிறான், மிருகமாய் வாழ்கிறான், வேசிகளிடத்திலும்கூடச் செல்கிறான். இப்போது மெலிந்திருக்கிறான், நோய்வாய்ப்பட்டிருக்கிறான், நண்பர் போய்விட்டனர், கையில் காசில்லை, வேலை தேடித் திரிகிறான், ஆடைகள் கிழிந்திருக்கின்றன, இப்படி எத்தனையோ விபரங்கள். 'உடனே வந்து விடு' என்றொரு தந்தியடிக்க பெற்ற உள்ளம் பதறியிருக்கும். ஒரு மணியார்டர் அல்லது

ஓர் ஆள் வசம் 'வீடு உனக்காய் எப்போதும் திறந்திருக்கிறது' என்று ஒரு கடிதம் எழுதி அனுப்பினால் நல்லதோ? தகப்பன் ததும்பவில்லை, திடமாயிருந்தான். குறுக்கு உடையட்டும் என்று! பகையினாலல்ல, பாசத்தினால் காத்திருந்தான்.

''எல்லாவற்றையும் அவன் செலவழித்தபின்பு, அந்தத் தேசத்திலே பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத் தொடங்கினான்.''

இப்பொழுதாவது அப்பா அக்கறை காட்டக்கூடாதா? பஞ்சு மெத்தையில் வளர்ந்த பிஞ்சு மகன் பஞ்சத்தில் பிழைத்துக் கொள்வானா? கூப்பிட்டுக் கொள்ளலாமாவென தந்தையின் இரும்புள்ளம் மெழுகாய் உருகியிருக்கும். இருப்பினும் அவன் தளர்ந்துவிடவில்லை. கொஞ்சம் தின்பண்டங்களையும் துணிகளையுமாவது அனுப்பக்கூடாதா? அப்பன் அசையவில்லை. தன் பயங்களையும் துடிப்பையும் அணை கட்டினான். அவன் தேவனது கரத்தைக் கண்டான் — தேவன் அனுப்பிய பஞ்சத்தில்!

''அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக் கொண்டான், அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான்.''

தன் செல்வக் குமாரன், வாரிசு, மிராசுதார், பன்றிகளை மேய்க்கிறானா? என்ன அவமானம். பிறர்தான் என்ன நினைப்பர்? நண்பர் ஒருவருக்குத் தன் மகனுக்கு மதிப்பான வேலையொன்று கொடுக்கச் சொல்லி எழுதினால் யாரும் கொடுத்திருப்பர். அன்புத் தந்தையன்றி வேறு யாருக்கும் 'அடியில்' அவன் இருந்ததில்லையே. இப்போது ஒரு குடியானவனுக்கடியிலா இருக்கிறான்? எப்படி நடத்தப்படுகிறானோ? தனது விசிடிங் கார்டை அனுப்பினால் அவனை வேலை கொண்டவன் மகனது நற்குடிப்பிறப்பையும் செல்வாக்கையும் அறிந்து கொள்வானே. தான் யார், தன் மகன் யார், என்ற ஓர் அறிமுகக் கடிதமெழுதி மகனைக் கனிவாய் நடத்தும்படி வேண்டி, அவனுக்காகும் செலவை தன் கணக்கில் போடும்படி கோரினால் என்ன? ஊஹூம். தன்னை அதற்கு அனுமதிக்கவில்லை தந்தை.

''அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை.''

தகப்பன் இப்படி ஒரு கடிதத்தைப் பெற்றிருக்கக் கூடும்: ''நேற்று உங்கள் மகன் பன்றிகளை மேய்ப்பதையும் அவைகளின் தவிட்டை வாயில் போடுவதையும் தற்செயலாய்க் காண நேர்ந்தது. வயிறு ஒட்டி,

வெளுத்து, அழுக்கடைந்து, எலும்பும் தோலுமாய் ஒரு துண்டு ரொட்டிக்குப் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தான். நீங்கள் எனக்குத் தடை விதியாதிருந்தால் உடனே கூட்டி வந்து உணவு கொடுத்திருப்பேன். இருந்தாலும் நீங்கள் பிள்ளையிடம் இவ்வளவு கடினமாயிருக்கத் தேவையில்லை. உடனடியாய் ஏதாவது செய்யாவிடில் அவனை நீங்கள் உயிரோடு காண்பது சந்தேகந்தான்.''

தகப்பன் தனயனின் நிலையை மனக்கணக்குப் போட்டான். அதற்கும் மோசமாக முடியாது. தகப்பனின் பிடிவாதத்தை முறிக்க அது போதுமா? அவனது வேலைக்காரரெல்லாம் வயிறார உண்டு மீதமும் வைக்கின்றனரே. இவனையும் கூப்பிட்டுச் சோறு போட்டால் என்ன குறைந்துவிடும்? வேலைக்காரரில் ஒருவனாக இருந்துவிட்டுப் போனா லென்ன? ஒருவேளை செத்துப்போய்விட்டால்? தகப்பன் அசைய வில்லை. தனயனின் உடலைக் காப்பாற்றி ஆத்துமாவைக் காற்றில் விடுவதா? தன் மகனைப் பன்றி மேய்க்க விட்டுத் தயக்கமின்றி தன் மானம் மரியாதையைத் தியாகம் செய்யத் துணிந்தான். மகனைக் குறித்த அக்கறையற்றவன் என பிறர் பேசும் அடைமொழிகளைக் கேளாதவன் போலிருந்தான். விடுதலையை நாடினான், விடுதலையையே அவன் அனுபவிக்க வேண்டும். இனி தகப்பனைச் சாரக் கூடாது. தன் நற் சான்றிதழ்களால் தானே ஒரு வேலையைத் தேடி, தன் வருமானத்தைத் தானே சம்பாதித்து, தன் வரவிலேயே செலவு செய்யப் பழகட்டும். சுதந்திரத்தைத் தேடித்தானே வீட்டை விட்டுப் பறந்து சென்றான்? தனித் தகப்பனிடம் இரந்து வாழாமல் சிறந்து ஓங்கட்டும். உலகம் படிப்பட்டது, மக்கள் அவனுக்காகவே அவனை எப்படி நடத்துவர் என்று புரிந்துகொள்ள வேண்டுமானால் அவன் செடியிலிருந்து வெட்டப் பட்டக் கொடியாக இணைப்பின்றி இருக்கவேண்டும். தகப்பன் தீர்மானத்தில் தரித்து நின்றான்.

"அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன் : என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன்.''

அவனது புத்தியைத் தெளிவித்தது என்ன? உணவு, உடை, உறைவிடம், அன்பு, பணம், கவுரவம், தன்னை ஒருவனென்று மதிக்கும் பண்பு, போன்றவற்றின் அத்தியாவசியத் தேவைதான்! விடுதலை என்பது என்னவென்று தெரிந்துகொண்டான். நண்பரின் நயவஞ்ச கத்தை உணர்ந்துகொண்டான். பணத்தின் மதிப்பைப் புரிந்து கொண் டான். உழைப்பின் மேன்மையை உணர்ந்துவிட்டான். வயிற்றை நிரப்ப எவ்வளவு வேலை செய்யவேண்டுமென்று கற்றுவிட்டான். பணம் மரத்தில் காய்ப்பதில்லை என்று படித்து விட்டான். இட்லி, சாம்பார்,

வடை மேசையில் முளைத்துவிடாது என்பதைக் கண்டுவிட்டான். தந்தையின் நிழல், பணம், பெயர், பிரஸ்தாபத்தில் கொஞ்சநாள் ஓடியது. இப்போது அவையெல்லாம் உரிந்து கொள்ளப்பட்டபின், தந்தையின்றி இவ்வுலகில் தான் யார் என்பதை உணர்ந்தவுடன் கலங்கிய அவனது புத்தி தெளிந்தது. குடும்பம், சொத்து எதுவுமின்றி தான் என்ற வெறும் நபரது மதிப்பு யாதென அறிந்தான். புத்தி தெளிந்தான்.

தகப்பனின் காதில் தேனாய்ப் பாய்ந்தது சுப செய்தி. அற்புதம் நடந்துவிட்டது. ஓடி, அணைத்து, மகனை முத்தமிடலாமா? அடுத்த விமானத்தில் டிக்கெட் புக் பண்ணிவிடலாமா? இல்லை. காரியம் இன்னும் முற்றுப்பெறவில்லை. அவனது சுயமதிப்பு சுக்குநூறாக வேண்டும். அவனது ஜம்பம் இன்னும் சிம்மமாக நின்றது. அவன் போனான்; அவனே திரும்பி வரவேண்டும். ஒருவேளை தலைகுனிய நாணி வராமலே இருந்துவிட்டால்? பெற்றவனின் புத்திமாறாட்டமிது. அவன் திரும்பிவரத் தகப்பன் டிக்கெட் எடுத்தால், என்றுமே மகன், ''நீங்கள்தானே என்னைக் கூப்பிட்டீர்கள்'' என்று சொல்லக்கூடும். அவனாகவே தீர்மானித்துத் திரும்ப வரவேண்டும். ஆகவே தந்தை தன் சிந்தைக்குக் கடிவாளம் போட்டுக் கட்டுப்படுத்தினான்.

''நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்.''

எழுந்து போகவும், தன் தகப்பனிடத்திற்குத் திரும்பவும், மனித னுக்கும் தேவனுக்கும் விரோதமான பாவத்தை அறிக்கையிடவும் தீர்மானித்து விட்டான். மனந்திரும்பிவிட்டான்.

''இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன்.''

சுதந்திரம் என்றால் முழுச்சுதந்திரம்தான் என்பதை விளங்கிக் கொண்டான். இனித் தகப்பன் தனயன் என்று சொந்தம் கொண்டாட முடியாது. தகப்பனது அன்பிற்கோ ஒத்தாசைக்கோ எதற்கோ இனி அவனுக்கு உரிமை கிடையாது. அவன் ஒரு கூலிக்காரன் போலத்தான். மானம் மரியாதை என்று சொல்லிக்கொள்ள ஒரு தும்பும் இனி கிடையாது.

''எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்.''

இதற்காகத்தானே தந்தை தவம் கிடந்தான். மகனது மனந் திரும்புதலின் நிரூபணம் அதுவேதான். தந்தை உள்ளம் விந்தைதான். எத்தனைத் தாங்கும் சக்தி வாய்ந்தது. காத்திருந்தான், கனி பறித்தான். இனி சிக்கல்களெல்லாம் கோடைகாலப் பனிபோல வாடத் துவங்குமே.

இனி அவனைப் போஷிக்கலாம், வியாதிகளுக்கு வைத்தியம் பார்க்கலாம், வேலை தேடலாம் — எல்லாம் தந்தையின் செலவில்! அவன் மனந்திரும்பிவிட்டதால் தகப்பனுக்குச் செலவு பெரிதல்ல. இறுதி நெருக்கடிக்கும் அவனை விடாதிருந்தால் இந்த அதிசயம் நிகழ்ந்திருக்காது.

வீட்டிற்கு மகன் வந்தது எத்தனை களிப்பு! தகப்பனது இரக்கம் இறந்துவிடவில்லை. தனது மகனுக்கான தேவனது மனந்திரும்புதல் திட்டத்தில் தலையிடாமல் அவனைத் தடுத்தது அந்த மனதுருக்கமே. அதுவே அன்பு, மனந்திரும்புதலைக் கட்டாயமாய்க் கேட்கும் அன்பு. உடல் உரமுறுவதைவிட ஆன்மா உயிர்பெறுவதையே காணக் கதறும் அன்பு.

''அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்.''

மாறாத அன்பு. உலகத்திற்கும் மகனுக்கும் அவனது அன்பு உலர்ந்துவிட்டதுபோல் காணப்பட்டது. இல்லை. அது அங்கே தானிருந்தது, பசுமையாக, மவுனக் கண்ணீர் வடித்துக்கொண்டு, சரியான வேளையில் மடைதிறந்து பாயும்படியாக தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு காத்திருந்தது.

ஐயோ, எத்தனை கெட்ட குமாரரும் குமாரத்திகளும் அளவுக்கு மீறி அன்புகாட்டும் பெற்றோரால் கெட்டவர்களாகவே வாழ்கின்றனர். திரும்பி வந்து விடும்படி தாங்கித் தடுக்கிக்கொண்டு, பிரசங்கத்தின் மேல் பிரசங்கம் பண்ணிக்கொண்டு, பஞ்சகாலத்தில் பணம் அனுப்பிக்கொண்டு, நண்பர் உறவினரிடம் ''பிள்ளையாண்டானை என்னிமித்தம் மெதுவாய் நடப்பியுங்கள்'' (2 சாமு 18:5) என்று கெஞ்சிக்கொண்டு, கொஞ்சம் துணி அனுப்பிக்கொண்டு, அவர்கள் கடன்களை அடைத்துக்கொண்டிருக்கும் பெற்றோர் பிள்ளைகளுக்கு உதவியல்ல, தேவனுக்கு சத்திரவம். பெற்றோரே, நிறுத்துங்கள்! பால் பொங்கி வரும் வேளையில் பானையை உடைத்துவிடாதீர்கள். உங்கள் கெட்ட பிள்ளையின் புத்தியைத் தெளிவிக்கும்படியாக தேவனோடு ஒத்துழையுங்கள்.

தேவ பயத்திலே வளர்ந்துவிட்டால் நமது பிள்ளைகள் இரட்சிக்கப்படுவது நிச்சயம் என வேதம் சொல்கிறதா? வேதத்தில் வாக்குத்தத்தங்கள் அநேகம் இருந்தாலும், ஏற்றுக்கொள்வதோ நிராகரிப்பதோ மகன்/மகள் கையிலிருக்கிறது. தம்மிடத்தில் வரும் ஒருவனையும் தேவன் புறம்பே தள்ளுவதில்லை. ஆனால் 'வருவது' ஒரு தனி நபருடைய தீர்மானமே. ''நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்'' (ரோ 14:12).

கெட்ட குமாரனை அவன் வழிக்கே விட்டுவிட்டால் அவன் திரும்பி வருவது நிச்சயமா? வரலாம், வராமலும் போகலாம். ஆனால் நமது முயற்சிகளினால் அவனைத் திரும்பிக்கொண்டு வர முயலுவதைக் காட்டிலும் தேவனது முறைகளைக் கையாளுவதினால் அவன் மனந் திரும்புவது கூடுதல் சாத்தியம்.

தம் கடமையைச் செய்த பெற்றோர், தம் வயது வந்த மகனோ மகளோ கிறிஸ்துவைத் தள்ளி தம் வழியே சென்றால், குற்றவுணர் வடையத் தேவையில்லை. அவனோ, அவளோ தேவனுக்கு முன்பாக தனிநபராக நிற்கிறார்களே ஒழிய ஒருவரது மகனாகவோ மகளாகவோ அல்ல.

எவ்வித ஆபத்துமின்றி வசதியாக 'பக்கத்து தேசத்திற்கு' நகர்ந்து கொள்ளும் கெட்ட குமாரரும் உண்டு. அவசரத்திற்குப் பெற்றோர் கைக்கெட்டும் தூரத்திலேயே இருப்பதால் ஆபத்தின் பயமின்றி சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர். உங்கள் செலவில் அவர்கள் உலகத்தை அனுபவிக்க இடங்கொடாதீர்கள். அவர்கள் அடியோடு மனந்திரும்பும்வரை உள்ளம் நெகிழாதீர்கள். குமாரனின் வாழ்க்கையைக் குறித்த தேவ திட்டத்தை அது பூஜ்யமாக்கிவிடும். உள்ளே வாழ்ந்துகொண்டு வெளியே கெட்டுத்திரியும் கேசுகள் இன்னும் கடினமானவை. பெற்றோர் ஞானமாய் மெள்ள மெள்ள ஒவ்வொன்றாய் இறுக்கி ஜாக்கிரதையாய் அவர்தம் பிடிப்பிலிருந்து நழுவிவிட வேண்டும்.

ஆக, கெட்ட குமாரனை என்ன செய்வது? திருமதி பில்லி கிரஹாம் இரத்தினச் சுருக்கமாய்ச் சொல்லுகிறார்கள்: ''எருமைத் தோலும் இளகிய உள்ளமும் வேண்டுமென்று ஜெபியுங்கள்!''

10

பிள்ளைகள் கெட்டுப்போவது ஏன் ?

பெற்றோரும் பெரியவரும் ஜெபித்தும் பிள்ளைகள் கெட்டுப்போவது ஏன்? இதைத் தவிர்க்க கிறிஸ்தவப் பெற்றோர் செய்ய வேண்டியது என்ன ?

பெற்றோராகிய நாம் பலவிதத்தில் தவறி விட்டோம்.

முதலாவதாக, தாயானவள் வீட்டிற்கு வெளியே வேலை பார்ப்பது நவீனக் கலாச்சாரமாகிவிட்டது. முழுநேரத் தாய்மார் குறைந்து கொண்டே வருகிறார்கள். இரண்டு மாதப் பிரசவ விடுமுறை முடிந்தவுடன் தாய் வேலையில் சேருகிறாள். யாராவது "தாயைப்போல்" தன் குழந்தையைப் பராமரிக்க எதிர்பார்க்கிறாள். அப்பொழுதிலிருந்தே குழந்தை திசைமாறத் துவங்குகிறது. பெற்றோர் இருவரும் வேலை பார்த்தால் அவர்கள் பிள்ளைகளுடன் அமரிக்கையாய் உட்கார்ந்து பேசக்கூட முடிவதில்லை. இருவரும் களைத்து வந்து பிள்ளைகள் மேல் பாய்வார்கள்.

பள்ளியிலிருந்து பிள்ளைகள் வரும்போது வீட்டில் யாரும் இருப்பதில்லை. வேலைக்காரி வைத்ததே சட்டம். ருசியாய் ஒரு சாப்பாடு செய்ய யாரும் கிடையாது. குழந்தை கையிலிருந்து கை மாறுவதால் பெற்றோருடன் அதற்கு ஒரு பிணைப்பு ஏற்படுவதில்லை. இப்பொல்லாத உலகத்தில் பிணைப்பின்றியே வளருகிறது குழந்தை.

பெண்கள் வெளிவேலை செய்வதற்கு வேதம் தடைவிதிக்கவில்லை. ரூத், பிரிஸ்கில்லாள், லீதியாள் போன்றவர்களைப் பார்க்கிறோம். ஆனால் அது குறைவே. ஒரு பெண் வீட்டில் தரித்திருப்பதையே வேதம் அழுத்திக் கூறுகிறது (தீத் 2:5).

பெண்மக்கள் படிப்பதும் பட்டம் பெறுவதும் அவசியம்தான்.

அவர்களுடைய எதிர்காலம் எப்படியோ. ஆனால் அவர்களுக்குப் பெண்மை, தாய்மை, வீட்டைக் கவனிப்பதின் மகத்துவம் கற்பிக்கப் படுவது அவசியம்.

ஒரு பெண் மணமானவுடன் வீட்டுப்பெண்ணாயிருந்து தாய்மைக்கு ஆயத்தப்படவேண்டும். அவள் 8 மணிநேரம் வீட்டிற்கு வெளியே வேலை பார்ப்பது அவசியமாவென கணவனும் மனைவியுமாகத் தீர்மானிக்கவேண்டும். ''இப்பொழுதெல்லாம் ஒரு சம்பளத்தில் முடியாது'' என்று சுலபமாகச் சொல்லிவிடலாம். ஒரு பாடலைப் பாடிக்கொண்டு வயலில் உழுபவனைப் பாருங்கள். அவன் மனைவி மரத்தில் தொங்கும் தொட்டிலை ஆட்டித் தாலாட்டுப் பாடிக் கொண் டிருக்கிறாள். ஒரு கலசம் பழைய சோறும் ஊறுகாயும் கணவனுக்கு வைத்திருக்கிறாள். இதில் நாம் கற்கும் பாடமென்ன? டி.வி.யோ, குளிர்பானமோ இல்லாவிடில் நமக்கு ஒன்றுமாகிவிடாது. வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிப்பது மன அடக்கம்தானே ஒழிய வேறில்லை. மனைவி தன் படிப்பையும் கூடுதல் நேரத்தையும் பலவிதங்களில் பயன்படுத்தலாமே (நீதி 31:16). அவள், ''நான் வேலை செய்யும் பெண்'' என்று தலைநிமிர்ந்து நடக்கட்டும். வீட்டிலே வேலை செய்யாமலா இருக்கிறாள்?

இரண்டாவதாக, பிள்ளைகளுக்கு வேதத்தைக் கிரமமாய்க் கற்பிப்பதற்குப் பெற்றோர் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அது நேரமெடுக்கும். ''இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந் திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி, அவை களை உன் கையின் மேல் அடையாளமாய்க் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக் குறியாய் இருக்கக் கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக'' (உபா 6:6-9). அளவுக்கு மீறி மார்க்கபக்தியை திணிப் பதாய்த் தெரிகிறதா? ஆனால் தேவன் அப்படித்தான் கட்டளை யிட்டிருக்கிறார். பயமின்றிக் கீழ்ப்படிவோம்.

பவுல் பழைய ஏற்பாட்டை அத்துப்படி பண்ணியிருந்தான். இரட் சிக்கப்படவோ இல்லை. ஆனால் ஆண்டவர் அவனது உள்ளத்தைத் தொட்டபொழுது அவன் படித்ததெல்லாம் புதிய ஏற்பாட்டில் பொருந் தியது. வரும் சந்ததிகளும் அதினால் பயனடைந்தன. தீமோத்தேயுவின் பாட்டியும், தாயும் அவனுக்கு ''சிறுவயது'' முதல் கற்பித்தனர். அந்த அறிவே கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தின் மூலமாக அவன் இரட்சிப்படையச் செய்தது (2 தீமோ 3:15). ''சிறுபிள்ளை'' என்று

விட்டுவிடாதீர்கள். குழந்தைக்கு இயேசு பாடல் பாடித் தாலாட்டுங்கள். பின்பு ''இயேசு'' என்று உச்சரிக்கக் கற்பியுங்கள். அடுத்து வேதக் கதைகளைப் புகட்டுங்கள்.

எத்தனை பிள்ளைகள் படைப்பின் வரலாற்றை அறியாமலிருக்கின்றனர் என கண்டு வியக்கின்றேன். அவர்கள் பள்ளிக்குப்போய் தாங்கள் குரங்கிலிருந்து வந்ததாக நம்புவதில் ஆச்சரியமில்லை. உலகமும் விஞ்ஞானமும் உங்கள் பிள்ளைகளைக் குரங்காக்கிவிட விடாதீர்கள். வீட்டிலிருக்க பெண் தீர்மானிப்பாளானால் இப் பிரச்னை முக்காலே மூணே பாகம் தீர்ந்ததெனலாம். இருப்பினும் தானே தலைவன் என உரிமைபாராட்டும் ஆண்கள் அத்தலைமைத்துவத்தின் சிலாக்கியங்களை மட்டுமல்ல பொறுப்புகளையும் சிரமேற்கொள்ள வேண்டும் என்பதைக் கவனிக்க.

மூன்றாவதாக, பெற்றோர் பொருளாசை பிடித்தவராயிருக்கின்றோம். வீடு கட்டவோ, TV வாங்கவோ பாடுபடுவோம். பிள்ளைகளோடு பூங்கா செல்ல நேரமில்லை என்போம். பெற்றோர் மனம் மேலானவைகளையல்ல பூமியிலுள்ளவைகளையே நாடுகிறது (கொலோ 3:2). பணம் என்னும் அச்சாணியைச் சுற்றியே நமது வாழ்வு சுழலுகிறது. நமது உந்துவிசையும் நமது திட்டங்கள், நிகழ்ச்சிகளைத் தீர்மானிக்கும் நிர்வாகியும் அதுவே. அதற்குக் குறுக்கே எது வந்தாலும் அதை இடையூறாகவே காண்கிறோம்.

ஒரு தகப்பனின் பாடலைக் கேட்டேன். அதன் கருத்து பின் வருமாறு: சிறுவனொருவன் தன் தகப்பனைப் பந்து விளையாட அழைக்கிறான். தகப்பனோ, ''இப்போது முடியாது மகனே, எனக்கு நேரமில்லை, இன்னொரு நேரம் பார்க்கலாம்'' என்கிறான். தந்தையை உயிராய் நேசிக்கும் மகன் அவனது கழுத்தைக் கட்டிக்கொண்டு, ''அப்பா, நான் வளர்ந்து உங்களைப் போலவே ஆவேன்'' என்று சொல்லி ஓடுகிறான். மகன் வளருகிறான். தகப்பன் கமிட்டி கூட்டங்களுக்கும், ஆகாய விமானங்களைப் பிடிக்கவும் ஓடுகிறான். மகனின் பிறந்த நாளுக்கும் பெற்றோர் கூடுகைக்கும் வரமுடியாமல் போகிறது. ஒருநாள் வாலிபனான மகன் தகப்பனிடம் கார் சாவியைக் கேட்கிறான். தகப்பன், ''மகனே, நான் உன்னோடு பேசவேண்டும்'' என்கிறான். மகனோ, ''இப்போது முடியாது அப்பா, எனக்கு நேரமில்லை, இன்னொரு நேரம் பார்க்கலாம். கார் சாவியைச் சற்றுத் தாருங்கள்'' என்கிறான். தகப்பன் முடிக்கிறான், ''ஆம், என் மகன் வளர்ந்து என்னைப் போலவே ஆகிவிட்டான்'' என்று!

நமது பிள்ளைகளை இப்படி நடத்திவிட்டு அவர்களைக் குற்றஞ் சாட்டுவது நியாயமா? முதன்மையானவைகளுக்கு முதலிடம் கொடுக்

கத் தீர்மானிப்போம். மிதமான வாழ்க்கையில் திருப்தியடையக் கற்றுக் கொள்வோம்.

நான்காவதாக, படிப்பில் தம் பிள்ளைகள் முதல் நிற்க வேண்டுமென பெற்றோர் பதறுகின்றனர். பெற்றோரின் எதிர்பார்ப்பை பிள்ளை எட்டிப்பிடிக்காவிட்டால் ஏமாற்றமடைகின்றனர். இதைக் கொடுமையான வார்த்தைகளாலும் அடிகளாலும் வெளிப்படுத்து கின்றனர். இதனைப் பிள்ளை, ''நான் நன்றாய்ப் படிக்காததால் என் பெற்றோர் என்னை வெறுக்கின்றனர்'' என அர்த்தப்படுத்துகிறது. அது சரியே. இன்றையப் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் பள்ளியிலோ கல்லூரியிலோ முதலிடங்களைப் பிடிக்காவிட்டால் அவர்களை நேசிக் கத் தயாராயில்லை. தங்கள் தவறில்லாததற்காக நம் பிள்ளைகளைக் குற்றவுணர்வடையச் செய்கிறோம்.

சிலவேளை கண்களைப் படிப்பிலேயே வைத்திருப்பதினால் அவனது பிற தாலந்துகளைக் காணாத குருடராகிவிடுகிறோம். இதனால் வேறொரு துறையில் அவனது ஆற்றலைப் பாராட்டாமல் போகிறோம். ''படிப்பு வராது மக்கிற்கு; மற்ற எல்லாம் வரும்'' என்று குற்றமும் சாட்டுகிறோம். இதனால் பிள்ளைகள் ஏமாற்றமடைகின்றனர், உறவும் முறிகிறது.

பெற்றோர் தங்களின் பிள்ளைகளது வரம்பை அறிந்து அதற்குமேல் அவர்களைப் பிடித்துத் தள்ளாதிருக்கவேண்டும். ஒவ்வொரு பிள்ளைக் கும் கடவுள் காட்டும் வழியை மனரம்மியமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். வயலில் உழுது கொண்டிருக்கும் பிள்ளையின்மேல் எலியாவின் சால்வை விழலாமே (1 இரா 19:19,20). கழுதையைத் தேடிப்போயிருக்கும் மகனைக் கடவுள் இராஜாவாக அபிஷேகிக்கலாமே (1 சாமு 9:3). நீங்கள் ஏமாந்து போக, அரண்மனையின் சுகபோகங்களை விட்டோடிய மகன் ஒரு மோசேயாகலாமே. ஏன் கூடாது? விசுவாசி யுங்கள்.

ஐந்தாவதாக, மாறிவரும் நமது வாழ்க்கை முறைக்கு பெற்றோர் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறோம். நாம் சந்தித்ததைவிட அதிகமான தீமைகளை நமது பிள்ளைகள் சந்திக்கிறார்கள் என்பதை மறந்துவிட முடியாது. நாம் வளர்க்கப்பட்டதுபோல அவர்களை வளர்க்கமுடியாது. பெண்கள் வெளியுலகில் கூடுதல் பங்கெடுக்கிறார்கள். சுயாதீனமா யிருக்கிறார்கள். வளர்ந்த ஒரு பிள்ளை இவ்வுலகில் தனியாக வசிக் கலாம். சில ஆண்டுகட்கு முன் சிந்தித்தே பார்க்கமுடியாத சூழ்நிலை இது. போதை மருந்துகள் எங்கும் விநியோகிக்கப்படுகின்றன. இவ் வுலகின் ஆண்களும் பெண்களும் நமது பிள்ளைகளைப் பிடிக்க எங்கும் பதிவிருக்கின்றனர். பிள்ளைகள் படிக்கவோ பெற்றோருடன் வசிக்கவோ

வேறே நாடுகளுக்குச் செல்வதால் மாறுபட்ட கலாச்சாரத்தைக் காண்கிறார்கள். பேனா நண்பர், வீடியோ, TV, புத்தகங்கள் மாற்றுக் கலாச்சாரத்தை அவர்களுக்குத் திறந்துவிட்டிருக்கின்றன.

ஆகவே சரியான நேரத்தில் பெற்றோர் தம் இரும்புப் பிடியை விவேகமாய்த் தளர்த்தி விட்டுக்கொடுத்து அவர்களை உலகிற்குள் அனுப்பி வைக்க வேண்டும். தேவபக்திக்கேதுவான பயிற்சியும் உலக அறிவும் அதற்குள் ஊட்டப்பட்டிருக்கவேண்டும். பிள்ளைகளின் அனுபவங்களைப் பரிவோடு கேட்டு அவர்களது சிக்கல்களைக் குறித்து அனுதாபத்தோடு கலந்துறவாடவேண்டும். அவர்களது கருத்துக்களை ஒரேடியாய் அடிக்காமல், திறந்த மனதுடன் அவர்களது எண்ணங்களையும் கேட்டு, சிந்தித்துச் செயல்பட வேண்டும். இப்படித் தளர்த்திப் போகவிடும் காலத்தில் பெற்றோர் கையைக் கட்டிக்கொண்டு சில சமயங்களில் பிள்ளைகள் தம்மைக் காயப்படுத்திக் கொள்வதைப் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்க உரம் வேண்டும். பிள்ளைகள் வீட்டில் கற்ற சத்தியங்களை அப்பியாசித்து அவை சரிதானாவென்று தாங்களே சோதித்துப் பார்ப்பர். இதற்குப் பெற்றோருக்குத் தைரியம் இல்லாவிடில் பிள்ளைகள் ஒன்று சப்பாணிகளாவர், இல்லையேல் ஓடிவிடுவர்.

பல பெற்றோர் வளர்ந்த பிள்ளைகளையும் உடும்பாய்ப் பற்றிக் கொண்டு ஆதிக்கம்பண்ண நினைக்கின்றனர். ஆகவே பிள்ளைகள் மனஞ்சிதைத்துப் பெற்றோரை மதிக்காமல் சுயேட்சை வாழ்வைத் தெரிந்தெடுக்கின்றனர். பிள்ளைகளை முதுகின்மேல் சுமந்துகொண்டுத் திரியாதீர். பறக்கக் கற்றுக்கொடுப்பீர்.

ஆறாவதாக, பெற்றோர் தம் பணத்தையும் பெயரையும் பயன்படுத்திப் பிள்ளைகளுடைய தகுதிக்கு மிஞ்சியதைக் கொடுக்கத் தயங்குவதில்லை. வாகனத்தை வாங்கிக்கொடுத்து இரண்டு ஆண்டுகட்கு முன்னரே குறுக்கு வழியில் லைசன்சும் வாங்கிக் கொடுக்கின்றனர். விபத்து ஏற்பட்டால் போலீசுக்கு லஞ்சம் கொடுத்து அவனை வெளியே எடுத்துவிடுகின்றனர். பச்சை நோட்டுகளை வீசி இடம் வாங்குகின்றனர். உள்ளே சேரவோ வெளியேறவோ பிள்ளைகள் தம் திறமையை நிரூபிக்கத் தேவையேயில்லை. நல்ல மாப்பிள்ளை வேண்டுமா? ஒரு லட்சம் கொடுத்தால் வாங்கலாம்.

இப்படிப்பட்ட வாழ்க்கையில் கடவுளுக்கு இடம் எங்கே? நமது வழிகள் எவ்வளவு கோணலானவைகள், பார்த்தீர்களா? பெற்றோர் தம் பணத்தையும் அந்தஸ்தையுமே சார்ந்திருக்கின்றனர், கடவுளையல்ல. 'பணமிருந்தால் ஜெயிப்போம்; பணமில்லாவிட்டால் ஜெபிப்போம்'' என்பது சரிதானே. பெற்றோர் தம் புயபலத்தையே அதிகமதிகமாக சார்ந்திருப்பதால், அவர்களுக்குக் கடவுள் தேவையில்லை. கடவுளைத்

தேடுகிறவர்கள் அதிக பணத்திற்காகவும் அதிக வசதிக்காகவும் உலகில் அதிக இடம் பிடிக்கவும் தேடுகின்றனரேயொழிய அவரது சித்தம் அறியவல்ல. ஆகவே பெற்றோர் ஒவ்வொரு பிள்ளையையும் குறித்த தேவ சித்தத்தை அறிய முற்படுவதில்லை. பிள்ளைகளின் எதிர் காலத்தைத் தீர்மானிப்பது அவர்களே.

பெற்றோர் தம் இதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டு பிள்ளை களின் நன்மையை நாடி அவர்கள் தம் பொறுப்பற்ற நடத்தைகளின் பலனை அனுபவிக்க விட்டுவிடவேண்டும். போதிய மதிப்பெண்கள் இல்லையா, சரி B.A. படி போதும். திருட்டா? குடியா? பொறுப்பின் மையினால் விபத்தா? சரி, சிறைச்சாலைக்குப் போய் வரட்டும் (1 கொரி 5:5). பிள்ளையின் உள்ளத்தையும் வாழ்வையும் கடவுள் தொட தருணமளிக்கவேண்டும்.

பிள்ளைகளுக்கு நாம் செய்யும் இடையூறுகளுக்காய் நாம் துக்கித்து தேவன் காட்டும் வழிக்குத் திரும்பவேண்டும். பிதாக்களுடைய இருதயங்கள் முதலாவது பிள்ளைகளிடத்திற்குத் திரும்பினால் பின்பு பிள்ளைகளுடைய இருதயங்கள் தானாய்ப் பிதாக்களிடத்திற்குத் திரும்பும் (மல் 4:6).

தொகுத்துக் கூறின், பெற்றோர், முதலிடத்தை தேவனுக்கும், அடுத்த இடத்தைக் குடும்பத்திற்கும், மூன்றாவது இடத்தை மட்டுமே வேலைக்கும் சம்பாத்தியத்திற்கும் கொடுத்தால் ஏதேன் தோட்டத் திற்கே போய்விடுவோம் !

11

அன்புள்ள அம்மா, அப்பா...

(லவ் ஜாய் '94 குடும்ப முகாமில் 8 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள் அனைவரும் நிரப்ப கேள்விப் படிவங்கள் தரப்பட்டன. பெரும் பான்மையோர் பெற்றோரிடமும் வீட்டிலும் உலகிலும் சந்திக்கும் சிக்கல்களை வெளிப்படுத்தியிருந்தனர். அவர்கள் எழுதியவற்றைக் கூடியவரை அவர்கள் வார்த்தைகளிலேயே இங்குத் தொகுத்து எழுதி யுள்ளேன். எந்தப் பெற்றோரும் தன் பிள்ளை தன்னைப் பற்றி இப்படி எழுதக்கூடும் எனச் சிந்திப்பதில்லை. ''நான் என்னைச் சீரிய தாய் என எண்ணியிருந்தேன். ஆனால் என் மகள் நான் நினைக்கும் அளவிற்கு என்னுடன் நெருக்கமாயில்லை என்பது எனக்கு ஒரு வெளிப்பாடா யிருந்தது. இது ஒரு சவால். என்னை மாற்றிக்கொள்ள முயற்சிக்கப் போகிறேன்'' என்று ஒரு தாய் சொன்னார்கள். இத்தாயைப் போல பெற்றோர் ஒவ்வொருவரும் பிள்ளைகளின் அழுகுரலைத் துடிப்புடன் ஏற்பரானால் பிள்ளைகள் கானம்பாடும் வானம்பாடிகள் ஆவார்களென்பதில் ஐயமில்லை. எல்லாம் எல்லாருக்கும் பொருந்தாதுதான். ஆனால் பலவும் பலருக்கும் பொருந்தும்.)

அன்புள்ள அம்மா, அப்பா,

நாங்கள் உங்களை மனமார நேசிக்கிறோம். அதில் இருமனமுடன் இருப்போமானால் அந்நிலை மாறவே வாஞ்சிக்கிறோம். உள்ளம் திறந்தால் எங்களை இன்னும் புரிந்துகொண்டு உங்களை அதிகமாய் நேசிக்க உதவி செய்வீர்களென்றே நம்பி மனதைக் கொட்டுகிறோம்.

உங்களுடன் விடுதலையோடு எங்களால் பழக முடியவில்லை!

எங்களை நீங்கள் புரிந்து கொள்வதுமில்லை, புரிய முயற்சிப்பது மில்லை. நீங்கள் ஏதோவொரு தலைமுறையைச் சார்ந்தவர்கள் போலிருக்கிறீர்கள். நீங்கள் பிள்ளைகளாயிருந்த நாட்களிலிருந்து உலகம்

எவ்வளவு மாறிவிட்டதென காண சற்றே முயலுவீர்களானால் உங்களுடன் பேச எவ்வளவு சுலபமாயிருக்கும். ஏதாவது சந்தேகம் கேட்டுவிட்டால் எங்கே புயலாய் வீசிவிடுவீர்களோ என்று பயந்து கேள்விகளை உள்ளத்திலேயே புதைத்து வைத்திருக்கிறோம். நாங்கள் பாலகரல்ல, வளர்ந்து கொண்டேயிருக்கிறோம். எங்களுக்கு தெரிய வேண்டியவை அநேகமுண்டு. பரந்த மனப்பான்மையை உங்களிடம் காணமுடியாததால் பாலியல், காதல் விவகாரங்களைக் குறித்துக் கேட்டுத் தெளிவடைய முடிவதில்லை. எங்கள் எண்ணங்களை உங்களிடம் வெளிப்படுத்த முடிவதில்லை. இவ்வுலகில் எங்களை முள்ளாய்க் குத்தும் வேதனைகளைக் குறித்து நீங்கள் அக்கறை காட்டுவதில்லை. ஆகவே நாங்கள் எரிச்சலடைகிறோம். சிலவேளை ஏதாவது கேள்வி கேட்டுவிட்டால் எங்கிருந்து அவ்விவரம் எங்களுக்குக் கிடைத்ததென்று அறிய எங்களைத் தோண்டி துருவிவிடுகிறீர்கள். ஆகவே மரியாதையாக வாயை மூடிக்கொண்டு இருக்கிறோம்.

விடுதலையோடு வெளிப்படையாக ஏன் எங்களது எதிர் காலத்தைக் குறித்தும், திருமணத்தைக் குறித்தும் எங்களுடன் பேசக்கூடாது? எங்களது அபிப்பிராயங்களை அறிவிக்க முடியாமல் வாய் கட்டப்பட்டவர்களாயிருக்கிறோம். எங்கள் எதிர்கால வாஞ்சைகளை உங்களுடன் கலந்துறவாட விரும்பும்போது எங்களைக் குறித்த 'உங்கள்' வாஞ்சைகளை எங்கள்மேல் திணிப்பதால் வெறுப்படைகிறோம். எங்கள் கண்ணோட்டத்தில் எதையும் காண மறுக்கிறீர்கள்.

ஏதோ ஒருநாள் மனந்திறந்து பேசினாலும் நீங்கள் பாசத்தோடு பேசுவதில்லை. அன்போடு ஆலோசனை சொல்லாமல் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று வியாபாரத் தோரணையில் பதில் சொல்வது எங்களைத் துவளச் செய்கிறது. பேசினால் முத்து உதிர்ந்து விடுவது போல இருப்பதேனோ? இருவரும் களைத்து சலித்து வீட்டிற்கு வருவதால் எங்களோடு பேசவே உங்களுக்கு நேரமிருப்பதில்லை.

மனத்தடைகளைத் தாண்டி எங்களையே தைரியப்படுத்திக் கொண்டு ஒரு சந்தேகம் கேட்டாலும், ''வாயாடி, உன் வயதிற்கு அதெல்லாம் எதற்கு?'' என ஒரு போடு போடுகிறீர்கள். வீட்டிலேயே கேட்க முடியாவிட்டால் வேறெங்கேதான் கேட்டுத் தெரிந்து கொள்வது? சிலவேளைகளில் தனிப்பட்ட சில காரியங்களைக் கேட்க வெட்கப்படுகிறோம். அப்போதெல்லாம் எங்களை அரவணைத்து வெட்கத்திலிருந்து வெளிவர அன்புடன் ஊக்குவிக்க மாட்டீர்களாவென ஏங்குகிறோம்.

அதுமட்டுமல்ல, நாம் குடும்பமாக உட்கார்ந்து பேசுவதேயில்லையே. அப்பாவின் கோபம் கசியும் கண்களைப் பார்க்கவே பயமாக

இருக்கிறது. உங்கள் முகங்களைப் பார்த்தால் பேச கொஞ்ச நஞ்சமுள்ள தைரியமும் வற்றிப்போய் விடுகிறது. சிலவேளைகளில் தெரிந்து கொள்ள கேள்விகள் கேட்டால் கோபாவேசத்தால் அடித்து விடுகிறீர்கள். ஆகவே பெட்டிப்பாம்பாய் முடங்கிக்கொண்டோம். கசப்பின் மேல் கசப்பு எங்கள் ஆவியை நசித்துவிடுகிறது.

நமது உறவை நீங்கள் முற்றிலும் மாற்றியமைக்க விரும்புகிறோம்.

அம்மா, அப்பா, வீட்டில் நாங்கள் உணரும் வகையில் உங்கள் அன்பை எங்களுக்குக் காட்டவேண்டுமென ஆசைப்படுகிறோம். நீங்கள் எங்களுக்குச் சிநேகிதராயிருக்க வேண்டுமென விரும்புகிறோம். நண்பரிடம் என்னென்ன பேசுகிறோமோ அதையெல்லாம் உங்களிடம் பேச விரும்புகிறோம். சிகை அலங்காரம், ஆடை போன்ற அற்ப காரியங்களிலெல்லாம் நீங்கள் குற்றம் கண்டுபிடிப்பதை வெறுக்கிறோம். எங்களைக் கண்டியுங்கள், ஆலோசனை சொல்லுங்கள்; ஆனால் கூந்தலலங்காரமும் ஆடம்பரமற்ற நவீன ஆடையும் அணிய நீங்கள் விட்டுக்கொடுக்கலாமே. "உங்கள்" சபையார் விரும்பாததினால் "எங்கள்" சமுதாயம் செய்வதை நாங்கள் விட்டுக் கொடுக்க வேண்டுமா?

தொடர்ந்து திட்டி, குளவிபோல் கொட்டிக்கொண்டேயிருப்பது எங்களைக் கிறுக்காக்குகிறது. "இங்கே போகாதே, அதைச் செய்யாதே" என்று ஒருவர் எந்நேரமும் வீட்டிலே விரட்டுவது வெறுப்பூட்டுகிறது. நீங்கள் அளவுக்கு மீறி பக்தியாகிவிட வேண்டாம், சமநிலையாயிருங்கள்.

திருத்துங்கள், ஆனால் அதை அன்போடு செய்யுங்கள். எங்களிடம் பொறுமையாயிருங்கள். ஏன் எருமை மாட்டை அடிப்பதுபோல எங்களை அடிக்கிறீர்கள்? உட்கார்ந்து உட்கார்ந்து படித்து நீங்கள் கேட்கும்போது விடை மறந்துபோனாலும் உதைதான். நாங்கள் 12 வயதைத் தாண்டிவிட்டபின்பும் நீங்கள் எங்களை அடிப்பதை நாங்கள் விரும்பவில்லை. வீட்டில் மரியாதையோடு நடத்தப்பட விரும்புகிறோம். சிலவேளை நீங்கள் வசைமாறிப் பொழியும்போது வீட்டை விட்டே ஓடிவிடலாமா என்றிருக்கிறது. வீட்டிற்கு வருபவரிடமெல்லாம் எங்களைக் குறை கூறாதீர்கள்.

அளவிற்கு மீறி எங்கள் படிப்பு வாழ்க்கைக் காரியங்களில் கட்டுப்பாடு செய்கிறீர்கள். வீட்டில் இரும்புச் சட்டங்கள் எங்கள் மகிழ்ச்சியைக் கெடுக்கின்றன. வலது இடதுபுறம் சாயாமல் நடக்க எதிர்பார்க்கிறீர்கள். கயிற்றின் மேல் நடப்பதுபோல வீட்டில் எப்போதும் பயத்துடனே இருக்கவேண்டியிருக்கிறது.

அம்மா, அப்பா! முதலாவது நாங்கள் சொல்வதைப் புரிந்து

கொண்டு பின்பு நாங்கள் சொன்னது தவறானால் திருத்துங்கள் — அவசர முடிவெடுக்காதீர்கள். எங்களுள் சண்டையிட்டுக்கொண்டால் இருபக்கமும் விசாரித்து நியாயமான முடிவெடுங்கள். பெரிய பிள்ளைகள் சிறுபிள்ளைகளுக்காக எப்போதுமே அநியாயமாய் விட்டுக் கொடுக்கக் கட்டாயப்படுத்தாதீர்கள். பெண் பிள்ளைகளை ஆண் பிள்ளைகளைவிட மட்டமாய் நடத்தாதீர்கள். தவறான நடக்கையின் விளைவுகளை விளக்குங்கள். எங்களை இருளில் விட்டு விடாதீர்கள். உங்கள் தவறுகளுக்காக எங்கள் மேல் பாயாதீர்கள்.

எங்களோடுகூட நீங்கள் நேரம் செலவழிக்க விரும்புகிறோம். அப்பா வீட்டிற்கு வந்து விளையாடவேண்டுமென்று காத்துக் காத்துக் கண்கள்தான் பூத்துப் போயின. விளையாட்டுப் பருவமும் கடந்து போகிறது. நாங்கள் இலவு காத்த கிளிகள்தானோ? அப்பா பீடி, சிகரெட்டு, சுருட்டு, மது குடிப்பதை நாங்கள் விரும்பவில்லை. நீங்கள் கெட்ட பழக்கங்களையும் தவறான தொழிலையும் விட்டுவிட விரும்புகிறோம். அது எங்கள் மனதையும் படிப்பையும் கெடுக்கிறது. நீங்கள் அம்மாவை நேசிக்கவேண்டும். அம்மாவின் குடும்பத்தை நீங்கள் வெறுப்பது எங்களுக்குப் பிடிக்கவில்லை. அம்மா வீட்டிலிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அம்மா, நீங்கள் ஒரு புன்னகை பூத்து எங்களுடன் பேசி ஆண்டாண்டுகள் ஆகிவிட்டன. எப்பவும் எரிச்சலுடனோ சதா வேலை செய்துகொண்டோ இருக்காதீர்கள். அப்பாவைப் பற்றி எங்களிடம் இழிவாய் பேசி அப்பாவை அவமானப்படுத்துவதை நாங்கள் விரும்பவில்லை. இருவருமே அதிக நேரம் வெளியேதான் இருக்கிறீர்கள். வீட்டிற்கு வந்த பின்பும் எங்களுடன் கலகலப்பாக இராதபடி களைப்போ வேலையோ. குடும்பமாக எப்போதோ ஒருமுறையாவது பிக்னிக் சென்று வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அபூர்வமாய்ச் சென்றாலும் அன்றும் கோபப்பட்டு எங்களை 'மூடு அவுட்' ஆக்கி விடுகிறீர்கள். பெருமூச்சுதான். சதா 'பைபிள் வாசி, ஜெபம் பண்ணு' என்னாதீர்கள்.

வீட்டில் தனிமை எங்களை வாட்டுகிறது.

எங்களுக்கு நண்பர் தேவை. நண்பரற்ற வாழ்வு ஒரு வாழ்வா? வீட்டிற்கு எங்கள் சிநேகிதரை அழைத்தால் உல்லாசமாக விளையாடுவோமே. நாங்களும் அவர்கள் வீட்டிற்குச் செல்ல அனுமதிக்க வேண்டும். எங்கள் நண்பர் எங்களைக் கெடுத்துவிடுவர் எனப் பயப்படுகிறீர்கள். எங்களுக்கு நீங்கள் பொறுப்பு என்பதை உணருகிறோம். அதற்காகக் காரணமின்றி எங்கள் நட்புறவைத் துண்டிக்காதீர்கள். நீங்கள் எங்களை நம்பாதது எங்களைப் புண்படுத்துகிறது. எங்கள் நண்பரைக் கவுரவமாய் நடத்தி அவர்களுடன் நீங்கள் கனிவுடன் பழகவேண்டுமென விரும்புகிறோம். அவ்வப்பொழுது நண்பருடன் பாதுகாவலான இடங்களுக்குச் செல்ல விரும்புகிறோம்.

எங்களைக் குறித்துப் பயங்கரமாய்க் கற்பனை செய்கிறீர்கள். பதினாறைத் தாண்டினாலும் எங்களுக்குத் தனிமை என்னும் இனிமை கிடையாது. எங்கள் அறையில் தனிமையில் இருந்தாலும் காதல் கடிதத்தை வாசிக்கிறோமா என்று பார்க்கிறீர்கள். வெளியே சென்றால் எங்கள் அறை பரிசோதிக்கப்படுகிறது. யாரிடம் பேசினாலும் சந்தேகம். எங்கள் நண்பரிடமும், அக்கம்பக்கத்தவரிடம் கூட எங்களைக் குறித்து விசாரிக்கிறீர்கள். நண்பரிடம் பேசினால் ஒட்டுக் கேட்கிறீர்கள். எங்கள் நிலை என்ன?

வீட்டில் போர் அடிக்கிறது. வீடு ஜெயில் போல் இருக்கிறது. சுதந்திரம் இல்லை. 24 மணி நேரமும் கண்காணிப்பு.

எங்களது கலாச்சார, ஆன்மீக, சமூக மற்றும் கல்லூரிக் காரியங்களில் நீங்களும் ஈடுபட்டால் எத்தனை அருமையாயிருக்கும். முக்கிய விவாதங்களில் எங்களையும் சேர்த்துக்கொள்ளுங்கள். உங்கள் விருப்பப்படியே நாங்கள் எல்லாவற்றையும் செய்ய எதிர்பார்க்கிறீர்கள். அது எங்களுக்கு பிடிக்கவில்லை. எங்கள் தாலந்துகளை வளர்க்க எங்களுக்கு வழியில்லை. எப்போது பார்த்தாலும், 'படி, படி, படி' என்று பிற தாலந்துகளை ஊதி அணைத்துப்போடுகிறீர்கள். எங்களுக்கு விருப்பமற்ற மேற்படிப்பைத் தெரிந்துகொள்ளச் சொல்லி தொண்டையை நெறிக்கிறீர்கள். எங்கள் கனவுகளைத் துளிர்க்கவிடாமல் கொன்று போடுகிறீர்கள்.

உங்களை முன்மாதிரிகளாய்க் காண விரும்புகிறோம்.

மம்மி, டாடி, நீங்கள் ஒருவருடன் ஒருவர் சண்டையிடாதீர்கள். நீங்கள் சண்டைபோடும்போது வீடு நரகம் போலிருக்கிறது. உங்கள் முற்கோபத்தையும் மனத்தாங்கல்களையும் அரோசிக்கிறோம். வீட்டில் ஒருமனப்பாட்டை எதிர்நோக்கித் தவிக்கிறோம். யானைகள் சண்டையிட்டால் பாதிப்பு புல்லுக்குத்தான். நீங்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் கத்தும்போதும், சில வேளை விவாகரத்து என்னும் வார்த்தை அடிபடும்போதும் எங்கள் உள்ளம் நடுங்குகிறது. எதிர்காலத்தின் கவலை எங்களைக் கவ்விக்கொள்ளுகிறது. புயலைத் தொடர்ந்து வரும் மவுன விரதம் அதிலும் மோசம். பெற்றோர் ஒருவருக்கொருவர் அன்புடனும் பொறுமையுடனும் மென்மையாகவும் நடந்துகொண்டால் வீடு எத்தனை நிம்மதியாயிருக்கும்!

நீங்கள் ஊழியம் செய்தும் உண்மையில்லாதிருப்பது எங்களுக்குப் பெருத்த ஏமாற்றம். பெற்றோரில் முறைகேடான நடத்தையைக் காண்பது இதயத்தைக் கசக்குகிறது. வீட்டில் குடும்ப ஜெபத்தையும் ஆன்மீகப் பயிற்சியையும் எதிர்பார்க்கிறோம். இன்னும் அதிக வேதக் கதைகள் சொன்னால் நன்றாயிருக்கும்.

ஏமாற்று எங்களுக்கு எலும்புருக்கி. சொல்லுகிறீர்கள், பின்பு செய்வதில்லை. இதனால் உங்கள் மேல் நம்பிக்கை இழக்கிறோம். எல்லாவற்றையும் படிப்போடு முடிச்சுப்போடாதீர்கள். எதைக் கேட்டாலும், ''நீ முதல் மார்க் எடு, பின் வாங்கிக் கொடுக்கிறோம்'' என்கிறீர்கள். அது எங்களுக்கு எட்டாத பழம். எல்லாரும் முதல் மதிப்பெண் வாங்க முடியுமா? எங்களால் முடியாத ஒன்று எங்களிடம் எதிர்பார்க்கப் படும்போது விரக்தியடைகிறோம்.

வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை வேண்டும்.

வீட்டில் ஆடல் பாடல் வேண்டும். சிரிப்பொலியும் அன்பும் சமாதானமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் வீடே இன்ப இல்லம். குடும்பத்தினர் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு இருக்கிற வண்ணமாகவே ஒவ்வொருவரையும் ஏற்றுக்கொள்வதே மகிழ்வுறு குடும்பம். அங்கு எதையும் தயங்காமல் பகிர்ந்துகொள்ளலாம். பெற்றோர் வீட்டில் இருப்பார்கள். நாங்கள் அவர்களது அன்பில் திளைத்திருப்போம். இன்ப இல்லத்தில் தாத்தா, பாட்டியம்மா இருப்பார்கள். அது மோட்சம் போலிருக்கும். அப்படிப்பட்ட வீட்டில் அன்பும் கண்டிப்பும் சமநிலையிலிருக்கும். பெற்றோர் எங்களிடம் பண்புடனும் பாசமுடனும் நடந்து கொள்வர்.

மகிழ்வான வீட்டில் சட்டங்கள் அதிகம் இருக்காது. பெற்றோர் எங்களது முயற்சிகள், பரிசோதனைகள், துணிந்து செயல்படும் புதிய காரியங்கள், விளையாட்டுகளை அணைத்துப்போடாமல் உற்சாக மூட்டுவர். நல்ல T.V. நிகழ்ச்சிகளை பார்க்க அனுதிக்கப்படுவோம். நண்பர் உறவினர் முன் அற்பத் தவறுகளுக்கும் தண்டிக்கப்பட மாட்டோம். பெற்றோர் இரு பாலரான எங்கள் நண்பர்களிடம் அன்புடன் பேசுவர்.

இன்ப இல்லத்தில் நாய், பூனை, லவ் பேர்ட்ஸ் போன்றவை இருக்கும். பெற்றோர் அவற்றை வெறுக்கமாட்டார்கள். இன்ப இல்லமென்றால் பல்லாண்டுகள் கழித்து அங்கே நுழையும்போது, இளமைப் பருவத்தின் இனிய நினைவுகள் நம்மை மெய்சிலிர்க்கச் செய்யும்.

பல சிக்கல்களைச் சந்திக்கிறோம்.

வீட்டிலோ வெளியிலோ எங்களுக்குப் பாராட்டு என்பதே கிடையாது. ஆகவே குறைவெண்ணத்தினால் கூனிப்போகிறோம். பத்தாம் பசலிப் பெற்றோரும் தாத்தா பாட்டியும் உறுத்தல். உங்களது மிதமிஞ்சிய எதிர்பார்ப்பை எட்டமுடியாததினால் சோர்ந்து மூர்க்கம் கொள்ளுகிறோம். அடிகளினாலும் அளவுக்கு மீறிய திருத்தங்களினாலும் மிதமிஞ்சிய கண்காணிப்பினாலும் நொந்து போகிறோம். தனிமையும்,

சோர்வும், வீட்டில் நான் யாருக்கும் தேவையற்றவன்(ள்) என்ற எண்ணமும் எங்களை வாட்டி வதக்குகிறது. சுருங்கச் சொன்னால், சில வேளைகளில் வீட்டில் அநாதைகளைப் போல உணருகிறோம்.

பள்ளியில் தீய நண்பரால் தீட்டுப்படாதபடி காக்க வேண்டியிருக்கிறது. அன்னாரை விட்டால் வேறு நண்பரில்லாத நிலை. ஆகவே பரிசுத்தத்தைக் காக்கவும் நட்பை விடாதிருக்கவும் இழுபறி. படிப்பும் பாரம் தாங்கமுடியாத பளு. கூண்டோடு காப்பியடிக்காவிட்டால் பழிவாங்கக் காத்திருக்கும் கூட்டம். இச்சை எனும் கருநாகம் நிழல்போல் செல்லுமிடமெல்லாம் தொடருகிறது. பையன்கள் கேலி பெண்களுக்கு ஓயாத தொல்லை. சிறு பையன்களை அடிக்கும் தடியன்கள் பள்ளியில்.

நண்பரோடு சிலவேளை சண்டை. ஒரு நண்பனை இழப்பதென்றால் எத்தனை மனவேதனை என்று அறிவீர்களா? பள்ளியில் கிறிஸ்தவனாயிருப்பது சுலபமல்ல. எங்கள் விசுவாசத்தைப் பகடி செய்யும் கூட்டம். சக மாணவருக்குச் சாட்சி பகர முடியவில்லை. சிலசமயம் டீச்சர்கள் காரணமின்றி அடிக்கின்றனர். கடவுள் ஞானம் தந்திராவிடில் தினசரி அடி. கூட்டிக் குறைத்துச் சொன்னால் எங்களுக்கு நிம்மதி இல்லை. எத்தனைப் போராட்டங்களோடு போராட்டம், பார்த்தீர்களா?

எதிர்காலத்தைச் சந்திக்க அஞ்சுகிறோம்.

கொலையும் வன்செயலும் மண்டிக்கிடக்கும் இத்தலைகீழ் உலகத்தில் வாழ பயமாயிருக்கிறது. எதிர்காலத்தைக் குறித்த நிச்சயமில்லை. எங்களைப் புரிந்துகொள்ள யாருமில்லை. இவ்வுலகில் நாங்கள் எதிர்பார்க்கும் அன்புமில்லை. தற்கொலை எண்ணம் தலை தூக்காமலில்லை. இவ்வுலகில் ஏன் பிறந்தோம் என்று எண்ணத் தோன்றுகிறது.

நாங்கள் பாவிகள் என்ற எண்ணம் எங்களை அழுத்துகிறது. கூடுதல் வாழ்ந்து ஏன் கூடுதல் பாவம் செய்ய வேண்டும்? பரிசுத்தமாய் வாழ்ந்து ஆண்டவரை அகமகிழச் செய்யமுடியவில்லை. பாலுறவு எண்ணங்களை அடக்கமுடியவில்லை. ஆகவே வாழ்வது நல்லதல்ல என்ற எண்ணம் மேலோங்குகிறது. இவ்வாழ்வை எங்களால் சமாளிக்க முடியுமா? இருளுக்குப்பின் ஒளி வரலாமென நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்.

மம்மி, டாடி, எங்களுக்கு இன்பமான இல்லத்தை தருவீர்களா?

12

பெற்றோரும் பிள்ளைகளும்

பெற்றோர் பிள்ளைகள் உறவைக் குறித்து இன்று எங்கும் விறு விறுப்பாய்ப் பேசப்படுகிறது. BYM நடத்திய கருத்தரங்கு ஒன்றில் நானும் என் கணவரும் பெற்றோர் பிள்ளைகள் உறவைக் குறித்த சில முக்கிய கேள்விகளுக்குப் பதில் அளித்தோம். பங்கேற்ற பலர் இதனால் பெருத்த ஆசீர்வாதம் பெற்றதைச் சாட்சியிட்டதால் அக்கேள்வி பதில்களை இப் புத்தகத்தில் சேர்த்துள்ளோன். அளவுக்கு மீறி இறுக்கிப்பிடித்துவிடாது, அதே வேளையில் எல்லையைத் தாண்டவும் தளர்த்திவிடாது, சமநிலைப்படுத்த முயன்றுள்ளோம்.

1. பிள்ளை வளர்ப்பில் அதிக பொறுப்பு தாய்க்கா, தந்தைக்கா?

இருவரும் வெவ்வேறு விதத்தில் சம பொறுப்புள்ளவர்கள். இரு வரும் முரண்பாடின்றிக் கூட்டாகச் செய்யவேண்டிய பணி இது. சில வேளை தாய் கனிவாயும், தந்தையோ கண்டிப்பாயுமிருக்கலாம். இல்லாவிடில் மாறியும் இருக்கலாம். எப்படியானாலும் பிள்ளைகளுக்கு முன் அவர்கள் ஒன்றித்து நிற்கவேண்டும். தனிமையில் தங்கள் கருத்து வேறுபாடுகளை விவாதித்துக் கொள்ளலாம். பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளவேண்டும். ''இருவரும்'' வீட்டை நடத்துகிறார்கள் (1 தீமோ 3:4; 5:14; நீதி 1:8).

2. அப்பா அம்மா என்னைச் செருப்பால் அடிக்கிறார்கள். தற் கொலை எண்ணம் வருகிறது. எனக்குப் படிப்பு வருவதில்லை. என்ன செய்ய?

சோர்ந்து போகாதே, தம்பி! உன் தந்தையும் தாயும் கைவிட்டாலும் கர்த்தர் உன்னைச் சேர்த்துக்கொள்வார் (சங் 27:10). ஞானத்திற்காக தினமும் ஜெபித்து முடிந்த அளவு படி (நீதி 1:9; யாக் 1:5). வேறு

தாலந்து உண்டானால் அதைப் பெருக்கு. ஏதாவது வேலை அல்லது வியாபாரம் குறித்தும் யோசிக்கலாம். புகழெய்தியோரெல்லாம் சீமான்களும் படித்தவர்களும்தான் என்று சொல்ல முடியாது (1 கொரி 1:26-28). தற்கொலை குறித்தே சிந்திக்காதே. தேவன் பயன்படுத்த நினைப்பவர்களைச் சாத்தான் கொன்றுபோட எத்தனிப்பான். எனவே உனக்கோர் ஒளிமயமான எதிர்காலமுண்டென்பதில் சந்தேகமில்லை. யாரையாவது உன் பெற்றோரிடம் பேசச் சொல்லு.

கண்டிப்பு என்ற பெயரில் பெற்றோர் பிள்ளைகளைக் கொடுமைப் படுத்தக்கூடாது. கடைசி நாட்களில் மனிதர், சுபாவ அன்பு இல்லாமல் போவார்கள் என்கிறது வேதம். பிள்ளைகளை நேசிக்க நாம் ''கற்றுக் கொள்ளவேண்டும்.'' இதனால் அடிக்கக் கூடாதென்பதல்ல. எப்போது, எப்படிப் பிரம்பைப் பயன்படுத்த வேண்டுமென்று அறிந்திருக்க வேண்டுவதோடல்லாது, கண்டிப்பைக் காட்டிலும் அன்பு கூடுதலாயிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் (தீத்து 2:4; 2 தீமோ 3:3).

தற்கொலை பற்றி ஒரு பிள்ளை பேசினால் பெற்றோர் கவனமாயிருக்கவேண்டும். இன்றையப் பாடத்திட்டம் பிள்ளைகளுக்கு மிக அதிகம் என்பதைப் பெற்றோர் மறந்துவிடக் கூடாது. மண்ணில் கோபுரம் கட்டி ஆடும் வயதில் மனக்கணக்குப் போடுகிறார்கள். பிள்ளைக்கு ISC அல்லது CBSE முடியாவிட்டால் மெட்ரிக்குலேஷன் அல்லது State Board பாடத் திட்டத்திற்கு மாற்றிவிடுங்கள். அதுவும் முடியாவிட்டால் ஓராண்டு தேறாவிட்டாலும் பரவாயில்லை, விட்டு விடுங்கள். ''தோல்வி ஒன்றுமில்லை, அதனாலென்ன, நாங்கள் உன்னை நேசிக்கிறோம்'' என்று தெம்பூட்டுங்கள். கடவுள் உங்கள் பிள்ளைக்குக் கொடுத்திருக்கும் அறிவோடு பிள்ளையை ஏற்றுக்கொண்டு நேசியுங்கள். ஏதாவதொரு தொழிற்பயிற்சிக்குக் கூட அனுப்பலாமே.

3. பிள்ளைகளைத் திருத்துவது எப்படி? கத்தவா, அடிக்கவா?

பிள்ளைகள் பெற்றோரை எவ்வளவு தூரம் தள்ளலாம் என்று தள்ளிப் பார்ப்பர். நீங்கள் தள்ள விடாமல் உறுதியாய் நிற்க வேண்டும். 'இல்லை' 'முடியாது' என்று சொல்லிவிட்டபின், அழுகிறானே என்று விட்டுவிடக் கூடாது. முடியாது என்றால் முடியாதுதான் என்று நின்றுவிட்டால் ஒரு வயதுப் பிள்ளையும் பணிந்துவிடும். ஒரு தடவை எச்சரியுங்கள். அதை மீறினால் பிரம்பினால் பின்தொடையில் நன்றாக ஓரடி கொடுக்க வேண்டும். எவ்வளவு சீக்கிரம் உங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்துகிறீர்களோ அவ்வளவு நல்லது (நீதி 19:18; 29:15).

அவன் வளர்ந்து புரிந்துகொள்ளத் துவங்கும்போது, நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்களென்பதை அவனுக்குப் புரியும்படி விளக்குங்கள்.

அவனுக்குப் புரிந்ததா என நிச்சயப்படுத்திக்கொள்ள, அவனைத் திரும்பச் சொல்லச் சொல்லுங்கள். அதற்குப் பின்னும் அவன் கீழ்ப்படியாமற் போனால் தண்டியுங்கள் (நீதி 23:13,14).

அறையில் பூட்டிவைப்பது, மாட்டை அடிப்பதுபோல் அடிப்பது, இப்படிப் பிள்ளைகளைக் கொடூரமாய்த் தண்டிக்கக்கூடாது. மனிதாபிமானத்தோடு தண்டியுங்கள். கடுங்கோபத்தோடு அடிக்காதீர்கள். திட்டமிட்டுத் தண்டித்தால் உணர்ச்சிவசப்பட்டுக் கண் மூக்கு தெரியாமல் அடித்துவிடமாட்டோம் (நீதி 22:6).

தாயும் தகப்பனும் வெளியே வேலை பார்க்கும் வீடுகளில் பிள்ளைகள் முரண்டு பிடிப்பவர்களாகவும் புரியாத சில விபரீத நடத்தையுள்ளவர்களாகவும் வளருவது சகஜமாகி வருகிறது. இது பெற்றோரது அன்பும் ஐக்கியமும் போதுமான அளவு கிடைக்காததினால் வருவது. இப்படிப்பட்டப் பிள்ளைகளை அடித்துக் கண்டிப்பது கூடுதல் சிக்கல்களுக்கு நடத்தலாம். அவர்களது தேவை தாயின் பராமரிப்பு.

4. பிள்ளைகளை அமைதிப்படுத்துவதற்காக ஏதாவது வாக்களித்து விட்டு அதை நிறைவேற்றாமலிருக்கலாமா?

பிள்ளைகளை ஏமாற்றுவதினால் அவர்கள் பெற்றோர்மேல் நம்பிக்கை இழக்க ஏதுவாகிறது. சிறிய பெரிய காரியங்களில் பிள்ளைகளிடம் நேர்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் (கொலோ 3:9).

5. என் பிள்ளை அதிகக் குறும்பு செய்கிறது.

தங்களைக் காயப்படுத்திக்கொள்ளாமல், பிறரைக் காயப்படுத்தாமல், பொருட்களை நாசமாக்காமல் இருந்தால் குறும்பு செய்வதில் தவறில்லை. குறும்புக்காரப் பிள்ளைகளுடைய சக்தியை ஓட்டப் பந்தயம், வெட்டுக்கிளி பிடிப்பது, மரம் ஏறுவது, வைக்கோல் போரில் ஏறிக்குதிப்பது போன்றவற்றில் செலுத்திவிட வேண்டும். சிந்தனா சக்தியுடைய பெற்றோர் தங்கள் குறும்புக்காரப் பிள்ளைகளின் நேரப் போக்கிற்கு எத்தனையோ உபாயங்களைக் கண்டு பிடிக்கலாம். அவர்களைக் கைகால் கட்டி உட்கார வைக்கக்கூடாது.

6. எனக்கு விருப்பமில்லாத தொழிற் கல்வியில் சேரப் பெற்றோர் வற்புறுத்துகின்றனர்.

உங்களுக்கு விருப்பமான கல்வியை நீங்கள் தெரிந்துகொள்வதில் தவறில்லை. பெற்றோரைப் பணிவுடன் மனமாறச் செய்யுங்கள்.

இருபதிற்குமேல் பிள்ளைகள் தங்கள் கனவுகளை நனவாக்க விட்டுவிடவேண்டும். பெற்றோர் தங்கள் கனவுகளை அவர்கள் மீது

திணிக்கக்கூடாது. ஆதியாகமம் 25:25-27; 27:11 வாசித்தால் ரோமம் நிறைந்த பிள்ளை வேட்டைக்காரனும் வனசஞ்சாரியுமானான்; ரோமமில்லாத மென்மையானவன் அமைதலுள்ளவனும் (ஆங்கில வேதம் காண்க) கூடாரவாசியுமானான் எனக் காணலாம். விளையும் பயிர் முளையிலே தெரியுமல்லவா? கொய்யாக் கன்றை மாமரமாக வளர்க்க முயற்சித்தால் செடி செத்துப் போகும். அப்படியே பிள்ளைகளை அவர்களது அணுக்களில் பொதிந்துள்ள குணநலன்களுக்கு மாறாகத் திருக்கினால் நைந்து போவார்கள். பெற்றோர் பிள்ளைகளைக் கூர்மையாய்க் கவனித்து அவர்கள் இயற்கையாய் உருவாகி வரும் வழியில் கைகொடுத்து நடத்தவேண்டும்.

7. எந்தத் தீர்மானமும் எடுக்க எனக்கு உரிமையில்லை. பெற்றோர் விரும்புவதையே நான் செய்யவேண்டும். மறுத்தால் கலாட்டா. எனக்கு வயது 22.

தீர்மானங்களெடுப்பதில் தவறில்லை. ஆனால் அதை முரட்டுத்தனமாய்ச் செய்யாமல் பணிவோடும் உறுதியோடும் செய்யவேண்டும். நிலைதவறி பெற்றோரிடம் கோபப்படாமல் எடுத்த தீர்மானத்தில் அமைதியாய் நிற்கப் பழகவேண்டும் (1 கொரி 13:11).

சிந்திப்பதைக்கூட பெற்றோர் பிள்ளைகளுக்காய்ச் செய்துவிடக் கூடாது. வாலிபர் சிந்தித்துத் தீர்மானிக்கவும், நல்லதைத் தெரிந்து கொண்டு தீயதைத் தள்ளவும் அவர்களைப் பழக்குவிக்கவேண்டும். ''சரி,'' ''வேண்டாம்'' என்று மொத்தமாய்ச் சொல்லிவிடாமல் அக்காரியத்தை அவர்களே அலசிப்பார்த்து தீர்மானமெடுக்க உதவவேண்டும். இது நல்லதா கெட்டதா? பிறர் என்ன நினைப்பர்? இதனால் எதிர்காலம் பாதிக்கப்படுமா? தேவன் இதை விரும்புவாரா? இது உன்னைச் சிறக்கச் செய்யுமா? இதனால் உன் பெற்றோர் உன்னைக் குறித்துப் பெருமிதம் அடைவரா? இப்படி.

இருபதை எட்டிவிட்டால் பிள்ளைகளுக்கு ஆலோசனை சொல்லி வழிகாட்டலாம். ஆனால் அவர்கள் காரியங்களை அவர்களே சிந்தித்துத் தீர்மானிக்க விட்டு விடவேண்டும்.

8. என் தாய் என்னைப் பெண் பிள்ளைகளிடம் பேச விடவேயில்லை. இப்போது என் வயது 20. இப்பொழுது யாரிடமும் பேச வெட்கப்படுகிறேன்.

கடந்ததைச் சரிசெய்வது கூடாததல்ல. சந்திப்பவரிடம் புன்னகையோடு ஓரிரு வார்த்தை பேசத் துவங்கு. சீக்கிரம் பழகிவிடுவாய்.

அளவுக்குமீறி பொத்திப் பொத்தி வளர்ப்பதினால் பெற்றோர் பிள்ளைகளைக் கோழைகளாக்கிவிடுகின்றனர். வீட்டிலும், விழாக்க

ளிலும், பொதுவிடங்களிலும் வாலிபரும் கன்னியரும் ஒருவரை யொருவர் சந்தித்துப் பழக அனுமதிக்கவேண்டும். அவர்கள் கண் மூடித்தனமாகக் காதலிக்கத் துவங்குவது உண்மைதான். அவ்வப்போது புத்தி சொல்லவேண்டும். கட்டுப்பாடு, பரிசுத்தம், தேவசித்தம் குறித்துப் போதித்து அரவணைத்துக் கொண்டுபோகவேண்டும். எரிச்சலடை யாமல் இதைச்செய்தால் வாலிபர் தம் உள்ளுணர்வுகளுக்குக் கடிவாளம் போடக் கற்றுத் தேர்வர்.

9. நான் கையில் காசகொடாததினால் நாலாம் வகுப்பிலிருக்கும் என் மகன் என் பையிலிருந்து திருடுகிறான்.

பணப்பையை மறைவாய் வையுங்கள். ஆனால் செலவழிக்க அவனுக்குக் காசு கொடுக்கவேண்டும். இப்போது எல்லாப் பிள்ளை களுமே பள்ளிக்குக் காசு கொண்டு வருவதால் உங்கள் மகனும் ஆசைப்படுவது நியாயமே. இதனால் பையனும் பணத்தைக் கையாளக் கற்றுக்கொள்கிறான். இவ்வாண்டு கிறிஸ்துமஸ் வெகுமதிகள் வாங்கிக் கொடாமல் அப்பணத்தை அவன் கையில் கொடுத்துக் கடைத் தெருவிற்கு அழைத்துச் செல்லுங்கள். அவனாகவே தான் விரும்புவதை விலை கேட்டு, விலை பேசி வாங்கிக்கொள்ளட்டும். உங்களுக்கு விருப்பமானதை வாங்க அவனைக் கட்டாயப்படுத்தாதீர்கள்.

10. கீழ்ப்படியாத என் பிள்ளைகளைத் தண்டிக்க எத்தனித்தால் ஓடிவிடுகிறார்கள்.

விரட்டிப் பிடியுங்கள்! (நீதி 22:15).

11.பெற்றோர் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவரானால் பிள்ளைகளை எப்படி வளர்ப்பது?

தீமோத்தேயுவின் தகப்பன் கிரேக்கன், தாய் யூதக் கிறிஸ்தவள். தாயே அவனுக்கு விசுவாசத்தை ஊட்டி வளர்த்தவள் என்பதில் சந்தேக மில்லை. விசுவாசியானவர் தன்னாலியன்றதைச் செய்ய வேண்டும் (அப் 16:1; 2 தீமோ 1:5).

12. எங்கள் பிள்ளைகளைத் திருத்தினால் கோபப்படுகிறார்கள்.

தண்டித்தபின் கோபமாயிராதீர்கள். அதையே சொல்லிச் சொல்லிக் காட்டாதீர்கள். சீக்கிரம் முகம் மாறி இயற்கையாய் இருங்கள். தவறாய்த் தண்டித்தோ திருத்தியோ விட்டால் மன்னிப்புக் கோரத் தயங்காதீர்கள். அவர்களையும் மதிக்கவேண்டும். திருத்தும் போது உணர்ச்சிவசப்பட்டு விடாது நிதானமாய்க் கண்டியுங்கள். அப்படியும் அவர்கள் முகங் கோணலாம். அதைச் சட்டை செய்யக்கூடாது (எபி 12:11).

13. என் பெற்றோர் இறந்துபோனதால் மனைவியின் இரட்சிக்கப்படாத பெற்றோரோடு இருக்கிறோம். ஆகவே என் மகன் சினிமா பாடல்களைப் பாடுகிறான்.

குட்டிப்பாப்பா தொட்டிலைவிட்டு வெளியேறித் தனிக்குடித்தனம் நடத்தக் காலமாயிற்றல்லவோ!

14. என் மகள் ஜாதியோ அழகோ பாராமல் எந்த விசுவாசியையும் மணக்கத் தயார். ஆனால் விசுவாசிகள் ரொக்கம், நகை கேட்கிறார்கள். தங்கள் ஜாதியிலேயே பெண் வேண்டுமென்கிறார்கள். இந்துவாயிருந்து மனந்திரும்பிய நான் என்ன செய்ய?

சத்தமாய்ச் சொல்லாதீர்கள், நமது விசுவாசிகள் பலர் கைதாகக் கூடும்! பண ஆசையும் ஜாதி வெறியும் கிறிஸ்தவத்தை ஆட்டிப் படைப்பது துக்கமே. உங்கள் மேய்ப்பர் உதவியை நாடுங்கள். மகள் கிறிஸ்தவ வாலிபருடன் பழகி தனக்கு விருப்பமானவரை மணக்க அனுமதிப்பது இன்னும் சிறந்தது. இந்த "ஜாதிப்பிசாசு" ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது. விசுவாசிகள் இப்படிப்பட்ட தீமைகளை ஒழித்துக்கட்ட வேண்டும் (ரோ 10:12).

15. என் தாயும் தாரமும் எதற்கெடுத்தாலும் சண்டை போடுகிறார்கள். எப்படிச் சமாளிப்பது?

நல்லதொரு மருத்துவமனையில் கைதேர்ந்த வைத்தியராய்ப் பார்த்து உங்கள் தொப்புள் கொடியை வெட்டிக்கொள்ளுங்கள். எல்லாம் சரியாகிவிடும் (எபே 5:31).

16. முழுநேர ஊழியம் செய்யத் தீர்மானித்துவிட்டேன். பெற்றோர் விடுவதாயில்லை. குழப்பமாயிருக்கிறது.

"யாதொருவன் என்னிடத்தில் வந்து தன் தகப்பனையும் தாயையும்... வெறுக்காவிட்டால் எனக்கு சீடனாயிருக்கமாட்டான்" என்றார் இயேசு. உண்மையாய் ஆண்டவரைப் பின்பற்ற விரும்பினால் குடும்பத்தில் சிக்கல்கள் எழாமலிருக்காது. எனவேதான் இயேசு உடனே "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீடனாயிருக்கமாட்டான்" என்றார் (லூக் 14:26,27).

17. என் பிள்ளைகள் எப்போதும் தங்களுக்குள் சண்டை போடுகிறார்கள்.

வேதத்திலும் காயீன் ஆபேல், இஸ்மவேல் ஈசாக்கு, ஏசா யாக்கோபு, யோசேப்பும் அவனது சகோதரும், இப்படியாக ஆதியிலிருந்தே

சகோதர சண்டைகளைப் பார்க்கலாம். அவர்களது விவகாரத்தில் தலையிடாமலிருப்பது நல்லது. பெற்றோர் பாரபட்சம் காட்டி, ஒருவரை ஒருவருடன் ஒப்பிட்டுப் பேசி அவர்களுக்குள் பொறாமையைத் தூண்டக்கூடாது (ஆதி 25:28; 37:3,4).

18. என் மகள் என்னைக் கணவனுடன் தூங்கவிடுவதில்லை, ஏன்?

ஒருவேளை அவள் நீங்களின்றி தனியாயிருக்கப் பயப்படலாம், அல்லது அவள் யாருடன் படுக்கிறாளோ அன்னாரை விரும்பாமலிருக்கலாம். அவளுக்கு நாய் குட்டியோ பூனைக்குட்டியோ ஒன்று வளர்க்க வாங்கிக் கொடுத்துப் பாருங்கள். அவளது படுக்கையறையில் சிக்கலேதுமுண்டோ என்றும் பாருங்கள்.

19. எங்கள் பிள்ளைகள் சுமாராகப் படிக்கிறார்கள். நன்றாக வேதம் வாசிக்கிறார்கள். ஞாயிறு வகுப்பில் மூவரும் தங்கள் வகுப்பில் முதலாயிருக்கிறார்கள். ஆனால் திட்டினால் அழுது கொண்டு பேச மறுக்கிறார்கள்.

உங்கள் பிள்ளைகள் நல்லவர்களும் உங்களை மகிழ்விக்க இயன்றதைச் செய்கிறவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களது ஆவியை முறித்துவிடக்கூடாது. திட்டாமல் அன்புடன் ஆலோசனை சொல்லிப் பாருங்கள். வளரும் பருவத்தில் சிறுபிள்ளைத்தனம் இருப்பதுதானே. தட்டிக் கொடுத்துக் கொண்டுபோங்கள். இந்நிலையில் உங்கள் அன்பினால் அவர்களைக் கவர்ந்துகொள்வது நல்லது. அவர்களது முயற்சிகளைப் பாராட்டுங்கள். முடிந்தபோதெல்லாம் பூங்கா, சர்க்கஸ், பொருட்காட்சி எங்காவது அழைத்துச் செல்லுங்கள். அதிகமான கண்டிப்பு பிள்ளைகளைச் சோர்படையச் செய்யும் (கொலோ 3:21).

20. காலை ஐந்து மணிக்குமுன் குடும்ப ஜெபம் நடத்த விரும்புகிறேன். பிள்ளைகளோ ஆறு மணிக்குத்தான் வருவோம் என்கிறார்கள்.

காலை ஐந்து ''உங்கள்'' தனித்தியான வேளை. ''அவர்கள்'' நேரத்திற்கு நீங்கள் ஒத்துப்போவது நல்லது (ஆதி 33:14; ஏசா 40:11).

21. என் 13 வயது மகன் விளையாட்டில் கில்லாடி, படிப்பிலோ பூஜ்யம்.

இவ்வயதில் அவன் படிப்பிலும் கவனம் செலுத்தவேண்டும். பிள்ளைகளுக்கு அடிப்படைக் கல்வி அவசியம். பள்ளி முடித்து கூடுமானால் கல்லூரியும் முடிப்பது அவசியம். படிப்பில் விட்டுக்

கொடுக்காதீர்கள். அதே சமயம் விளையாட்டையும் ஊக்குவியுங்கள். விளையாட்டு மையமான தர்சு பட்டணத்தில் பவுல் எப்படிக் கற்றுத் தேறினான் பாருங்கள்.

22. என் 15 வயது மகள் விளையாட்டுப் பிள்ளையாகவே இருக்கிறாள். படிப்பில் அக்கறையில்லை. ஓரிரு முறை கண்டித்தபின் அவள் அதையே செய்தால் அடித்துவிடுகிறேன். படிப்பில் குறைந்துகொண்டே வருகிறாள்.

ஞானம் விளங்க உங்கள் வாயைத் திறக்கவேண்டும். உங்கள் நாவின் போதகம் தயையுள்ளதாக இருக்கட்டும் (நீதி 31:26). எதையுமே கட்டாயப்படுத்தாமல் விட்டுப் பாருங்கள். அப்பொழுது பொறுப்புணர்வு வரலாம். ஓராண்டு படிப்பில் தோல்வியுற்றாலும் அது அவளுக்கு வாழ்க்கைப் படிப்பினையாகும்.

எப்படியானாலும் 15 வயது பிள்ளையை அடிப்பது நன்றன்று. உங்களைக் கோபமூட்ட வேண்டுமென்றே அவள் சிலவற்றைச் செய்யலாம். அதைக் காணாதது போலிருங்கள். பொதுவாக அன்பும் கரிசனையும் காட்டி நல்லுறவு உருவாக்குவதில் கவனம் செலுத்துங்கள். பெண்ணைப் போற்றி வளர்க்கவேண்டும் என்பார்கள். அவ்வப்பொழுது வேதத்திலிருந்தும், உங்கள் வாழ்க்கையிலிருந்தும், படித்த, கேள்விப்பட்ட காரியங்களிலிருந்தும் எடுத்துக்காட்டுகள் சொல்லிப் போதிக்கத் தருணங்கள் சிக்கும். அன்பிற்கு அடிபணிவாள். யெப்தாவின் அன்பல்லவோ அவனது வாலிப மகள் தன் உயிரையும் தகப்பனுக்காக அர்ப்பணிக்கச் செய்தது? (நியா 11:36).

23. நான் ஊழியம் செய்வதினால் பிள்ளைகளோடு நேரம் செலவழிக்க முடிவதில்லை.

ஆண்டவருக்கு முதலிடம், அடுத்து குடும்பம், அதற்கடுத்து ஊழியம் என்ற வரிசையை மாற்றக் கூடாது. இதனால் சில ஊழிய வாய்ப்புகளை இழந்தாலும் பிள்ளைகளை இழப்பது இன்னும் மோசமல்லவா? ஏலியும் சாமுவேலும் பெரும் ஊழியராயிருந்தாலும் அவர்களது ஊழியம் அவர்களோடே முடிந்தது. ஆனால் ஆபிரகாமைக் குறித்தோ தேவன், ''அவன் தன் பிள்ளைக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்று அறிந்திருக்கிறேன்'' என்றார் தேவன் (ஆதி 18:19). அதையே தேவன் உங்களிடமும் எதிர்பார்க்கிறார்.

பிள்ளைகளோடு விளையாடுவதும், தொடர்ந்தேர்ச்சியான ஊழியத்திற்குப்பின் ஒரிரு நாட்கள் குடும்பத்தோடு இருப்பதும் நேரத்தை வீணாக்குவதாய்த் தெரியலாம். சிலர் சுட்டியும் காட்டலாம். அதைக்

குறித்து நீங்கள் குற்றவுணர்வடையத் தேவையில்லை. எல்லா வாரயிறு தியிலும் ஊழியத்திற்குச் செல்லாதீர்கள்.

24. என் மகனை தேவபக்தியில் வளர்த்தேன்; வேதத்தை வீட்டில் கற்பித்தேன்; ஆலயத்திற்கும் ஞாயிறு பள்ளிக்கும் அழைத்துச் சென்றேன்; அவனுக்காக ஜெபித்தும் வந்தேன். வாலிப வயதை எட்டியவுடன் தவறான வழியில் செல்கிறான். நான் எங்கே தவறினேன்?

பெற்றோர் பிள்ளைகளை தேவபக்தியில் வளர்க்கக் கட்டளை பெற்றுள்ளனர் (எபே 6:4). ஆனால் தெரிந்து கொள்ளும் பொறுப்பு பிள்ளையினுடையதே. தேவனது அநாதி தீர்மானத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது. குடிகாரரது பிள்ளைகள் தேவ ஊழியராகி யிருக்கின்றனர், ஊழியரது பிள்ளைகள் நல்ல வளர்ப்பின் மத்தியிலும் குடிகாரராயிருக்கின்றனர். ஒரே கூரைக்கடியில் ஒரே போதனையில் வளர்க்கப்பட்ட மூவரில் இருவர் இரட்சிக்கப்பட்டு ஒருவர் கெட்டுப் போகலாம். ஆகவே நீங்கள் குற்றவுணர்வடையத் தேவையில்லை. உங்கள் மகன் தேவனுக்குத் தானே கணக்கொப்புவிக்க கடமைப் பட்டிருக்கிறான். தேவனது வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டு அவனுக்காய் ஜெபித்துக்கொண்டிருங்கள். இரட்சிப்பு கர்த்தருடையது என்பதை மறந்துவிடாதீர்கள்.

25. நான் விசுவாசியாயிருக்க, அவிசுவாசியான என் பெற்றோ ரிடம் முக்கிய காரியங்களுக்கு ஆலோசனை கேட்டால் தவறிப் போக வாய்ப்புண்டோ?

அவசியமல்ல. பெற்றோர் பிள்ளைகளை நேசித்து அவர்களுக்கு நேர்த்தியானதைச் செய்யவே விரும்புகின்றனர். அவர்களுக்கு உலக அறிவு உண்டு. ஆகவே அவர்களைக் கேட்பது நல்லது. ஆனால் நீங்கள் வயது வந்தவரானால் முடிவான தீர்மானம் உங்களுடையதாகவே இருக்கவேண்டும். கர்த்தருடைய வழிநடத்துதலுக்காக ஜெபியுங்கள். பெற்றோர் சொன்னதைச் சிந்தியுங்கள். வேதம் அக்காரியத்தைக் குறித்துப் போதிப்பதை அறிந்துகொள்ளுங்கள். சமயோசித புத்தியைப் பயன்படுத்தி நலமாய்த் தோன்றுவதைச் செய்யுங்கள். பெரிய விவகாரங்களுக்கு உங்கள் ஆன்மீகத் தலைவரையும் கேட்டுக்கொள் ளலாம் (கொலோ 3:20; எபே 6:1-3).

26. நான் ஓர் ஆசிரியன், விசுவாசி, வயது 26. சில வருடங்க ளாக விசுவாசியான ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். எங்கள் குடும்பங்களோ ஒத்துவர மறுக்கிறார்கள்.

இந்தியாவில் திருமணம் என்பது குடும்ப விவகாரம். ஆகவே ஓரிரு ஆண்டுகள் ஜெபத்துடன் காத்திருப்பது நல்ல சாட்சியாகும். உங்கள்

போதகரோ, தேவபக்தியுள்ள ஒரு தம்பதியரோ பெற்றோருடன் பேசட்டும். அப்படியும் காரியம் காயானால் போதகர், விசுவாசிகள் உதவியுடன் தாலிகட்ட வேண்டியதுதான். பெற்றோருக்குப் பயந்து சில வாலிபர் தங்கள் நெடுநாள் காதலிகளை கைவிட்டுவிடுகின்றனர். அது தவறு. குழந்தையாயிருந்தபோது குழந்தையைப் போல பேசினீர்கள், குழந்தையைப் போல சிந்தித்தீர்கள், குழந்தையைப் போல யோசித்தீர்கள்; புருஷனாகும்போது குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட வேண்டும் (1 கொரி 13:11).

திருமண வயதான தம் பிள்ளைகள் ஒருவரையொருவர் விரும்புகிறார்கள் என்று அறிந்தால் பெற்றோர் இருவரும் கூடிவந்து காரியத்தை முடித்துவைப்பது நல்லது. வயதுவந்த பிள்ளைகள் தங்கள் வாழ்க்கைக்குத் தாங்களே பொறுப்பாளிகள்.

27. எங்கள் சுதந்திரத்தைப் பெற்றோர் நசுக்குவதேனோ?

பன்னிரண்டு வயதுவரை உங்களுக்கு அதிகப் பாதுகாவல் தேவையாதலால் பெற்றோர் இறுக்கிப் பிடிப்பர். பின்பு நீங்கள் பறக்கத் துடிப்பது இயல்புதான். இருப்பினும் உலகின் வலைகளை நீங்கள் அறியாதபடியால் பெற்றோர் பயப்படும் பயம் நியாயந்தானே? உங்கள்மேல் பெற்றோருக்கு நம்பிக்கை வரவேண்டும். நண்பரை வீட்டிற்கு அழைத்து வந்து பெற்றோருக்கு அறிமுகப்படுத்துங்கள். அவர்கள் சரியானவர்களானால் பெற்றோர் நிச்சயமாய்ப் பாதுகாவலான இடத்திற்கு அனுப்பி வைப்பர். சொன்ன நேரத்திற்கு ஒரு நிமிடம் முன்னே வந்து நிற்க வேண்டும். நடந்த எல்லாவற்றையும் வரிவிடாமல் சொல்லுங்கள். அப்பொழுது பெற்றோருக்கு நம்பிக்கை வரும். வளர வளர அனுப்பும் நேரத்தைக் கூட்டுவர். நம்பிக்கைக்கேதுவாக நடந்துகொள்வீர்களானால் பக்கத்தூருக்கு ஒருநாள் சென்றுவரக்கூட அனுமதிக்கலாம். படிப்படியான விடுதலை உலகிற்குள் எச்சரிக்கையோடு நுழைய உங்களுக்கு அநுகூலமாகும். உங்கள் வாழ்க்கை சேதமடைந்துவிடக்கூடாது என்பதே பெற்றோரின் பெருங் கவலை. ஆகவே முக்கிய காரியங்களை அவர்களைக் கேட்காமல் செய்யத் துணியாதீர்கள். அதுவே உங்களுக்குப் பாதுகாவல் (புல 3:27).

இன்றைய வாலிபர், பெரியவர் அனுபவிக்கும் சிலாக்கியங்கள் யாவும் வேண்டும் என்கின்றனர். ஆனால் பொறுப்புகளை ஏற்க மறுக்கின்றனர். கீழ்வரும் கேள்வியிலும் உங்களுக்குப் பதிலுண்டு.

28. பொறுப்பற்ற வாலிபரை என்ன செய்வது?

வாலிபருக்கு சிலாக்கியங்களோடு பொறுப்புகளையும் கொடுக்கப் பெற்றோர் கவனமாயிருக்கவேண்டும். வளர்க்கப் பிராணிகள் வேண்டு

மென்கின்றனரா? அவர்களே அதை முற்றிலும் கவனிக்க வேண்டு மென்ற நிபந்தனையுடன் வாங்கிக்கொடுங்கள். முந்தின நாள் பாடங் களைப் படித்திருந்தால்தான் TV. வீட்டில் உதவி செய்தால் நண்ப ரோடு வெளியே செல்லலாம். விலையான பொருட்கள் கேட்டால் ஏதேனும் வீட்டில் வேலைசெய்து சம்பாதிக்கத் திட்டம் வகுத்துக் கொடுங்கள். பொறுப்பற்று நடந்தால் சிலாக்கியங்களை நிறுத்துங்கள். நாயைக் கவனிக்கவில்லையா? அதை ஒழித்துக்கட்டுங்கள். பரீட்சையில் தோல்வியா? TVயைப் பூட்டி வையுங்கள். பிள்ளைகளுக்குக் கோபம் வரத்தான் செய்யும். பெற்றோர் கண்டுகொள்ளக் கூடாது (2 தெச 3:10).

சிலர் ஒன்றில் அதிகக் கவனம் செலுத்தி மற்றொன்றில் கவலை யற்றிருப்பர். விளையாட்டு வீரன் விருதுகளைச் சேர்ப்பான், படிக்க மாட்டான். வகுப்பில் முதலாய் நிற்பவள் வீட்டுவேலை செய்யச் சிணுங்குவாள். வேதத்தை தூக்கிக் கொண்டு நண்பரையெல்லாம் ஆதாயப்படுத்தித் திரிபவன் வேறொன்றிலும் துலங்காமலிருக்கலாம். இவர்களைச் சற்றுத் தட்டிக்கொடுத்து செய்வதைப் பாராட்டி மற்ற தையும் செய்ய ஊக்குவித்து மெதுவாய் நடத்துவது நல்லது.

29. என் வாலிப மகள் அடிக்கடி தன் அறையைப் பூட்டிக் கொள்கிறாள். பிறரோடு கலகலப்பாயிருப்பதில்லை.

வாலிபர் செய்வதுதான். அதையும் நாம் மதிக்கவேண்டும். விட்டுவிடுங்கள். உறவைக் கட்டி எழுப்புவதில் கவனம் செலுத்துங்கள் (கொலோ 3:14). அவளது சிநேகிதிகளை அவ்வப்போது வீட்டிற்கு அழையுங்கள்.

30. என் மகனைக் கடுமையாய்த் தண்டித்து வளர்த்தேன். என் தவற்றை உணர்ந்து இப்போது என் அன்பை நிரூபிக்க முயலு கிறேன். அவனோ என்னை வெறுக்கிறான்.

நாம் எல்லாரும் மனிதர், எல்லாரும் தவறு செய்கிறோம். ஆனால் உணர்ந்து வருந்தும்போது ஆண்டவர் நம் பக்கமாய் நிற்கிறார். கடந்ததைக் குறிப்பிடாமல் உண்மையாய் அன்பு பாராட்டி வாருங்கள். கர்த்தர் சீக்கிரம் அவன் உள்ளத்தைத் தொடுவார். அன்பு தவறாது (1 கொரி 13:8).

31. என் தகப்பனார் எபேசியர் 6:1ஐயே பினாத்துகிறார். நான் 6:4ஐயே திருப்பி அடிக்கிறேன். இருவரும் அபிஷேகம் பெற்று ஊழியமும் செய்கிறோம். ஆனால் நாயும் பூனையும் போல் இருக்கிறோம்.

பிள்ளைகள் பெற்றோரைக் கனம் பண்ணவேண்டும் என்றிருக் கிறது. ஆகவே பெற்றோரின் கட்டளை வேதத்திற்கும் உங்கள் வாழ்வில்

தேவ சித்தத்திற்கும் முரண்படாதிருந்தால் நீங்கள் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். பெற்றோருக்குக் கீழ்ப்படிவதினால் தேவனுக்குக் கீழ்ப் படியாமற்போகும் நிலையானால், எரிச்சலின்றி கெட்ட வார்த்தைக ளின்றி பணிவுடன் சொல்லவேண்டும். கோபமின்றி உறுதியாயிருக்க லாமே.

பெற்றோர் பிள்ளைகளிடம் ''நன்றி, மன்னித்துக்கொள், தயவு செய்து, எடப்பா, கொடப்பா, வா ராஜா, என்னம்மா கண்ணே'' என்று பட்சமாய் மரியாதையுடன் பேசினால் சுலபமாய்க் கட்டளையிடலாம். அன்பிற்கு மிருதுவான பக்கமும், கடினமாக பக்கமும் உண்டு. சில பெற் றோர் எப்போதும் மிருதுவாயிருந்து பிள்ளைகளைக் கெடுத்துவிடுவர். சிலர் எப்போதும் கடினமாயிருந்து பிள்ளைகளை உடைத்துவிடுவர். எப்போது கொஞ்சவேண்டும், எப்போது மிஞ்சவேண்டும் என்று பெற்றோர் தெளிந்த புத்தியோடு பிள்ளைகளை நடத்துவது அவசியம்.

32. **நான் எவ்வளவோ முயற்சி எடுத்தாலும் என் இரு பிள் ளைகள் வேதத்தையோ பாடத்தையோ படிப்பதில்லை.**

பிள்ளைகள் புத்துணர்வுடன் இருக்கும் நேரமாய்ப் பாருங்கள். பள்ளியிலிருந்து வந்ததும் விளையாடவும் இளைப்பாறவும் நேரம் கொடுங்கள். படிப்பினைக்கு உயிரூட்டுங்கள். படங்கள், மற்றவை களைக் காட்டிக் கற்பியுங்கள். பூவோ, செடியோ கையிலில்லாமல் பூவைக்குறித்தும் வேரின் பாகங்களைக் குறித்தும் கற்பிக்க முற்படா தீர்கள். விதைகள் முளைப்பதைப் பிள்ளைகள் நேரில் காணட்டும். தவளை முட்டையை வீட்டிற்குக் கொண்டுவந்து அதிலிருந்து தலைப் பிரட்டைகள் வருவதையும் அவைகள் தவளைகளாவதையும் கண் கூடாகக் காணட்டும். முட்டைகள், சிறகுகள், பட்டாம்பூச்சிகள், வண்டுகள் போன்றவற்றைச் சேர்க்க ஊக்கமூட்டுங்கள். பள்ளிகளிலும் வீடுகளிலும் மறக்கப்பட்ட கலை இது. இயேசுவானவர் இப்படிப் போதித்தே மக்களைக் கவர்ந்தார்.

படிப்பு நேரத்தில் சற்று கண்டிப்பும் தேவைதான். நன்றாக படிக்கும் போது சிறு வெகுமதி அளியுங்கள்.

33. **என் பெற்றோரின் அனுமதியின்றி நான் ஞானஸ்நானம் பெறலாமா?**

பெறலாம் — 12 வயதிற்கு மேலானால், நீங்கள் செய்வது இன்ன தென்று புரிந்து கொண்டீர்களானால் (லூக் 2:49).

34. **பெற்றோருக்குக் கீழ்ப்படிந்தாலும் பாராட்டில்லை.**

அம்மா சமைப்பதற்காக, அப்பா படிக்க வைப்பதற்காக நன்றி செலுத்தினீர்களா? இவை புரிந்துகொள்ளப்படவேண்டியவை. நீங்களே முதலாவது பாராட்டிப் பார்க்கலாமே.

பெற்றோர் பாராட்டு பிள்ளைகளில் அற்புதங்களை நடப்பிக்கும். குற்றஞ்சாட்டுதலையோ திட்டுவதையோவிட அது மேலானது. பாராட்டுவதினால் உங்களுக்கும் பிள்ளைக்குமிடையே அன்புறவு உருவாகி சரியான பேச்சுப் பரிமாற்றத்திற்கு வாசல் திறக்கிறது. குடும்ப ஜெபத்திலும் அவர்கள் திருந்த ஜெபிக்காமல் அவர்களது நற்குணங்களுக்காகத் துதிக்கலாம் (1 சாமு 14:44,45).

35. பிள்ளைகள் TV பார்ப்பதை எப்படி ஓர் ஒழுங்கிற்குக் கொண்டு வரலாம்?

பெரும்பாலானோரின் கேள்வி இதுதான். இதுதான் இன்றையப் பெரும் சிக்கல்போல் தெரிகிறது. சிறுவர் TVயைப் போட அனுமதி கொடுக்கக் கூடாது. TVயைப் பூட்டி வைப்பது நல்லது. பிள்ளைகள் எதை எப்பொழுது பார்க்கவேண்டுமென்பதை பெற்றோர் தீர்மானிக்க வேண்டும். வேதம் வாசித்து ஜெபிக்காவிடில், படிப்பில் கவனம் செலுத்தாவிடில் TV கூடாது. பெற்றோர் அவ்வப்பொழுது பிள்ளைகளுடன் உட்கார்ந்து பார்ப்பதினால் எதைப் பார்க்கலாம், எப்போது அணைக்கவேண்டும் எனப் போதிக்கலாம். ஆராதனை நேரத்தில் பிள்ளைகள் TVக்காக வீட்டில் இருக்க ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. பிள்ளைகளை அவ்வளவு கட்டுப்படுத்த முடியாவிடில் வீட்டில் உங்கள் அதிகாரத்தை இழந்துவிட்டீர்கள் என்றுதான் அர்த்தம். வீட்டிற்குத் தலைவனாகிய தகப்பன் குடும்பத்தை ''நடத்தவும்'' பிள்ளைகளைக் ''கீழ்ப்படியப்பண்ணவும்'' வேண்டும் (1 தீமோ 3:4).

36. TVயில் வரும் நாடகங்களைக் காணவும், சாதா பாடல் கேசட்டுகளைக் கேட்கவும் என் வாலிப மகன் விரும்புகிறான்.

பெரும் பாவமில்லாத பட்சத்தில் வாலிபரை இக்காரியங்களில் விட்டுத்தான் பிடிக்கவேண்டும். அப்படி விடுவதினால் போதை மருந்துகள், காதல் கூத்துகள் போன்ற அபாய விவகாரங்களில் அவர்களை இறுக்கிப் பிடிக்கலாம்.

37. வேதம் வாசிக்காததற்காய் மகனை அடிக்கலாமா?

கத்துவது, அடிப்பது, சபிப்பது, பயமுறுத்துவதெல்லாம் மன அமைதியைக் கெடுக்கும். பதிலாக வேதம் வாசித்து ஜெபித்த பின்புதான் காலை உணவு என்று சட்டம் போட்டுவிட்டால் கொஞ்ச நாள் கெடுபிடியாக இருக்கும். பின் ஒழுங்கிற்கு வந்துவிடும். பிள்ளையை உணவின்றி அனுப்புவது கடினம்தான். ஆனால் நரகத்திற்கு அனுப்புவதிலும் அது மேலல்லவா? பிள்ளை படித்த பகுதியில் சில கேள்விகள் கேட்டு, புரிந்து கவனமாய்ப் படித்தாளா என்று பார்க்கவேண்டும். பின்

அப்பகுதியைச் சுவையாய் விளக்க வேண்டும். காலை கடினமானால் இரவு உணவிற்கு முன் செய்யலாம் (உபா 6:7).

38. பொறுப்பின்றி திரிந்து எங்கள் எல்லாரையும் வேதனைக் குள்ளாக்கும் என் தந்தைக்காய் நான் என்ன செய்யலாம்?

வயதுவந்த பொறுப்பற்றவருக்காக செய்யக்கூடியது ஜெபம் மட்டுமே (அப் 16:31).

39. எங்கள் நிலைமைக்கு மிஞ்சியதைப் பிள்ளைகள் கேட்கி றார்கள்.

பிள்ளைகளை எல்லாவற்றிலும் திருப்தி செய்ய நினைக்க வேண் டாம். 'கிடையாது' என்ற பதிலை ஏற்றுக்கொள்ளப் பிள்ளைகள் பழக வேண்டும். கொஞ்சத்தில் இருக்கப் பழகுவது அவர்களது வருங்காலத் திற்கு நல்லது (பிலி 4:11,12).

40. விவாகமில்லாதிருக்கும் வரம் எனக்குண்டென்று எப்படி அறிய? (1 கொரி 7:7). மாப்பிள்ளை வேட்டையாடும் என் பெற்றோருக்கு அதை எப்படிச் சொல்வது?

நீங்கள் விரத்தராயிருக்கத் தீர்மானிக்கலாம். ஆனால் அப்படி வரம் உங்களுக்கு உண்டென்று யாரிடமும் சொல்ல அவசியமில்லை. பெற்றோரிடம் ''இப்பொழுது'' திருமணம் வேண்டாம் எனக் கூறி விடலாம். அப்படியானால் பின்னாட்களில், ஒருவரை விரும்பினால் திருமணத்தைக் குறித்து யோசிக்கத் தயங்க வேண்டியதிருக்காது.

தனிவாழ்வு முடியாது என்றில்லாவிடினும் அது சுலபமல்ல. வாலிபப் பெண்கள் திருமணத்தை ஒத்திப்போட்டுவிட்டு (தனிமைக் கொடுமை யில்) திருமணம் வேண்டுமென நினைக்கும்போது வாலிபம் கடந்து வாடத் துவங்கியிருப்பதைக் காண்பர். ஆண்கள் பொதுவாக 25இல் 2-5 வயது குறைவான பெண்ணைத் தேடி மணமுடிப்பர். ஆகவே 25ஐத் தாண்டிவிட்டால் மாப்பிள்ளைகள் சொற்பமே. 30ஐத் தாண்டிவிட்டால் கடினம்தான். ஆகவே தீர்மானம் எடுக்குமுன் இரு பக்கத்தையும் யோசித்துச் செய்யுங்கள். எப்படியும் வயதான பெற்றோருக்குப் பாரமா யிருக்கக் கூடாது (ஆதி 2:18; 1 கொரி 7:34,35).

41. என் துணையைத் தெரிந்தெடுப்பதில் எனக்குப் பங்கே கிடையாதா? வாயை மூடு என்கின்றனர் பெற்றோர். பயமுறுத் தவும் செய்கின்றனர்.

பல வாலிபப் பெண்களின் கூக்குரலிது. பையனை மணக்கப் போவது மகள்தானே, பெற்றோரல்லவே. பெற்றோர் அவளுக்கு உதவி

தான் செய்யலாம். பெண் எப்படிப்பட்டவரை விரும்புகிறாள் என்று அவளது மனதை அறியவேண்டும். தெரிந்தெடுத்த பையனை மணக்க அவள் மனப்பூர்வமாய்ச் சம்மதிக்கும்வரை பெற்றோர் பொறுமையுடன் காத்திருக்கவேண்டும். அவள் விரும்பாத ஒருவரை மணக்க அவளை நெருக்கக்கூடாது. கி.மு. 1900இலேயே பெண்களுக்குத் தங்கள் திருமணக் காரியத்தில் பேச்சுரிமை இருந்தது. ரெபெக்காளின் தாயும் சகோதரனும் அவளைக் கூப்பிட்டுக் கேட்டு அவள் சம்மதித்த பின்னரே அவளை அனுப்பினர். பெற்றோர் 'வாயை மூடு' என்று எப்படிச் சொல்லலாம்? (ஆதி 24:57,58).

42. நான் காதலித்த பெண்ணை மணந்தேன். என் தாய் மிகவும் எதிர்த்தார்கள். இப்போது வருந்துகிறார்கள். ஆனால் என்னால் மன்னிக்க முடியவில்லை.

கசப்பை வைத்துக்கொண்டிருப்பதில் லாபமென்ன? தயவுசெய்து ஒப்புரவாகுங்கள் (கொலோ 3:13).

43. நான் விசுவாசி. பெற்றோர் இன்னும் விக்கிரகங்களை வணங்குகின்றனர். எனக்கு அவர்களால் பெண் தேட முடியாது. விசுவாசிகளோடு ஐக்கியம் கொண்டாலும் வீட்டிலும் என் மக்க ளிடையேயும் தனிமையை உணருகிறேன்.

இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் குடும்பத்தையோ சுற்றத் தாரையோ விடவேண்டுமென்பதில்லை. அவர்களோடு நன்றாகப் பழகுங்கள். மகிழ்வுடன், விளையாட்டுத்தனமாக, தமாஷாக, பரஸ்பர சிநேகத்துடன் யாவருக்கும் உதவி செய்பவராக இருங்கள். விக்கிரகத் திற்கு விலகியிருங்கள். இதனால் அவர்களையும் ஆண்டவரிடம் கொண்டு வர வாய்ப்புண்டு (லூக் 8:39). உங்கள் போதகர் அல்லது ஆவிக்குரிய தலைவரின் ஒத்தாசையோடு பெண் தேடுங்கள்.

44. என் மகன்கள் வீட்டை விட்டுத் தூர இடத்தில் கிடைக்கும் வேலையில் சேர மறுக்கிறார்கள். போகச் சொன்னால் 'துரத்து கிறீர்கள்' என்கிறார்கள்.

அவர்களது செலவுகளை ஒவ்வொன்றாய்க் குறைத்துப் பாருங்கள். துணிமணிகள், மற்றவை வாங்கித் தர வேண்டாம். கை செலவிற்கும் கொஞ்சம் பணம் கேட்கத் துவங்குங்கள். பெற்றோர் தங்கள் இதயத் தைக் கடினப்படுத்தாவிடில் மகன்களுக்கு உதவத் தவறிவிடுவீர்கள். குஞ்சுகளைப் பறக்க பழக்குவிக்கக் கழுகு தன் கூட்டைக் கலைத்து விடு மாம். இல்லாவிடில் குஞ்சுகள் தாய்ப் பறவை வாயில் இரைபோடு மென்று சுகமாய்க் காத்திருக்கும் (உபா 32:11).

45. எங்கள் மகன் மிஷனரியாக விரும்புகிறோம். அவனுக்கோ விருப்பமில்லை.

அவனைக் கட்டாயப்படுத்தக்கூடாது. அவனாகவே தன் மன விருப்பதின்படி தன் வேலையைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

46. எவ்வளவு சீக்கிரம் ஒரு குழந்தை இரட்சிக்கப்படக்கூடும்?

பரலோக இராஜ்யம் சிறுபிள்ளைகளுடையது. ஆகவே மரிக்கும் எந்த சிசுவும் மோட்சத்திற்குத்தான் செல்லுகிறது. பிள்ளைகள் வளரும் போது இயல்பாகவே கீழ்ப்படியாமை உள்ளவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் பெற்றோர் கண்டிப்பும் அன்பும் காட்டி வளர்த்தால் நன்றாய்ப் பழக்கலாம். மூன்று வயதிற்கு முன்பே பிள்ளைகள் இயேசுவை நேசிக்கவும் அவரில் நம்பிக்கை வைக்கவும் கற்பிக்கப்படலாம். பின்பு அந்தப் பிள்ளை கர்த்தரை அறிகிற அறிவிலும் தேவ பயத்திலும் வளரலாம். ஆகவே ஒரு சிசு வழியில் தொலைந்து போகாமல் தேவ ராஜ்யத்திற்குள்ளேயே வளர்ந்து விடலாம். சின்ன சாமுவேல் நல்ல எடுத்துக்காட்டு. ஆனால் திருமுழுக்கு பெற அப்பிள்ளை அறிவும் பொறுப்பும் வரும்வரை காத்திருக்கவேண்டும்.

47. இரட்சிக்கப்பட்ட என் மகள் பாவத்தில் (காதலில்) விழுவதை எப்படித் தடுக்கலாம்?

தடுக்க முடியாது. முதலாவது காதலிப்பது பாவமில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். இவ்வயதில் காதலில் தடுக்கி விழுவர், எழுந்திருப்பர், காயப்படுவர், கண்ணீர் விடுவர். இதுவும் ஒரு வளர்ச்சி. கன்னியொருத்தியை வாலிபனொருவனோடு பழக அனுப்பி வைப்பது தமிழ்ப் பண்பாட்டிற்கு ஒவ்வாது. அது மேலை நாட்டுப் பழக்கம். பிள்ளைகளை தீயில் விளையாட அனுமதிப்பது போன்றது அது. மேலைநாடுகளில் அதன் விளைவு நமக்கு முன்மாதிரியாக இல்லை. இருப்பினும் அவள் வாலிபரைச் சந்திக்காமலேயே வைக்காதீர்கள். பெரியவர்கள் இருக்கும்போது சந்தித்துப் பழகட்டும். நீங்கள் அவளுடன் சிரித்துப் பேசி நேரம் போக்கவும், வெளியே செல்லவும், அவள் விரும்பிச் செய்வதைக் கூடச் சேர்ந்து செய்யவும் பழகுங்கள். உங்களிடம் எல்லாவற்றையும் வந்து சொல்லவும் எதையும் தயங்காமல் கேட்கவும் அவளுக்கு நம்பிக்கை வருமளவு பட்சமாயிருங்கள். இவ்வுறவு சிறுவயதிலிருந்தே கட்டி எழுப்பப்படவேண்டும். வாசிக்க சில புத்தகங்கள் கொடுக்கலாம். வாலிபரைக் குறித்த TV படம் அல்லது வீடியோ அவளுடன் பார்த்தால் அதையொட்டி காதல், அதின் ஆபத்துகள், இனவிருத்தி, கர்ப்பமாதல், தாய்மையின் மேன்மை, தீட்டு, துணைவரைத் தேர்ந்தெடுப்பது (அவள் பங்கும் பெற்றோர் பங்கும்)

போன்றவற்றைக் குறித்துப் பகிர்ந்து கொள்ளலாம். பெண்ணினத்தையும் மறுபாலரையும் அவன் மதிக்கக் கற்பிக்க வேண்டும்.

வாலிபப் பிள்ளைகள் பள்ளிப் படிப்பின் போது காதலிக்கக் கூடாது. யாக்கோபு ராகேலைக் காதலித்தான் என்கிறீர்களே. நீங்களும் ஆடு மேய்ப்பதானால் பரவாயில்லை! மற்றபடி உங்கள் படிப்பு கெடும், சாட்சி கெடும், எதிர்காலமும் கெடும். படித்து முடித்தபின் திருமணத்தைக் குறித்துச் சிந்தியுங்கள்.

48. நாங்கள் தத்தெடுக்கலாமா?

தாராளமாக! எத்தனை முடியுமோ அத்தனை எடுங்கள். தேவனது உள்ளம் குளிரும். ஒருவன் ஓர் அநாதைப் பிள்ளைமேல் பரிதாபம் கொண்டதால் யூதக் குலமே காப்பாற்றப்பட்டது (எஸ்தர் 2:7).

49. ஒரு பிள்ளையை எப்படி இரட்சிப்பில் நடத்துவது?

குழந்தையைத் துவக்கத்திலிருந்தே ஆலயத்திற்கு ஒழுங்காய்த் தூக்கி வாருங்கள். குழந்தை குடும்ப ஜெபத்திலும் இருக்கட்டும். அவன் 'அம்மா, அப்பா' என்று சொல்லத் துவங்கும்போது 'இயேசு' என்று சொல்லக் கற்பியுங்கள். மெதுவாக 'இயேசு நல்லவர்' என்று சொல்லக் கற்பிக்கலாம். 2-3 வயதில் சிறுவர் வேதாகமத்தில் படம் காட்டிக் கதை சொன்னால் வாயில் ஈ போவது தெரியாமல் கேட்பான். ஆதியாகமம் துவங்கி வெளிப்படுத்தல் வரை உணர்ச்சியோடு கவர்ச்சிகரமாய்ச் சொல்லுங்கள். ஐந்து ஆண்டுகளுக்குத் தாராளமாய் தினமும் சொல்லலாம். கிரமமாய், உத்தமமாய், ஜெபத்துடன் செய்தால் பிள்ளை சீக்கிரம் இரட்சிக்கப்படும். பள்ளியில் அச்சரம் கற்றவுடன் சிறுவர் வேதாகமத்தில் தினம் ஒரு வாக்கியம் வாசிக்க வைத்து விளையாட அனுப்பிவிடுங்கள். மெதுவாகக் கூட்டுங்கள் (2 தீமோ 3:15).

50. வாக்குத்தத்தங்களை நம்பிப் பிள்ளைகளைக் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் வளர்க்கிறோம். இருப்பினும் இந்தப் பொல்லாவுலகில் அவர்களை இழந்துவிடுவோமோ என்ற பயம் மேற்கொள்ளுகிறது.

தேவனுக்குப் பல பெயர்கள் உண்டு. ஆனால் பிள்ளை வளர்ப்பைப் பொறுத்தமட்டில் அது ''அதிசயம்!'' அந்த நாமத்தைப் பற்றிக் கொள்ளுங்கள் (நியா 13:18).

13

மகளிடமிருந்து ஒரு மடல்

பாசமுள்ள பப்பா, மம்மிக்கு,

வாழ்க்கை அலைகளை ஒன்றாய்த் தாண்டி இருபத்தேழு ஆண்டு கள் வளர்ந்து வந்திருக்கும் உங்களுக்கு இம்முக்கியக் கட்டத்தில் (1997) இவ்விதக் கடிதமொன்றெழுத என் பேனாவை எடுத்தேன். உங்களுக்கு மகளானதினால் நான் அனுபவித்தவற்றையும், அது என் வாழ்வையும் பிறர் வாழ்வையும் எப்படிப் பாதிக்கிறது என்பதையும் இங்கு எழுத முனைந்துள்ளேன்.

எல்லாப் பிள்ளைகளைப் போல நானும் ***அன்புக்கு*** ஏங்கினேன். அதை உண்மையாய், முழுமையாய், என்னிடம் எதுவும் எதிர்பாராமல் அள்ளிக் கொடுத்தீர்கள். நீங்கள் செய்தவைகளினாலும் செய்யாதவை களினாலும் உறுதியான அந்த அன்பை வெளிப்படுத்தினீர்கள். நான் புரிந்துகொள்ளும் வகையில் உங்கள் தியாகமான அன்பைக் காட்டி னீர்கள். உங்கள் முத்தங்களையும் அரவணைப்புகளையும் கரங் கோர்த்து நடந்த நேரங்களையும் உள்ளமாகிய பெட்டகத்தில் பொதித்து வைத்திருக்கிறேன். அன்பிற்கு அலையத் தேவையில்லாமல் செய்து விட்டீர்கள். இல்லையேல் மன வளர்ச்சி குன்றி சிக்கல்களில் மாட்டிக் கொண்டிருப்பேன். ''பாப்பி கண்ணு'' என்று நீங்கள் சொன்னதும் எழுதி யதும் என்னை உங்களோடு பிணைத்ததோடல்லாமல் மனவுரத்தையும் தைரியத்தையும் அளித்தது.

எனது நற்குணங்களோடும் குறைவுகளோடும் நான் இருந்தபடியே என்னை நிபந்தனைகளின்றி ***ஏற்றுக்கொண்டீர்கள்***. அதை நான் புரிந்துகொள்ளச் செய்தீர்கள். அதனால் நான் செய்ததையெல்லாம் ஆமோதித்தீர்கள் என்பதல்ல. நான் செய்தது, செய்யாதது வைத்து நீங்கள் மாறவில்லை என்பதைத்தான் சொல்லுகிறேன். குடும்பத்திலோ

வெளியிலோ ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளவேண்டுமெனக் கற்பித்தீர்கள். அதனால் தேவனது ஒப்புமையற்ற படைப்பை அங்கீகரித்து மக்களை, எத்தனை வேறுபட்டவர்களாயிருந்தாலும், ஏற்றுக் கொள்ளப் பக்குவப்பட்டுள்ளேன்.

என்னை ஒரு ஆளாக, பெண்ணாக, மகளாக, கடவுளுடைய பிள்ளையாக *மதித்தீர்கள்*. எனது உணர்வுகளையும், கண்ணோட்டங்களையும், அபிப்பிராயங்களையும் மட்டுமல்ல, ஆலோசனைகளையும் கனம் பண்ணினீர்கள். மதிக்கப்பட்டதால் மதிக்கப் பழகினேன்.

நீங்கள் என்னை அற்புதமாய்ப் **புரிந்துகொண்ட** வேளைகளை நினைக்கும்போது என்னை அறியாமலேயே என் கண்கள் குளமாகின்றன. ''இவ்வளவு புரிந்துகொள்ளக்கூடிய பெற்றோர் இருக்கும் போது திருமணம் உனக்குத் தேவையா?'' என்றுகூட என் சிநேகிதிகள் கிண்டலடிப்பர். ஒரு மாணவியாக, ஊழியரின் மகளாக என்னைப் புரிந்துகொண்டீர்கள். புண்பட்ட வேளைகள், ஒரே மகளின் தனிமைகள், கடினமான பிரசவத்தில் பிறந்ததால் ஏற்பட்ட விளைவுகள், அதனால் நான் அனுபவித்த மன வேதனைகள், மற்ற பிள்ளைகளின் கேலிகள் மற்றும் துன்புறுத்தல்களின்போது உங்கள் அரவணைப்பு கீலேயாத்தின் பிசின் தைலமாயிருந்தது. சுயபரிதாபம் என்னை எங்கும் கொண்டு செல்லாது என்பதைப் பசுமரத்தாணியாய்ப் பதித்து விட்டீர்கள்.

சிறு காரியத்திலும் என்னைப் ***பாராட்டி உற்சாகப்படுத்தியது*** என்னில் ஆரோக்கியமான தன்னம்பிக்கையை நீரூற்றி வளர்த்தது. எனது குட்டிக் குட்டி அன்பளிப்புகளைச் சிரிக்காமல் ஆ ஊ என்று பொத்திப் பொத்தி வைத்துக்கொண்டீர்கள். எனது தோல்விகளைப் பெரிதுபடுத்தாமல் என் ஆள்தத்துவத்தைச் சமநிலை நோக்கோடு காணக் கற்பித்தீர்கள். எனது புன்முறுவலைக்கூடப் பாராட்டி ரோமர் 12:3இன்படி என்னை நான் நேசிக்க உதவி செய்தீர்கள். என் பள்ளி, கல்லூரிச் சாதனைகளைப் பாராட்டி, 'இது போதாது' என்ற எண்ணங் கொள்ளச் செய்யாமல், சிறப்பாய்ச் செய்ய, மேன்மையாய் நடந்து கொள்ள ஊக்குவித்தீர்கள். அதுவே குறைவெண்ணத்தில் கூனியிருந்த என்னை நிமிர்ந்து நடக்கச் செய்தது.

என்னைத் திருத்தும் நல்லெண்ணத்தோடுதான் செய்கிறீர்களென்பதை நான் ஊள்ளூரப் புரிந்து கொண்டாலும் தவறான சில வேளைகளில் என்னைக் கண்டித்தது என்னை உடைத்தது. என்னையல்ல என் தவற்றையே வெறுத்தீர்கள் என்பதை நான் புரிந்து கொள்ளாமலில்லை. பொதுவாக பாராட்டுகளுக்கு நடுவே புதைத்துதான் திருத்தங்களைக் கொடுத்தீர்கள். எனினும் சிறு பிள்ளைப்

பருவத்தில் என்னைக் குற்றம் கண்டுபிடிப்பதே உங்கள் வேலை என்று கருதிய நாட்களும் உண்டு. ஆனால் சத்தியத்தைக் கொண்டு அவ் வெண்ணத்தை மேற்கொள்ள உதவி செய்தீர்கள். நாலுபேர் நடுவில், அதுவும் என் சிநேகிதிகள் இருக்கும்போது, திருத்தங்களை வெறுத் தேன். நான் அதை விளக்கியபோது முழுமுயற்சி எடுத்து உங்களை மாற்றிக்கொள்ள முனைந்தீர்கள். உங்கள் கண்டிப்பு முறைகளைச் சீர்திருத்த சில நாட்களானாலும் இறுதியில் சாதித்துவிட்டீர்கள். நன்றி! சிறு பிள்ளையிடமிருந்து திருத்தங்கள் வந்தாலும் மனமாற அவைகளை ஏற்றுக்கொண்டு, உங்களை மாற்றிக்கொள்ள மனது வைத்த உங்கள் பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன். மகளின் திருத் தங்கள் உங்கள் சுய மதிப்பை நொறுக்கியிருக்கும். இருப்பினும் விளைந்த கதிர் வளையுமாற்போல் உங்கள் முதிர்ச்சியினால் குனிந்து ஏற்றுக் கொண்டீர்கள்.

உங்கள் கண்களைச் சற்றுத் திறக்கும்படியாக புதைந்து கிடந்த என் எண்ணங்களைத் தோண்டி சிலவற்றை எடுத்து வைக்க விரும்புகிறேன். இன்று குடும்பமாக நாம் பெற்றோர், பிள்ளைகளுக்கு ஆலோசனை கூறுவதால் இது அவசியமெனக் கருதுகிறேன்.

''பிள்ளைகளுக்குத் தேவை பணமல்ல, பெற்றோரின் நேரமே'' எனச் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு கட்டுரையில் நீங்கள் எழுதி யிருந்ததை மெச்சிக்கொள்ளுகிறேன். அதை நீங்கள் கண்டு கொண்ட தற்காக மகிழுகிறேன். ஆனால் ''நியாயமான'' காரணங்களினால் நீங் கள் நேரத்தை எனக்குக் கொடுக்க முடியவில்லை. அது என்னைக் காயப்படுத்திய ஒன்று. அந்த ''நியாயமான'' காரணங்களைப் புரிந்து கொள்ள எனக்கு இத்தனை ஆண்டுகள் ஆயின. பள்ளியிலும் சரி, கல்லூரியிலும் சரி, எந்தச் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும் நீங்கள் வருவ தில்லை. பரிசுகள் பெறும்போதும், பட்டம் பெறும் போதும் நான் அநாதைதான். மற்றப் பிள்ளைகளின் பெற்றோர் அவர்களை அணைத்துப் பாராட்டி அன்றிரவு வெளியே உணவருந்த அழைத்துச் சென்றதைப் பார்த்துக் கண் கலங்கினேன். முதுகு வளைய கனத்த பையைச் சுமந்துகொண்டு வீட்டை அடைந்து ஒரு கனத்த பூட்டு என்னை வரவேற்ற நாட்களும் நினைவிற்கு வருகின்றன. கசந்து கொண்டேன். சிலவேளை மேசையில் ஏதாவது பலகாரமிருக்கும். 'ஏன்?' என்ற கேள்விக்கு இப்போது விடை கிடைத்துவிட்டது. ஆனால் போய்விட்ட நாட்களைத் துரத்திப் பிடிக்க முடியுமோ? பள்ளியில் பரிசுகளை வாங்க மேடை ஏறி ஓடி வந்த காட்சி இனிக் காணக் கிடைக்குமோ? அந்த நினைவுகளை என் பொக்கிஷப் பெட்டிக்குள் பத்திரப்படுத்த கொடுத்து வைக்கவில்லையே எனக்கு! நீங்கள் முக்கிய மானவைகளுக்கு முதலிடம் கொடுக்கத் தவறியதால் புண்பட்டேன்.

தேவனது வரிசையை மாற்றி குடும்பத்திற்குமுன் ஊழியத்தை வைத்தீர்கள். நானோ தேவனது கிருபையினால் அதைச் சமாளித்து தனிமையையும், உங்கள் கவனக்குறைவையும் மேற்கொண்டேன். ஆனால் ஒவ்வொரு பிள்ளையும் இப்படித் தேறி வர எதிர்பார்ப்பது சரியோ ?

இன்னுமொரு குறை எனக்கு உங்கள் பேரில் உண்டு. பிறர் சொன்னதை வைத்து என்னைக் கணக்குப் போட்டதோடல்லாமல் என்னுடைய வார்த்தைக்குமேல் பிறரது வார்த்தைகளை நம்பினீர்கள். நம்மிருவருக்குமிடையே இருந்த நம்பிக்கையை அது தகர்த்தது. திரும்பவும் கட்டியெழுப்ப ஆண்டுகளானது.

''எல்லாவற்றையும் பிள்ளைகள் நினைவில் வைத்திருப்பதில்லை'' என்று பெற்றோர் சுலபமாய்ச் சொல்லிவிடுகின்றனர். ஆனால் பிள்ளைகளுக்கு என்ன நினைவிருக்கிறது, என்ன நினைவில்லை என்று பெற்றோர் அநேகர் கேட்பதில்லை; ஏனென்றால் அதற்கெல்லாம் அவர்களுக்கு நேரமிருப்பதில்லை ! (சொல்லப்போனால், ஒவ்வொரு துளியும் பிள்ளைகளுக்கு நினைவிருக்கிறது). நீங்கள் இப்போது அதை உணர்ந்துகொண்டதற்காகவும் என்னைக் கேட்டதற்காகவும் நன்றி.

''நான் உன் வயதாக இருக்கும்போது'' என்ற சொற்றொடரும் வீட்டில் அடிக்கடி காதில் கட்டெறும்பாய்ப் பாய்ந்தது. அதில் அர்த்தமிருக்கலாம், ஆனால் முறைகள் தூசியடைந்தவைதானே. காலம் மாறிவிட்டது... மாறிக்கொண்டே இருக்கிறது... உங்கள் வாழ்க்கையில் பயனளித்தவை எனக்கும் அப்படியே பயனளிக்கும் என்பது என்ன நிச்சயம்?

கோபத்தோடு நீங்கள் என்னைத் திருத்தியதாக எனக்கு நினைவில்லை. என் தவறுகளை அமைதியாய் அருமையாய் விளக்கி உள்ளத்தில் பதித்தீர்கள். உங்கள் கோபத்தினாலா அல்லது என் தவற்றிற்காகவா என்னைக் கண்டிக்கிறீர்கள் என்று நான் குழம்பாமல் பார்த்துக்கொண்டீர்கள். உங்கள் கண்டிப்புகள் தெளிவாயிருந்தன. எனது பழைய தவறுகளைக் கோழி போல கிண்டிக் கிளராமல் ஒவ்வொரு தவற்றையும் கிள்ளி எறியவேண்டிய புதிய வேராகவே கண்டீர்கள். மம்மி, உங்கள் அடிகள் வேம்பாய்க் கசந்தன; வேதத்திற்குக் கீழ்ப்படிந்துதான் அப்படிச் செய்தீர்களென்று நினைக்கிறேன். இன்னும் நினைத்தால் கசக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் அந்த அடி அண்ணன் தம்பிக்கு மேல் உதவியதென்னவோ உண்மைதான்! (எபி 12:11). மன்னிப்புக் கேட்கக் கற்றுக்கொடுத்ததோடல்லாமல் நான் விளைவித்த சேதங்களுக்காய்ப் பொறுப்பெடுக்கவும் பயிற்றுவித்தீர்கள். உங்களிடமிருந்துதான் 'மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று கேட்கக் கற்றுக்கொண்டேன் என்று சொல்லாமல் அடுத்த வரிக்குச் செல்ல மனமில்லை. உங்கள்

வார்த்தைகளை நிறைவேற்றாதபோதோ தவறிழைத்தபோதோ உங்கள் தவற்றை ஒத்துக்கொண்டு மன்னிப்புக் கோரினீர்கள். என் ஏமாற்றத்தையும் வேதனையையும் அது இலகுவாக்கியது. உங்கள் தவறுகளிலிருந்தும் கற்றுக்கொண்டேன். உங்கள் தவறுகளைக் காண அனுமதித்ததற்காய் உங்களை மதிக்கிறேன். தாயும் தந்தையுமாக எனக்கு நல்ல முன்மாதிரிகளாயிருந்தீர்கள். உங்கள் குடும்பப் பொறுப்புகள் தெளிவாகவும் இயல்பாகவும் இருந்தன. மூவரும் ஒன்றாக வளர்ந்தது என்ன ஆனந்தம்! பேனாவைப் பிடிக்கவும், நேர்க்கோடு போடவும், சரியான இடத்தில் குப்பையைக் கொட்டவும், சீப்பிலிருந்து முடியைச் சுத்தம் செய்யவும், விளக்கை வேண்டாதபோது அணைக்கவும், பற்பசையை மூடவும், என் துணிகளை நானே துவைக்கவும் கட்டாயப்படுத்தியது எனக்கும் என்னோடு வாழ்வோருக்கும் வாழ்வைச் சுலபமாக்கியுள்ளது.

பப்பா, எதையும் குற்றமறச் செய்ய விரும்பும் உங்கள் குணத்தை மதிக்கிறேன். ஆனால் நிறைவுக்கு நேரே நடைபோடும் குற்றங் குறையுள்ள நாம் பிறரைக் குற்றங்காணப்போய் சுற்றம் இல்லாமலாகிவிடக்கூடாது என்பதை மறந்துவிடாதீர்கள்.

பப்பா, மம்மி, நீங்களிருவரும் ஒரே தேவனை நேசிக்கிறீர்கள் என்பதைத் தவிர ஏறத்தாழ மற்றெல்லாவற்றிலுமே வேறு பட்டவர்கள் என்பதை அறிவேன். இருப்பினும், என்ன நடக்கிறது என்று புரியாத இளம் வயதில் நானறிய நீங்கள் விவாதிக்கவோ சண்டைபோடவோ இல்லை. என்ன ஆறுதல்! நீங்கள் கோபத்தில் அலறியோ, ஒருவரையொருவர் திட்டியோ, அடிதடியோ நான் கண்டிலேன்.

சாப்பாட்டு மேசையில் நடந்துகொள்ளவேண்டிய விதத்தைக் கற்றுக்கொடுத்தீர்கள். முறுமுறுப்பு கிடையாது. நன்றி உள்ளம் தேவை. மம்மி, பஞ்சத்தால் எலும்பு தெரிய உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த சிறுவன் ஒருவனின் படத்தை மேசைக்கு மேல் சுவற்றில் ஒட்டி வைத்திருந்தீர்கள். ''தரித்திரரை நினைத்துக் கொள்ளுங்கள்'' என்ற வாசகம் கீழே! மறக்க இயலாது. சிறு பாடம், பெறும் மாற்றம். மேசையில் குடும்ப வேளை, அந்த நாளைக் குறித்தும் தமாஷ் துணுக்குகளையும் பகிர்ந்துகொள்ளும் விளையாட்டு வேளையாயிருந்தது. சாப்பாட்டு வேளையில் திருத்தங்கள் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கெடுக்கும் என்று நேரத்தோடு அறிந்துகொண்டு, கண்டிப்பை வேறு வேளைக்கு மாற்றியது அதை இன்னும் அர்த்தமுள்ளதாக்கியது.

எல்லாவற்றிற்கும் சிகரமாக தேவனை நேசிக்கவும், பலவிதங்களில் புதுமையாக அவரை அறிவிக்கவும் கற்றுக்கொடுத்தீர்கள். தேவன் மெய்யாகவே யார் என்பதையும் அவர் என் ஆண்டவராயிருக்க இடமளித்தால் என்னை அவர் என்னவாக்க முடியுமென்பதையும் எனக்குப்

புகட்ட அவரோடுகூட நீங்களிருவரும் அயராது பாடுபட்டீர்கள். பைபிளில் அட்டையிலிருந்து அட்டை வரையுள்ள சரித்திரக் கதைகளை எனக்கு உணவூட்டும்போதே உணர்ச்சியோடு சொன்னது உள்ளத்தில் இன்னும் பசுமையாயுள்ளது. கேட்டுக் கேட்டு வாய்மேல் வாய் உண்டேன். வசனங்களை மனனம் செய்ய மெதுவாகவும் சற்றுக் கடினமாகவும் என்னைத் தள்ளியதற்காக நன்றி நவிலுகிறேன். இவை என்னோடு தங்கி என் வாழ்வை அழகாலும் ஆழத்தாலும் அலங்கரிக்கும். அன்றாடகச் சூழ்நிலைகளுக்கு வசனத்தை இடித்துரைத்தது என்னை நடைமுறைக் கிறிஸ்தவளாக்கிற்று. பொம்மையோ ஒரு வாழைப்பழமோ கேட்டதற்குச் சிலவேளை 'இல்லை' அல்லது 'பொறு' என்ற உங்கள் பதில் எனக்கு அப்போது புரியவில்லை. 'ஏன்?' என்று கேட்கவோ உங்களை எதிர்க்கவோ முடியாத அந்நிலைமை பாகற்காயாய்க் கசந்தது. இன்றோ அதில் மறைந்து கிடந்த பாடம் தெளிவு. அன்று உங்கள் மறுப்பை மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் ஏற்றுக்கொள்ளப் பழக்கியிராவிட்டால் இன்று தேவனிடமிருந்து வரும் 'இல்லை', 'பொறு' எனும் பதில்களை ஏற்றுக்கொள்ள முடியாமல் தவிப்பேன். கீழ்ப்படிதலும் அப்படித்தான் — கேள்வி கேட்காமல், உடனடியாய்க், காலந்தாழ்த்தாமல்!

நீங்கள் எனக்களித்த மற்றொரு ஆசீர்வாதம் எதைக்குறித்தும் சரியான விதத்தில், சரியான சூழ்நிலையில், பேசவோ கேள்வி கேட்கவோ அனுமதித்ததுதான். பாலியல் சம்பந்தப்பட்டவைகளில் நீங்கள் என்னை இருட்டறையில் வைக்கவில்லை. நான் உடலில் அடைந்துகொண்டிருந்த மாற்றங்களைக் கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் புரியும்படி விளக்கினீர்கள். இது எனக்குத் தெளிவு தந்ததோடல்லாது வாலிபர் பலர் விழுந்துவிடும் குழியில் விழாமலும் என்னைக் காத்தது. தவறானவற்றைத் தவறான இடத்திலிருந்து கற்றுக்கொள்வதையும் அது தவிர்த்தது.

''கோபமூட்டாதிருங்கள்'' என்று பவுல் சொல்வது பிள்ளைகளைக் காயப்படுத்தி, மனவேதனைப்படுத்தும் வார்த்தைகளால் துன்புறுத்தி, கவனியாமல், புரிந்துகொள்ளாமல், மிதமிஞ்சி எதிர்பார்த்து, துலங்கினாலொழிய அன்பு காட்ட மறுத்து, பெற்றோரின் லட்சியங்களையும் குறிகளையும் ஏற்றுக்கொள்ள வற்புறுத்தி, தங்கள் தவறுகளை ஒத்துக்கொள்ளாமல் நொந்து போகச் செய்வது என்றே எண்ணுகிறேன் (எபே 6:4). பப்பா, மம்மி, தேவன் எனக்குக் கொடுத்த அளவே நீங்கள் என்னிடம் எதிர்பார்த்தீர்கள். என்னால் முடியாததைச் சாதிக்க என்னை விரட்டவுமில்லை, உங்கள் லட்சியங்களை எனதாக்கிக்கொள்ள நீங்கள் எதிர்பார்க்கவுமில்லை. நான் நானாகவே வளர இடமளித்தீர்கள். உங்

கள் ஆலோசனைகளும், புத்திமதிகளும், திருத்தங்களும் எனது ஆள்தத்துவத்தை வனைந்தன.

என் நண்பர்களைத் தெரிந்தெடுக்கச் சீராய் நடத்தினீர்கள். என் நண்பர்களைக் குறித்து நான் வளவளப்பதற்குக் காதுகொடுத்து எனக்குத் தெரியாமல் அவர்களைக் கவனித்தீர்கள். பிறர் என்னைப் பாதிக்கும்போது எப்படி நடந்துகொள்வதென நேரடியாகவும் மறை முகமாகவும் கற்பித்தீர்கள். எதற்குமே வசனத்தை எடுத்துச் சொன்னதால் திருத்தங்கள் வசன அடிப்படையிலானவைதானே ஒழிய உங்களுடையவைகளல்ல எனப் புரிந்துகொண்டேன். ஆனால் ஒரு காரியம் — என் நண்பர்களை வீட்டிற்கு அழைத்துவரத் தயங்கினேன். அவர்களை நீங்கள் நடத்திய விதம் எனக்குப் பிடிக்கவில்லை. அவர்களது வீட்டில் எனக்குக் கிடைத்த மதிப்பு நம் வீட்டில் அவர்களுக்குக் கிடைக்கவில்லையே எனக் கவலைப்பட்டேன்.

வாலிபப் பருவம் எட்டுமுன்பே சில தீர்மானங்கள் நானே எடுக்க ஊக்குவித்து, நான் தவறிழைத்தாலும் என் பக்கமே நின்று, கேட்காத ஆலோசனையெல்லாம் கொட்டினீர்கள். அவை என் காதில் விழுந்தன, நானும் (உங்களுக்குத் தெரியாமல்) அவைகளைப் பின்பற்றினேன். பணத்தைக் கையாடவும் கற்றுக்கொண்டேன். தவறிழைக்கும்போது குற்றச்சாட்டு பெறாமல் அன்பான அறிவுரை பெற்றது நம்பிக்கையோடு முதிர்ச்சியடைய வழி வகுத்தது.

கழுகு தன் குஞ்சுகளைப் பறக்கத் துரத்தி விடுவதுபோல சரியான நேரத்தில் என் கூட்டைத் திறந்துவிட்டு வாழ்க்கையில் சில முக்கிய தீர்மானங்களை எடுக்கவிட்டது என் சிறகுகளைப் பலப்படுத்தியது. எவ்வளவுக்கெவ்வளவு எனக்குச் சுதந்திரம் அளித்தீர்களோ அவ்வளவுக்கவ்வளவு பிறரைக் குறைவாகவும், தேவனை அதிகமாகவும் சார்ந்துகொள்ளப் பழகினேன். தப்புக் கணக்குப் போட்டுவிடாதீர்கள்! பெரியோரிடமிருந்தும் மற்றவரிடமிருந்தும் தொடர்ந்து ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் பெற்றுக்கொள்வேன்; ஆனால் எனது தீர்மானங்களுக்கு நானே பொறுப்பாளியாவேன். என்னையும் உங்களையும் எதுவும் பிரிக்காது என உறுதியளித்து என்னைப் பறக்க விட்டீர்கள். முக்கியக் காரியங்களுக்கு முதலிடம் அளிக்கவும், யாருடனும் உறவு முறிவு ஏற்படாமல் காக்கவும், உள்ளான மனிதனுக்கு உரமூட்டவும், பாலியல் வாழ்வில் பரிசுத்தத்தைக் காக்கவும், கடன்படாமல் முதலீடு செலுத்தவும், உடல்நலம், சுகாதாரம் மற்றும் ஆகாரத்தில் கவனமாயிருக்கவும், ஞானமாய் நண்பர்களைத் தெரிந்தெடுக்கவும், அதிமுக்கியமாய் வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுக்கும் விதத்தையும் நினைவுபடுத்தினீர்கள்.

பள்ளி நாட்களிலேயே, எதிர்காலத்திற்குள் காலடி எடுத்து வைக்கு முன், கர்த்தருக்குக் காத்திருக்க ஊக்குவித்தீர்கள். உங்களிருவரைப் போல நானும் மிஷனரியாகவேண்டுமென்று என்னை நீங்கள் பல வந்தம் பண்ணவேயில்லை. தேவனை முழுநேரமாய்ச் சேவிக்க நானே தெரிந்து கொண்டேன். கல்லூரி நுழைந்தபோது என் எதிர்கால ஊழி யத்தைக் குறித்து உங்களோடு ஒருமனமாய்க் கலந்தாலோசித்தது எத்தனைச் சிலாக்கியம்! ஆலோசக ஊழியத்திற்காய் தேவன் என்னை அழைக்கிறார் என்ற என் உள்ளுணர்வை உறுதிப்படுத்த எனக்கு வழிநடத்துதல் தேவைப்பட்டபோது நீங்கள் என்னருகே இருந்ததற் காய் நன்றி.

அடுத்த தலைமுறையைப் பயிற்றுவிக்க என்னில் உங்களை அர்ப் பணித்திருக்கிறீர்கள். தேவனுக்கும் மனுக்குலத்திற்கும் ஊழியம் செய்ய அமரிக்கையோடும் நம்பிக்கையோடும் என்னை ஆயத்தப்படுத்தி யிருக்கிறீர்கள். அதுவே பிரதானம் என்பதை உணர்ந்தும் இருக்கிறீர்கள். என் தசை நார்களில் நற்பண்புகளை நெய்து என் அடித்தளத்தில் அர்த்தமுள்ள அச்சடையாளங்களைப் பதித்த உங்களுக்காய்த் தேவ னைத் துதிக்கிறேன்.

இனிய நினைவுகளும், மாற்றங்களும், இருபுறச் சார்பும், கனவுகளும் கலந்தோடும் ஆறு நமது குடும்பம். என் சிறிய நீண்ட கடிதத்தை முடிக்கத் திணறும் இத்தருவாயில் தேவனிடம் நான் ஓடும் படியாய் என்னை நீங்கள் தனியே விட்டுவிட்ட வேளைகளுக்காய் கையெடுத்துக் கும்பிடுகிறேன். என்னை நேசித்தபடியால் என்னைக் கண்டிக்கத் தயங்காமல் நரகாக்கினியினின்று என்னை விலக்கிக் காத்த நீங்கள் நிச்சயமாய்க் கோழைப் பெற்றோர்களல்ல!

நீங்கள் பூரணரல்ல. அது உங்களுக்கே தெரியும். நீங்கள் தவ றிழைக்காதவர்களோ, எப்போதுமே சரியானதைச் செய்பவர்களுமோ அல்ல. ஆனால் என்னைப் பெற்றவர்கள் — என்றுமே நீங்கள் மட்டும் தான்! நான் உங்களுக்குச் சொல்லக்கூடியதெல்லாம் —

பப்பா, மம்மி, ஐ லவ் யூ!

உங்கள் மகள் சத்தியத்தில் நடக்கிறாள் என்ற சந்தோஷத்திற்கு அடுத்தபடியாக நான் உங்களுக்குக் கொடுக்கக்கூடிய பரிசு இதுவே !

உங்கள் ஒரே மகள்,
இவாஞ்சலின்

14

இல்வாழ்வு

(குழு வேத ஆராய்ச்சிக்குக் கேள்விகள்)

ஒவ்வொரு கேள்வி மீதும் கருத்துரையாடுங்கள் :

நியாயாதிபதிகள் 13ஆம் அத்தியாயத்தில் தேவபக்தியான குடும்பம் ஒன்றைக் காண்கிறோம்.

1. அக்குடும்பத்தின் பெரும் பிரச்னையென்ன? (வச 2).
2. அதைக் குறித்து அவர்கள் என்ன செய்தார்களென நினைக்கிறீர்கள்?
3. மனிதர் உதவ முடியாத பிரச்னைகள் குடும்பத்தில் எழும்போது அதைக்குறித்து என்ன செய்கிறோம்?
4. அவர்களது பிரச்னை குறித்து தேவன் கரிசனையுள்ளவரா யிருந்தாரா? (வச 3).
5. அவ்விருவரில் யாரிடம் குறையிருந்தது?
6. அவளது கணவன் அதை எவ்விதம் ஏற்றுக்கொண்டான்?
7. தம்பதியர் ஒருவரில் குறை காணப்படுங்கால் அதை நாம் எவ்விதம் ஏற்றுக்கொள்ளுகிறோம்?

   குழந்தை பாக்கியம் இல்லாதது மனைவி அல்லது கணவனின் குறையாயிருக்கலாம். எப்படியிருப்பினும் மனைவியே மலடி என்ற பெயர் பெறுகிறாள்.

8. குடும்பச் சிக்கல்களுக்கான வாக்குத்தத்தங்கள் சில நினைவிற்கு வருகின்றனவா?

   சாராள்-ஆபிரகாம், ஈசாக்கு-ரெபெக்காள், யாக்கோபு-ராகேல்,

எல்கானா-அன்னாள், சகரியா-எலிசபெத் ஆகியோரின் வாழ்வில் ஏற்பட்ட இவ்விதச் சிக்கலை அவர்கள் எவ்விதம் ஏற்றுக்கொண்டனர் என்பதை ஒப்பிட்டுக் காண்க.

9. இக்குழந்தை கருவில் உருவானபோது இஸ்ரவேலின் நிலை என்ன? (வச 1).

   சிம்சோன் இஸ்ரவேலை மீட்க வேண்டியிருந்தது.

10. இறையரசில் ஒரு குறிப்பிட்ட நோக்கை நிறைவேற்றவே உங்கள் குழந்தை கொடுக்கப்பட்டுள்ளது என நம்புகிறீர்களா?

    ஒவ்வொரு குழந்தையின் உருவாகுதலிலும் தேவன் ஈடுபாடு கொள்ளுகிறார்.

11. தேவதூதன் மனோவாவிற்குத் தரிசனமாகாமல் அவனது மனைவிக்குத் தோன்றியதேன்?

    கணவனை இல்லத் தலைவனாக தேவன் நியமித்திருந்தாலும் கணவனையும் மனைவியையும் சமமாகவே நடத்துகிறார்.

12. தாய் எப்படியிருக்க வேண்டியதாயிருந்தது? (வச 4)

    இஸ்ரவேலில் அனுதினப் பழக்கமான ஒன்றை அவள் தியாகம் செய்ய வேண்டியிருந்தது.

13. நமது ஒவ்வொரு குழந்தைக்காகவும் நாம் நம்மை எவ்விதம் காத்துக் கொள்ள வேண்டும்?

14. குழந்தையை எப்படி வளர்க்க வேண்டியதாயிருந்தது? (வச 5)

15. குட்டி சிம்சோன் தன் நண்பர்களைப்போல சிகை அலங்காரம் செய்துகொள்ளவேண்டுமென்றும் திராட்சரசம் வேண்டுமென்றும் பிடிவாதம் செய்தபோது பெற்றோர் என்ன பதிலளித்திருப்பார்கள் என நினைக்கிறீர்கள்?

    இளம் பிராயத்திலிருந்தே தேவக் கட்டளைகளைக் கற்பித்து வளர்ப்பது பிள்ளை வளர்ப்பைச் சுலபமாக்குகிறது.

16. நம் பிள்ளைகள் தங்களது நண்பர் போக்கில் போக விரும்பும்போது அவர்களை எப்படி நடத்துவது?

17. மனைவி தன் ஆன்மீக அனுபவத்தைக் கணவனிடம் பகிர்ந்து கொள்ளும்போது அவளது மனப்பான்மை என்ன? அகம்பாவம் இருந்ததா? (வச 6).

    பிறக்கப்போகும் குழந்தைக்காய் தகப்பன் ஏறெடுக்க வேண்டிய

ஜெபத்தை கருத்துப்பரிமாறவும். சிம்சோன் இன்னும் உருவாகா மலே இருந்திருக்கலாம்.

ஜெபத்தில் பன்மையைக் கவனிக்க.

18. ஏன் மனோவா தன் மனைவியை அப்படியே நம்பினான்? (வச 8).

19. இன்று மனைவியர் அல்லது கணவர் இத்தனை நம்பத்தக்கவராக இருக்கின்றனரா?

20. தேவ வாக்குகளை எவ்வளவு நம்பிச் செயல்படுகிறீர்கள்?

21. தேவன் மனோவாவின் ஜெபத்தைக் கேட்டாரா? (வச 9).

22. தேவதூதனிடம் ஆலோசனை கேட்பதை விட்டு மனோவாவின் மனைவி ஏன் தன் கணவனைக் கூப்பிட ஓடினாள்?

குடும்பத்தின் எல்லா முக்கிய காரியங்களிலும் தனியே ஈடுபடாமல் கணவனின் அல்லது மனைவியின் ஒத்தாசையை நாடுவது நல்லது.

23. அப்படித் தனியே ஈடுபட்டதால் விளைந்த சில வாழ்க்கைச் சிக்கல்கள் உங்கள் அனுபவத்தில் உண்டா?

பிள்ளை வளர்ப்பில் கணவன் மனைவி இருவரும் ஈடுபாடு கொள்ள வேண்டும்.

24. தேவன் எவ்விதம் மனோவாவிற்குப் பதிலளித்தார் ? (வச 9).

25. அவன் எதிர்பார்த்தது அதுதானா?

26. தேவன் எவ்விதம் ஜெபங்களுக்கு பதிலளிக்கிறார்?

உங்கள் அனுபவங்கள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

27. தேவதூதரை வணங்குவது சரியா? (தேவ தூதுவர்) வெளி 19:10; யாத் 20:4,5; நியா 13:16).

நமது பிள்ளைகளைப் பொருத்தவரை அவரது நாமம் அதிசய மானவர்! (வச 18).

28. இப்படி அவர் தம்மை உங்களுக்கு நிரூபித்திருக்கிறாரா? (வச 19).

29. உங்கள் பிள்ளையின் காரியத்தில் அவர் அதிசயமானவர் என்று விசுவாசிக்க முடியுமா?

30. கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாட்டைத் தவிர்க்க இயலுமா? (வச 22,23).

31. அவற்றை எவ்விதம் தீர்க்கலாம்?

32. உங்கள் பிள்ளைகளை நீங்கள் ஆசீர்வதிக்க முடியுமா? (வச 24).

பிள்ளைகள் தேவ ஆசியைப் பெற நீங்கள் செய்யக்கூடியதென்ன?

அ) தேவ வசனத்தின்படி அவர்களை வளர்ப்பது.

ஆ) தேவ வசனத்தின்படி நம்மைக் காத்துக்கொள்வது.

33. மனோவாவும் அவன் மனைவியும் அப்படிச் செய்தனரா? அப்படியானால் சிம்சோன் கெட்டுப்போனதேன்?

சிம்சோனின் முடிவு

34. பெற்றோரைக் குற்றஞ்சாட்டலாமா?

35. பொறுப்பேற்கும் வயதென்ன? விவாதியுங்கள். 15-20 வயதிற்குள் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கள் ஏற்றிருக்கும் பொறுப்புகளை அவர்கள் ஏற்கும்படிச் செய்யுங்கள்.

36. அதை எவ்விதம் செய்யலாம்?

20 வயதைக் கடந்த பிறகு தேவனுக்கு முன்பாக அவர்களே பொறுப்பாளிகள். அதன் பிறகு அவர்களே தீர்மானிக்க வேண்டிய வர்களாயிருக்கிறார்கள். ஆனால் இறுதியாக சிம்சோன் மனந்திரும்பி தேவன் மேல் நம்பிக்கை வைத்தான். அவனது பெற்றோரின் ஜெபங்கள் கேட்கப்பட்டன. ஆகவே வயதுவந்தபிறகும் உங்கள் பிள்ளைகளுக்காக ஜெபிப்பதில் ஒருபோதும் இளைப்படைய வேண்டாம்.

ஆசிரியரது பிற நூல்கள்—

- *அவள் தீர்மானங்கள்*
- *உலகில் உத்தமி*
- *குதூகலக் கிறிஸ்தவம்*
- *சாத்தானுக்கு டாடா*
- *தெபொராளே, விழித்தெழு!*
- *தேவனே, நான் உமதண்டையில்...*
- *பயனுள்ள பாத்திரம்*
- *பறக்கும் பாவையர்*
- *12 பொன் மாதங்கள்*
- *மண்ணிலே வெண்ணிலா*
- *முன்னேறும் கிறிஸ்தவன்*
- *வயது பதினாறிருக்கும்*
- *வாலிப உலகம்*

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் பல இந்திய மொழிகளிலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet
Chennai 600 002, India
Tel: 044-28450411
<bymliterature@vsnl.net>

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

***எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு
1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத,
ஒரு திருப்பணி***

❑

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❑

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❑

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❑

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம்,
குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், டில்லி, தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள
கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும்
சபைகள் நிறுவுதல்.

❑

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் *"ஆசீர்வாதம்"* எனும் பத்திரிகை, புத்தகங்கள்
மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

❑

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல்
மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
8 சர்ச் காலனி, வேலூர் 632 006
தொலைபேசி: 0416-2242943, 2248943**
<bym@sancharnet.in>
www.BlessingYouthMission.org

திருமணமெனும் சுந்தர மனக்கோட்டையில்தான் குடும்ப வாழ்வு துவங்குகிறது. ஆறு மாதம் அல்லது ஒரு வருடமாக அவனும் அவளும் சேர்ந்து அம் மாளிகையைக் கட்டி எழுப்புகின்றனர். தங்கள் மாளி கையை முடித்துத் தளவரிசையும் போட்டு முடிக் கின்றனர். தங்கள் கனவை எட்டி விட்டனர்.

இப்போதுதான் ஏதோ ஒன்று நடக்கிறது. பல காரி யங்கள் நடக்கின்றன. உங்கள் வாழ்விலும் நடந்துள் ளன. அப்படி என்னதான் நடந்துவிட்டது? என்ன நடந்ததென்றறிய இப்புத்தகம் உங்கள் கண்களைத் திறப்பதுடன் உங்கள் சுந்தரக் கோட்டையில் வாழ்வை அனுபவிக்க உங்களைக் கரம் பிடித்து நடத்தும். வாசியுங்கள்!

இப்புத்தக ஆசிரியர் ஒரு குழந்தைநல மருத்துவர். இவரும் பொறியியலரான இவர் கணவரும் 1975இலிருந்து முழுநேரக் கிறிஸ்தவ சேவையில் ஈடுபட்டுள்ளனர். இருவரும் பேச்சாளர் களாக, எழுத்தாளர்களாக, மிஷனரிகளாக ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் உள்ளனர்.